அத்தியாயம் II

ஷீஆயிஸத்தின் உட் பிரிவுகள்

ஒவ்வொரு மதமும் குறிப்பிட்ட சில அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டுள்ளது. இக்கொள்கைகள் அதன் அத்தியாவசிய அடிப்படையாய் அமைகின்றன. ஏனைய கொள்கைகள் இரண்டாம் பட்ச முக்கியத்துவம் பெறுவன, ஒரு மதத்தைப் பின்பற்றுகிறவர்கள் அடிப்படைக் கொள்கைகளின் தன்மை குறித்தும் இரண்டாம் பட்ச அம்சங்கள் குறித்தும் கருத்து வேறுபாடுகொண்டு அதே வேளை ஒரு பொது அடிப்படையைப் பேணுகையில் அம்மதத்தினுள் பிரிவுகள் (இன்ஷி ஆப்) தோன்றுகின்றன. பாரம்பரிய மதங்கள் யாவிலும், குறிப்பாக தெய்வீக வெளிப்பாடு [1] யூதம், கிறிஸ்தவம், ஸொராஸ்திரியம், இஸ்லாம் ஆகிய மதங்களில் இப்பிரிவுகள் காணப்படுகின்றன.

அலீ, ஹஸன், ஹுஸைன் ஆகிய மூன்று இமாம்களின் காலங்களில் ஷீஆயிஸத்துள் பிரிவுகள் ஏற்படவில்லை. ஆனால் இமாம் ஹுஸைனின் உயிர்த்தியாகத்துக்குப்பின் ஷீஆக்களில் பெரும்பான்மையினர் அலீ இப்னு ஹுஸைன் அல்-ஸஜ்ஜாத்துடைய இமாமத்தை யேற்றுக் கொண்ட அதவேளை கிஸானிய்யாஹ் என்று அறியவரப்பட்ட ஒரு சிறுபான்மையினர் அலீயின் மூன்ருவது புதல்வரான முஹம்மத் இப்னு ஹனஃபிய்யாவை நான்காவது இமாம் என்றும் வாக்களிப்பட்ட மஹ்தி அவரேயென்றும் ரத்வா மலையில் [2] அவர் மறைந்து விட்டாரென்றும் ஒரு நாள் மீண்டும் தோன்றுவார் என்றும் நம்பினர். இமாம் ஸஜ்ஜாதின் மறைவுக்குப்பின் ஷீஆப் பெரும்பான்மையினர் அவரது புதல்வர் முஹம்மத் அல் பாக்கிரை இமாமாக ஏற்றுக் கொண்ட அதே வேளை இமாம் அல்-ஸஜ்ஜாதின் இன்னொரு புதல்வரான ஸைத் அல்-ஷஹீதைப்பின்

பற்றிய சிறுபான்மையினர் ஸைதியாக்கள் என அறியவரப்பட்டனர். இமாம் முஹம்மத் அல்- பாக்கிரைத் தொடர்ந்து ஷீஆக்கள் அவரது புதல்வர் ஜாபர் அல்-ஸாதிக்கை இமாமாக ஏற்றுக்கொண்டனர். இமாம் ஜாபரின் மறைவுக்குப் பின் பெரும்பான்மையினர் அவரது புதல்வர் இமாம் மூஸா அல்-காஸிமைப்பின்பற்றினர். எனினும் ஒரு கூட்டத்தார் ஆறாம் இமாமின் மூத்த புதல்வர் இஸ்மாயிலைப் பின்பற்றத் தொடங்கினர். தந்தையார் உயிருடனிருக்கும் போதே காலமானவர் இஸ்மாயில்; இவரைப் பின்பற்றிய கூட்டத்தார் பெரும்பான்மை ஷீஆக்களிடமிருந்து பிரிந்ததும் இஸ்மாயிலிகள் எனப்பட்டனர். ஏனையோர் ஆறாவது இமாமின் ஒரு புதல்வரான அப்துல்லாஹ் அல்-அ∴ப்தாவையோ அல்லது மற்றொரு புதல்வரான முஹம்மதையோ இமாமாக ஏற்றுக் கொண்டனர். இறுதியாக இன்னொரு கோஷ்டி ஆறாம் இமாமைக் கடைசி இமாமாகக் கருதி அவருடன் நிறுத்திக் கொண்டனர். அதே போன்று இமாம் மூஸா அல்-காஸிமின் உயிர்த் தியாகத்துக்குப் பின் பெரும்பான்மையினர் அவரது புதல்வர் அலி அல்-ரிதாவை எட்டாவது இமாமாகப் பின்பற்றினர். எனினும் ஒருசிலர் ஏழரவது இமாமுடன் நிறுத்திக் கொண்டனர். இவர்கள் வாகி∴பிய்யாஹ் எனப் பட்டனர். [3]

எட்டாவது இமாமிலிருந்து வாக்களிக்கப்பட்ட மஹ்தியெனப் பெரும்பான்மை ஷீஆக்களால் நம்பப்படும் பன்னிரண்டாவது இமாம்வரை எத்தகைய முக்கியமான பிரிவும் ஷீஆயிஸத்தில் ஏற்படவில்லை. பிரிவு என்ற வடிவில் சில சம்பவங்கள் நிகழ்ந்தபோதிலும் ஒரு சில நாட்களில் அவை தாமாகவே மறைந்தன. உதாரணமாக, பத்தாவது இமாமின் புதல்வர் ஜா∴பர் தம்சகோதரரான பதினோராவது இமாமின் மறைவுக்குபின் தாமே இமாமென உரிமை கொண்டாடினார். ஒரு கோஷ்டியினர் அவரைப் பின்பற்றிய போதிலும் சில நாட்களில் அவர்கள் சிதறிப் போயினர். அதன் பின் ஜா∴பரும் இமாமென உரிமை கோருவதை விட்டுவிட்டார். மேலும் ஷீஆக்கள் மத்தியில் இறையியல், சட்டவியல் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் ஷீஆக்களுக்குள் வித்தியாசங்கள்

காணப்பட்டபோதிலும் இவை மதப்பிரிவுகளில் உண்டான வித்தியாசங்களாகக் கருதப்படக்கூடாது. இன்னும் பாபி பஹாய் பிரிவுகள் பாத்தினி (கராமித்தாஹ்) களைப்போன்று இஸ்லாத்தின்அடிப்படை (உஸூல்), கிளைகள் (ஃபுரூ) ஆகிய இரண்டிலும் வேறுபடுவதனால் அவை எத்தகைய அர்த்தத்திலும் ஷீஆயிஸத்தின் கிளைகளாகக் கருதப் படல் கூடாது.

இன்று காணப்படும் ஸைதி; இஸ்மாயிலி ஆகிய இரண்டையும் தவிர பெரும்பான்மை ஷீஆக்களிடமிருந்து பிரிந்த மற்றைய பிரிவுகள்யாவும் குறுகிய காலத்தினுள் மறைந்துவிட்டன. இவ்விரு கிளைகளையும் சேர்ந்த சமூகத்தவர்கள் யெமன், இந்தியா, ஸிரியா போன்ற உலகின் பல்வேறு பகுதிகளில் இன்று செயலூக்கத்துடன் காணப்படுகின்றனர். எனவே பன்னிரண்டு இமாம்களை நம்பும் பெரும் பான்மை ஷீஆக்களுடன் இவ்விரு கிளைகளைப் பற்றி மட்டும் எமது விசாரணைக்கு எல்லை வகுத்துக் கொள்வோம்.

ஸைதி பிரிவும் அதன் கிளைகளும்

ஸைதிகள் இமாம் அல்-ஸஜ்ஜாதின் புதல்வரான ஸைத் அல்-ஷஹீதைப் பின்பற்றுவோராவர். உமையாக் கலிபா ஷாம் அப்துல் மாலிக்குக்கு எதிராக 121/737ல் ஸைத் கலகஞ்செய்தார். ஒரு கூட்டத்தார் ஸைதுக்கு விசுவாசப் பிரமாணம் செய்தனர். கலீபாவின் ராணுவத்துக்கும் ஸைதுக்கு மிடையே கூஃபாவில் போர் மூண்டது, இப்போரில் ஸைத் கொல்லப்பட்டார்.

ஸைதைப் பின்பற்றியோர் அவரை நபிக்குடும்பத்தைச் சேர்ந்த ஐந்தாவது இமாமாகக் கருதினர். அவருக்குப்பின், கலீபா வலீத் இப்னு யஸீதுக் கெதிராகக் கிளர்ச்சி செய்த ஸைதின் புதல்வர் யஹ்யா தந்தையின் இடத்தைப் பெற்றார். இக்கிளர்ச்சியின் போது அவரும் கொல்லப்பட்டார். யஹ்யாவுக்குப்பின், அப்பாஸியக் கலீபா மன்சூர் அல்-தவானிக்கிக்கு எதிராகக் கிளர்ச்சி செய்த முஹம்மத் இப்னு அல்துல்லாஹ்வும், இப்ரூஹீம் இப்னு அப்துல்லாஹ்வும் இமாம்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அப்போதிலிருந்து ஸைதி பிரிவில் சிறிது காலம் குழப்பநிலை காணப்பட்டது . ஸைதின் சகோதரரது சந்ததியினரான நாஸித் அல்- உத்ரூஸ் குராஸானில் தோன்றினார். அப்பகுதி அரசாங்க அதிகாரிகளால் தேடப்பட்ட போது மஸந்தரானுக்கு (தபாரிஸ்தான்)த் தப்பியோடினார். அப்போது மஸந்தரான் மக்கள் இஸ்லாத்தை ஏற்றிருக்கவில்லை. இப்பிராந்தியத்தில் பதின்மூன்ருண்டுகள் மதப்பணியாற்றி பெருந்தொகையான மக்களை இஸ்லாத்தின் ஸைதிக் கிளையில் சேர்த்தார். பின்னர் 301/913ம் ஆண்டில் இவர்களின் உதவியோடு மஸந்தரான் பகுதியைக் கைப்பற்றி தாமே இமாமானார். சிறிது காலம் இவரது வழித்தோன்றல்கள் அப்பகுதியில் தொடர்ந்து இமாமாக விருந்தனர்.

ஸைதிகளுடைய நம்பிக்கையின்படி சத்தியப் போராட்டத்திலிறங்கும் ஃபாத்திமா (திருநபியின் புதல்வியர்) வின் வழித்தோன்றல் எவரும் மத அறிவு நிரம்பியவராகவும், ஒழுக்க சீலராகவும், துணிவு கொண்டவராகவும், தாராள மனத்தினராகவும் காணப்பட்டால், அவர் இமாமாகலாம். எனினும் உத்ரூஸுக்கும் அவரது சந்தயினருக்கும் பின் எந்த இமாமினாலும் சமீபகாலம் வரை வாளேந்திப் புரட்சியொன்றைக் கொணர முடியவில்லை. ஆனால் சமீபத்தில் சுமார் அறுபதாண்டுகளுக்கு முன் இமாம் யஹ்யாஹ், உஸ்மானியா சாம்ராஜ்யத்தின் ஒருபகுதியாயிருந்த யேமனில் புரட்சி செய்து அந்நாடு விடுதலை பெறச் செய்து அங்கிருந்து இமாமாக ஆட்சிபுரிந்தார். மிகச் சமீப காலம்வரை அவரது சந்ததியினர் அப்பிராந்தியத்தில் தொடர்ந்து ஆட்சி புரிந்துவந்தனர்.

தொடக்கத்தில் ஸைதைப்போல் ஸைதிகளும் முதல் இரண்டு கலீபாக்களான அபூபக்கரையும், உமரையும் தங்கள் இமாமாகக் கருதினர். ஆனால் சில காலத்தின் பின் அவர்களில் சிலர் முதலிரண்டு கலீபாக்களின் பெயர்களையும் நீக்கிவிட்டு அலிக்கு முதல் இமாம் என்ற ஸ்தானத்தை வழங்கினர்.

ஸைதிகளின் நம்பிக்கைகள் என்று அறியவரப்பட்டுள்ள வைகளின்படி இஸ்லாமிய அப்படைவிதி (உஸுல்) களில்

அவர்கள் மு.ஃதஸ்ஸிலாக்களுக்கு நெருங்கிய வழியைப்பின்பற்றுகின்றனர் எனலாம். அதேவேளை சட்டக்கலை (ஃபுரூ) சம்பந்தப்பட்ட கிளைகளில் அவர்கள் நான்கு ஸுன்னிமத்ஹபுகளில் ஒன்றின் ஸ்தாபகரான அபூஹனிபாவின் சட்டங்களைக் கடைப்பிடிக்கின்றனர். சில பிரச்சினைகளையிட்டு அவர்களுக்குள் அபிப்பிராயபேதங்கள் காணப்படுகின்றன.[4]

இஸ்மாயிலிய்யாவும் அதன் கிளைகளும்

இமாம் ஜாஃபர் ஸாதிக்கின் பிள்ளைகளில் மூத்தவர் இஸ்மாயில் என்ற பெயருடைய அவரது புதல்வராவார். தந்தை உயிரோடு இருக்கும் போதே இஸ்மாயில் காலமானார். அவரது மரணத்தை மதீனாவின் கவர்னர் உட்பட சாட்சிகள் மூலம் தந்தையார் உறுதிப்படுத்தியுள்ளார்[5]. இவ்விவகாரத்தில் ஒருசிலர் இமாம் இறக்கவில்லையென்றும் அவர் மறைவாகி விட்டாரென்றும் மீண்டும் வருவார் என்றும் வாக்களிக்கப்பட்ட மஹ்தி அவராகவே இருப்பார் என்றும் நம்பினர். அப்பாஸியக் கலீபா அல்-மன்சூருக்குப் பயந்து உண்மையை மறைக்கும் நோக்கத்துடனே இஸ்மாயிலின் மரணத்துக்கு இமாம் சாட்சிகளைக் காட்டினார் என அவர்கள் மேலும் நம்பினர். உண்மையான இமாம் இஸ்மாயில் என்றும் அவரது மரணத்தின் மூலம் இமாமத் அவர் புதல்வர் முஹம்மதுக்கு வழங்கப்பட்டதென அர்த்தமாகின்ற தென்றும் இன்னுஞ் சிலர் நம்பினர். தந்தையின் வாழ்நாளிலேயே இஸ்மாயில் காலமானபோதும் அவரே இமாமென்றும் அவருக்குப்பின் இமாமத் முஹம்மத் இப்னு இஸ்மாயிலுக்கும் அவரது சந்ததியினர்க்கும் சென்றதென்றும் மூன்ருவது கோஷ்டியொன்று கூறிற்று. முதலிரண்டு கோஷ்டிகளும் மறைந்துவிட மூன்ருவது பிரிவு இன்றும் காணப்படுவதோடு அதனுள்ளும் சில பிரிவுகள் தோன்றியுள்ளன.

பல வகைகளில் ஸாபியீன்களுடையதும் (நட்சத்திர வணங்கிகள்)[6] ஹிந்து மறையியல் கலந்ததுமான ஒருவகை மெய்யியலை அவர்கள் கொண்டுள்ளனர். இஸ்லாமிய

அறிவையும் சட்டங்களையும் பொருத்தவரை ஒவ்வொரு புறவய யதார்த்தத்துக்கும் (ஸாஹிர்) அகவய அம்சம் (பாத்தின்) ஒன்று உண்டென்றும் வேதவெளிப் பாட்டின் ஒவ்வொரு அம்சத்துக்கும் (தன்ஸீல்) அர்த்த விற்பத்தியான அந்தரங்க விளக்கம் (த∴வீல்)[7] உண்டு என்றும் அவர்கள் நம்புகின்றனர்.

அல்லாஹ்வின் அத்தாட்சி (ஹுஜ்ஜாஹ்) இன்றிப் பூமி இருக்கமுடியாது என்று இஸ்மாயிலீக்கள் நம்புகின்றனர். அந்த அத்தாட்சி இருவகைப்படும்; ''பேசுபவர்'' (நாதிக்), ''மௌனமானவர்'' (ஸாமித்) பேசுவர் நபியாவார். மௌனமானவர் ஓர் இமாம் அல்லது பாதுகாவலர் (வலி) ஆவார்; இவர் நபியின் ஸாஸனத்தை (வஸி) உரிமைவழியாயனுபவிப்பவர் அல்லது அதனை நிறைவேற்றுபவராவார்.

அல்லாஹ்வின் அத்தாட்சி என்ற கொள்கை, இடையறாமல் ஏழு என்ற இலக்கத்தைச் சுற்றிச் சுழல்கிறது. இறைவனால் அனுப்பப்பட்ட நபி ஷரிஅத் அல்லது புனிதச் சட்டத்தைக் கொணரும் நபித்துவப் பணியைக் கொண்டவர். இறைவனின் பூரண வெளிப்பாடாகிய நபி மனிதர்களுக்கு தெய்வ இரகசியங்களில் (வலாயத்)[8] பயிற்சியளிக்கக் கூடிய அந்தரங்க சக்தி பெற்றவர். அவருக்குப் பின் அவரது சாஸனத்தை (வலாயத்) நிறைவேற்றக் கூடிய அதிகாரம் படைத்த சாஸன நிறைவேற்றுனர்கள் (வஸீ) எழுவர் உண்டு. தெய்வ இரகசியங்களில் அந்தரங்கப் பயிற்சியளிக்கும் (வலாயத்) அதிகாரமும் இவர்களுக்குண்டு. இத்தொடரில் ஏழாவதாகவருபவர் இவ்விரு அதிகாரங்களுடன் சேர்ந்து மேலதிகமாக நபித்துவ அதிகாரமும் (நுபுவ்வத்) கொண்டவர். இந்த ஏழு நிறைவேற்றுநர் (வஸி) களின் வட்டம் ஏழாவதான ஒரு நபியிலிருந்து மீண்டும் அவ்வாறே நிகழ்கின்றது.

ஆதம் நபித்துவ அதிகாரத்தோடும், அந்தரங்க வழிகாட்டும் அதிகாரத்தோடும் அனுப்பப்பட்ட நபியென்றும் அவர் ஏழு நிறைவேற்றுநர்களைக் கொண்டிருந்தாரென்றும் ஏழாமவர் நூஹ் என்றும் அவர் நுபுவ்வத், வஸாயத், வலாயத் ஆகிய

மூன்று செயற்பாடுகளும் கொண்டிருந்தார் என்றும் இஸ்மாயிலிகள் கூறுகின்றனர். நூஹிலிருந்து ஏழாமவர் இப்ராஹிம் என்றும், இப்ராஹிமிலிருந்து ஏழாமவர் மூஸாவென்றும், மூஸாவிலிருந்து ஏழாமவர் ஈஸாவென்றும், ஈஸாவிலிருந்து ஏழாமவர் முஹம்மத் என்றும் முஹம்மதுடைய ஏழாம் நிறைவேற்றுநர் முஹம்மத் இப்னு இஸ்மாயில் என்கின்றனர்.

திருநபியின் வஸிகளாக அலீ, ஹுஸைன் இப்னு அலீ (இமாம் ஹஸனை அவர்கள் இமாம்களில் ஒருவராகக் கருதுவதில்லை). அலீ இப்னு ஹுஸைன் அல்-ஸஜ்ஜதாத், முஹம்மத் அல்-பாக்கிர், ஜா∴பர் அல்-ஸாதிக், இஸ்மாயில் இப்னு ஜா∴பர். முஹம்மத் இப்னு ஜா∴பர் ஆகியோரை அவர்கள் கருதுகின்றனர். இவர்களுக்குப் பின், முஹம்மத் இப்னு இஸ்மாயிலின் ஏழு வழித்தோன்றல்கள் உண்டென்றும் அவர்கள் பெயர்கள் மறைக்கப்பட்டு இரகசியமாயுள்ளன என்றும் கூறுகின்றனர். அவர்களுக்குப்பின் எகிப்தின் ∴பாத்திமி ஆட்சியாளர் ஏழுபேர். அவர்களுள் முதலாமவர் ∴பாத்திமி ஆட்சிப் பரம்பரையின் ஸ்தாபகரான உபைதுல்லாஹ் அல்- மஹ்தி. அல்லாஹ்வின் அத்தாட்சியுடன் சேர்ந்து அத்தாட்சியின் தோழர்களும் பின்பற்றுவோர்களுமான பன்னிரண்டு ''பிரதானிகள்'' (நாக்கிப்) எப்பொழுதும் பூமியில் உள்ளார்களென்றும் இஸ்மாயிலிகள் நம்புகின்றனர். என்றபோதிலும் பாத்தினி கிளைகளைச் சேர்ந்த துரூஸ்களைபோன்ற சிலர் ''பிரதானிகளில்'' அறுவர் இமாம்கள் எனவும் அறுவர் ஏனையோர் எனவும் நம்புகின்றனர்.

பாத்தினிகள்

வட ஆபிரிக்காவில் உபைதுல்லாஹ் அல்-மஹ்தி தோன்றுவதற்குச் சில வருடங்களுக்கு முன் 278/891ம் ஆண்டு கூ∴பாவில் குஸிஸ்தானிலிருந்து பாரஸீகத்தின் தென் பகுதியில் தன்னுடைய பெயரையோ அடையாளத்தையோ காட்டிக்கொள்ளாத ஒருவர் தோன்றினார். அவர் பகல் வேளையில் நோன்பு நோற்றார். இரவில் வணக்கங்களில் ஈடுபட்டார். சுய உழைப்பினால் ஜீவனோபாயம் நடத்தினார்.

அத்தோடு அவர் இஸ்மாயிலிய இலட்சியப் பணிக்காக மக்களுக்கு அழைப்பு விடுத்தார். பெருந்தொகையான மக்களை அவரால் தன்பால் ஈர்க்க முடிந்தது. அவர்களிலிருந்து அவர் பன்னிரண்டு ''பிரதானி'' (நாக்கிப்) களைத் தெரிவு செய்து கொண்டு டமாஸ்கஸுக்குப் புறப்பட்டார். கூஃபாவை விட்டு சென்ற பின் அவரைப் பற்றியச் தகவலே இல்லை.

இந்த அநாம தேய மனிதரின் இடத்தை அஹ்மத் என்பவர் பெற்ருர். கராமைத் என அறிய வரப்பட்டுள்ள இவர் ஈராக்கில் தனது பாத்தினி பிரச்சாரத்தைத் தொடங்கினார். வரலாற்றாசிரியர்கள் பதிவு செய்துள்ளது போன்று இஸ்லாத்தில் ஐங்காலத்தொழுகைக்குப் பதிலாக இரு நேரத் தொழகையைப் புகுத்தினார். சம்போகத்தின் பின் வுளுச் செய்யும் அவசியத்தை நீக்கினார். மதுபாவனையை அனுமதித்தார். இச்சம்பவங்கள் நிகழ்ந்து கொண்டிருந்த வேளை, மற்றும் பாத்தினி தலைவர்களும் தோன்றி பாத்தினி பிரிவின் பால் மக்களுக்கு அழைப்பு விடுத்தனர். அவர்களைப் பின்பற்றும் கூட்டத்தினரை உருவாக்கினர்.

பாத்தினிகள் தங்களது பிரிவைச் சாராதவர்களது உயிர்களுக்கோ உடமைகளுக்கோ மதிப்புக் கொடுக்கவில்லை. இதனால் ஈராக், பஹ்ரெய்ன், யெமன், ஸிரியா முதலிய வற்றின் நகரங்களில் கிளர்ச்சிசெய்து மக்களின் உதிரத்தைச் சிந்தியது மட்டுமன்றி அவர்களின் உடமைகளையும் கொள்ளையடித்தனர். பலமுறை மக்காவுக்கு யாத்திரைசெய்யும் பயணக்கூட்டங்களை வழிமறித்து, பல்லாயிரக்கணக்கான யாத்திரிகர்களைக் கொன்று குவித்ததோடுஅவர்களின் பொருட்களையும், ஒட்டகைகளையும் கொள்ளையடித்தனர்.

கராமைத் தலைவர்களில் ஒருவரான அபூ தாஹிர் அல்-கர்மாத்தி 311ல்/923ல் பஸ்ராவைக் கைப்பற்றியதும் கொலையையும், கொள்ளையையும் விட்டுவைக்கவில்லை. பெருந் தொகையினரான பாத்தினிகளுடன் அவர் மக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றார். அங்கிருந்த மக்கள் தொகையினரையும், புதிதாக வந்திருந்த யாத்திரிகர்களையும் கொன்று குவித்தார்.

மஸ்ஜிதல் ஹரமிலும் (க.ஃபா அடங்கியுள்ள பள்ளிவாசல்) புனித க.ஃபாவினுள்ளும் கூட இரத்த ஆறு பெருக்கெடுக்கச் செய்தார். க.ஃபாவின் திரையைத் தனது சிஷ்யர்களுடன் பங்கிட்டுக் கொண்டார். க.ஃபாவின் கதவைப் பெயர்த்துத்தள்ளி கறுப்புக்கல்லை யெமனுக்கு எடுத்துச் சென்றார். இருபத்திரண்டாண்டுகள் கறுப்புக்கல் கராமைத்களின் கைகளிலிருந்தது. இதன்விளைவாகப் பெரும்பான்மையான முஸ்லிம்கள் பாத்தினிகளிடமிருந்து முற்றாக விலகிச் சென்றதுடன் அவர்களை இஸ்லாத்துக்கு வெளியே உள்ளவர்களாகவே கருதினர். வட ஆபிரிக்காவில் அந்நாட்களில் தோன்றி தன்னை வாக்களிக்கப்பட்ட மஹ்தியாகக் கருதிக்கொண்ட ஃபாத்திமி ஆட்சியாளரான உபைதுல்லாஹ் அல் மஹ்தி கூட அவர்களை வெறுத்தார்.

வரலாற்றாசிரியர்களின் கண்ணோட்டப்படி, பாத்தினிப் பிரிவின் தனித்த குணநலன் இஸ்லாத்தின் புற அம்சங்களை அந்தரங்கமான முறையில் அர்த்தப்படுத்தியதும், ஷரீஅத் சட்டம் என்பது ஆன்மீகப் பூரணத்துவம் மறுக்கப்பட்ட அற்ப அறிவு படைத்த சாதாரண மனங்கொண்ட மக்களுக்கு மட்டுமே எனக்கருதியதுமாகும். என்ற போதிலும் சில சட்டங்களையும், விதிமுறைகளையும் பின்பற்றுமாறு பாத்தினி இமாம்கள் அப்போதைக்கப்போது ஆணை பிறப்பித்தனர்.

நிஸாரிகள், முஸ்தாலிகள், துரூஸ்கள், முக்கன்னாஹ்கள்

நிஸாரிகள்: 292ல்/904ல் வட ஆபிரிக்காவில் தோன்றி, ஒரு இஸ்மாயிலியாகத் தமது இமாமத்தைப் பிரகடனஞ் செய்து ஃபாத்திமி ஆட்சியை நிறுவிய உபைதுல்லாஹ் அல் மஹ்தியின் சந்ததியினர் கெய்ரோவைத் தமது கிலாபத்தின் நடுநிலையமாக்கினர். இந்த அரசும் (ஸுல்தானத்) இமாமத்தும் எத்தகைய பிரிவுமின்றி ஏழு தலை முறைகளாகத் தொடர்ந்தது. ஏழாவது இமாம் அல்-முஸ்தன்ஸிர் பில்லாஹ் முயீத் இப்னு அலீயின் மறைவுக்குப்பின் அவரது புதல்வர்களான நிஸாருக்கும் அல்-முஸ்தாலிக்குமிடையே இமாமத்துக்கும் கிலாபத்துக்குமான தகராறு எழுந்தது - நீண்ட தகராறுகளுக்கும், கடுங் சண்டைக்கும்

பின் அல்-முஸ்தாலி வெற்றியீட்டித் தன் சகோதர் நிஸாரைச் சிறையிலிட, நிஸாரி சிறையில் மரணமானார்.

பாத்திமிகள், இத்தகராறுகளின் விளைவாக நிஸாரிகள் எனவும், முஸ்தாலிகள் எனவும் இருபிரிவுகளாயினர். அல்-முஸ்தன்ஸிரின் நெருங்கிய தோழர்களில் ஒருவரான ஹஸன் அல்-ஸப்பாஹ்வைப் பின்பற்றியோர் நிஸாரிகள் எனப்படுவர். நிஸாரை ஆதரித்தமைக்காக ஹஸன் அல்-ஸப்பாஹ் எகிப்திலிருந்து அல்- முஸ்தாலியால் வெளியேற்றப்பட்டார். அல்-ஸப்பாஹ் பாரசீகத்தையடைந்து, சிறிது காலத்துக்கு பின் கஸ்வினுக்கருகே அலாமுத் கோட்டையில் தெரிபடலானார். அவர் அலாமுத்தையும், சுற்றிலுமிருந்த அநேக கோட்டைகளையும் கைப்பற்றி அங்கு தனது ஆட்சியை நிறுவி இஸ்மாயீலி பிரிவின்பால் மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

518ல்/1124ல் ஹஸன் அல்-ஸப்பாஹ் காலமானதும் புஸுர்கு உமித் ருத் பாரியும் அவரின் பின் அவரது புதல்வர் கியா முஹம்மதும் ஸப்பாஹ்வின் வழியைப்பின்பற்றி-தொடர்ந்து ஆட்சிபுரிந்தனர். கியா முஹம்மதின் மறைவுக்குப் பின் அலாமுத் கோட்டையின் நாலாவது ஆட்சியாளராய்ப் பதவிக்கு வந்த அவர் புதல்வர் ஹஸன் அலா-திக்றிஹில் சலாம் என்பவர் அல்-ஸப்பாஹ்வின் வழியை விட்டு, நிஸாரியான அவர் ஒரு பாத்தினியா மாறினார் இஸ்மாயிலி கோட்டைகளில் பாத்தினி அதிகாரம் தொடர்ந்து ஓங்கியது;. மங்கோலிய படையெடுப்பாளன் ஹலாகூ பாரசீகத்தை முற்றுகையிடும்வரை- முஹம்மத் இப்னு அலா-திக்றிஹில் சலாம், ஜலால் அல்-தீன் ஹஸன், அஃலா அல்-தீன், ருக்ன் அல்-தீன் ருர்ஷாஹ் ஆகிய - நால்வர் அடுத்தடுத்து ஆட்சி புரிந்தனர் ஹலாகூ இஸ்மாயிலி கோட்டைகளை கைப்பற்றி அவற்றைத் தரைமட்டமாக்கியதோடு இஸ்மாயீலிகளையும் கொன்று குவித்தான் .

நூற்றாண்டுகளுக்குப்பின், பாரசீகத்தில் மஹலத் என்ற இடத்தைச் சேர்ந்த ஆகாகான் 1255ல்/1839ல் முஹம்மத் ஷாஹ்

காஜாருக் கெதிராகக் கிளர்ச்சி செய்து படுதோல்வியுற்று பம்பாய்க்கு ஓடினார். நிஸாரி பிரிவைச் சேர்ந்த ஆகாகான் பம்பாயில் பாத்தினி-நிஸாரி பிரிவைப் பிரச்சாரஞ் செய்தார். இன்றும் இப்பிரிவு அங்கு காணப்படுகிறது. நிஸாரிகள் இன்று ஆகாகானிகள் எனப்படுகின்றனர்.

முஸ்தாலிகள்: அல்-முஸ்தாலியைப் பின்பற்றியோர் முஸ்தாலிகள் எனப்பட்டனர். 567ம்/1171ம் ஆண்டு ஒரு முடிவுக்குக் கொணரப்படும் வரை, எகிப்தில் ∴பாத்திமி ஆட்சியின் போது அவர்களது இமாமத் தொடர்ந்தது இதே கொள்கையை பின்பற்றும் போராக்கள் எனப்படுபவர் இந்தியாவில் இன்றும் வாழ்கின்றனர்.

துரூஸ்கள்: ஸிரியாவின் துரூஸ் மலையிலும் (லெபனானிலும்) வாழும் துரூஸ்கள் பூர்வீகத்தில் ∴பாத்திமி கலீபாக்களைப் பின்பற்றியோராவர், ஆனால் நஷ்தாகின் என்பவரின் மதப்பிரச்சாரப் பணி காரணமாக, துரூஸ்கள் பாத்தினிப் பிரிவில் சேர்ந்தனர். துரூஸ்கள் ஆறாவது ∴பாத்திமி கலீபா அல்-ஹக்கீம் பில்லாஹ்வுடன் நிறுத்திக் கொள்கின்றனர். அவர் வெளிப்படாது மறைவாகிவிட்டதாக நம்புகின்றனர். பிறர் அவர் கொல்லப்பட்டதாக் கருதுகின்றனர். அவர் விண்ணுலகு சென்றுள்ளார், மீண்டும் வருவார் என்பது துரூஸ்களின் நம்பிக்கை.

முக்கன்னாஹ்: முக்கன்னாஹ்கள் முதலில், முக்கன்னாஹ் என அறியவரப்பட்ட, அத்தா அல்-மர்வியைப் பின்பற்றுவோராயிருந்தனர். இவர் குராஸானைச் சேர்ந்த அபூ முஸ்லிமைப் பின்பற்றியவர் என வரலாற்று ஆதாரங்கள் கூறுகின்றன. அபூமுஸ்லிம் காலமானதும் அவரது ஆவி தம்முன் கூடுபுகுந்து மறு பிறவியெடுத்துள்ளதாக முக்கன்னாஹ் கூறிக்கொண்டார். சீக்கிரமே தான் ஒரு நபியெனவும், அதன் பின்னர் தான் தெய்வத்தன்மை படைத்தவர் எனவும் உரிமை பாராட்டத்தொடங்கினார். இறுதியாக 162ம்/777ம் ஆண்டு திரான்ஸ் ஒக்ஸியானாவில் கபாஷ் கோட்டையில் அவர் சுற்றி வளைத்துக் கொள்ளப்பட்டதும், தான் தப்ப முடியாது,

கொலைசெய்யப்படுவது நிச்சயம் என்றறிந்த முக்கன்னாஹ் தன் சிஷ்யர்கள் சிலருடன் அக்கினியில் குதித்து, தீக்கிரையாகி மாண்டார். அவரைப்பின் பற்றியோர் பின்னர் இஸ்மாயீலியத்தைத் தழுவி பாத்தினி வழியைப் பின்பற்றினர்.

பன்னிரு இமாம்-ஷீயாயிஸத்துக்கும் இஸ்மாயீலிஸத்துக்கும் ஸைதிஸத்திக்கு மிடையே உள்ள வித்தியாசங்கள்.

பெரும்பான்மை ஷீஆக்களிலிருந்து மேற் குறிப்பிட்ட குழுக்கள்கிளைகளாகப் பிரிந்து சென்றன. பெரும்பான்மை ஷீஆக்கள் பன்னிரு இமாம்-ஷீ ஆக்கள் அல்லது இமாமிய்யா எனப்பட்டனர். திரு நபியின் போதனைகள் மூலம் சம கால முஸ்லிம்கள் மத்தியில் தோன்றிய மதப் பழக்க வழக்கங்களை எதிர்க்காத போதிலும், இஸ்லாத்தின் இரண்டு அடிப்படைப் பிரச்சினைகள் சம்பந்தமான கண்டனமும் விமர்சனமும் காரணமாகவே ஷீஆக்கள் தோன்றினர். இவ்விரு பிரச்சினைகள் இஸ்லாமிய அரசாங்கம், மத அறிவின் அதிகாரம் ஆகியன சம்பந்தமானவை. இவையிரண்டும் நபிக்குடும்பத்தினருக்கு மட்டுமே உரிய உரிமைகள் என்பது ஷிஆக்களின் கருத்து.

அந்தரங்க வழிகாட்டலையும், ஆன்மீகத்தலைமையையும் பிரிக்க முடியாத அம்சங்களாகக் கொண்ட இஸ்லாமியக் கிலாபத் அலீக்கும் அவரது சந்ததிகளுக்குமே சொந்தம் என ஷீஆக்கள் வாதித்தனர். திரு நபியால் வரையறுக்கப்பட்டதற்கொப்ப நபி குடும்பத்தைச் சேர்ந்த இமாம்களின் எண்ணிக்கை பன்னிரண்டு எனவும் அவர்கள் நம்பினர். மேலும் திருக்குர்ஆனின் வெளிப்படையான போதனைகள் ஷரீஆவின் சட்டங்களாகவும், விதிப்பிரமாணங்களாகவும் அமையுமென்றும், பூரண ஆன்மீக வாழ்வுக்கான கொள்கைகள் அவற்றில் அடங்கியுள்ளன வெனவும், அவை எல்லாக் காலத்துக்கும், எல்லா மக்களுக்கும் பொருந்துமெனவும், இறுதித்தீர்ப்பு நாள்வரை அவை மாற்றப்பட முடியாதெனவும், அச்சட்டங்களும் விதிப்பிரமாணங்களும் நபிக்குடும்பத்தினரின் வழிகாட்டலுடன் கற்கப்படல் வேண்டுமெனவும் ஷீஆயிஸம் கருதுகின்றது.

இவ்விடயங்களைக் கணக்கில் கொண்டு பார்க்கையில்

பன்னிரு இமாம்-ஷீஆக்களுக்கும் ஸைதிகளுக்குமிடையே பின்வரும் வித்தியாசங்கள் காணப்படுகின்றன வென்பது தெட்டத்தெளிவாகின்றது: வழக்கமாக இமாமத் நபிக்குடும்பத்தவர்களுக்கு மட்டுமே உரியதென ஸைதிகள் கருதுவதில்லை. அவர்கள் இமாம்களை பன்னிருவர் என மட்டுப் படுத்துவதுமில்லை. பன்னிரு இமாம்-ஷீஆக்கள் பின்பற்றுவது போன்று அவர்கள் நபிக்குடும்பத்தினரின் நீதித்துறையைப் பின்பற்றுவதுமில்லை.

இஸ்மாயீலிகளுக்கும் பன்னிரு இமாம்-ஷீஆக்களுக்கு மிடையே வித்தியாசம் யாதெனில், இஸ்மாயீலிகளுடைய இமாமத் ஏழு என்ற இலக்கத்தைச் சுற்றிச் சுழலுகின்றது. அவர்களைப் பொருத்தவரையில் நபி முஹம்மத் (ஸல்) அவர்களுடன் நபித்துவம் முடிந்துவிடுவதில்லை. மேலும், ஷரீஆ சட்டங்களில் மாற்றம் உண்டுபண்ண அனுமதியுண்டு என்கின்றனர்.

ஷரீஆவைப் பின்பற்றும் கடமையைக் கூட நிராகரிக்க முடியும் என்கின்றனர். இவற்றுக்கு நேர்மாற்றமாக, பன்னிரு இமாம்- ஷீஆக்கள் நபிகள் பிரானை ''நபித்துவத்தின் முத்திரை'' எனக் கருதுவதோடு நபிகளார் தங்களது வாரிசுகளாகவும் தங்கள் சித்தத்தை நிறைவேற்றுநர்களாகவும் பன்னிருவரைக் கொண்டுள்ளார்கள் எனவும் நம்புகின்றனர். ஷரீஆவின் புறவய அம்சம் செல்லுபடியாவதென்றும் அதனை மாற்றுவது முடியாதென்றும் அவர்கள் கருதுகின்றனர். குர்ஆன் வெளிப்படை அம்சம், அந்தரங்க அம்சம் இரண்டையும் கொண்டுள்ள தென அவர்கள உறுதியாக நம்புகின்றனர்.

பன்னிரு இமாம்-ஷீஆவின் வரலாற்றுச் சுருக்கம்

முந்திய பக்கங்களில் கூறப்பட்டதிலிருந்து, பெரும்பான்மை ஷீஆக்கள் பன்னிரு இமாம்-ஷீஆக்கள் என்பது தெளிவு. அவர்கள் திருநபியின் மறைவுக்குப் பின், கிலாபத்தும் மத அதிகாரமும் சம்பந்தப்பட்ட விவகாரத்தில் நபிக்குடும்பத்தினரின் உரிமையைப் பாதுகாப்பதற்காக வேண்டி, அப்பொழுது நிலவிய கருத்துகளுக்குக் கண்டனம்

தெரிவித்துக் கடுமையாக விமர்சித்து பெரும்பான்மை மக்களிடமிருந்து பிரிந்த அலியின் நண்பர்களதும், ஆதரவாளர்களதும் கூட்டத்தவராவர்

''நேர்வழி நடந்த கலீபாக்களின்'' ஆட்சிக் காலத்தில் (11632-35/656) ஷீஆக்கள் ஓரளவு நெருக்கடிக்குள்ளாகினர். உமையாக்களின் ஆட்சியின் போது இந்நெருக்கடி மிகவும் அதிகரித்தது. ஷீஆக்களின் உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் எத்தகைய பாதுகாப்புமிருக்கவில்லை. எனினும் அவர்கள் மீதான நெருக்குதல்கள் அதிகரிக்க அதிகரிக்க அவர்களது நம்பிக்கை உரமும் உறுதியும் பெற்றது. ஷீஆக்கள் தம் நம்பிக்கையையும் போதனைகளையும் பரப்புவதில் ஒடுக்கப்பட்டபோது அதனால் அவர்கள் நன்மையே கண்டனர்.

2ம்/8ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அப்பாஸியக் கலீபாக்களின் ஆட்சிப் பரம்பரை ஸ்தாபிக்கப்பட்டபோது அக்கால கட்டத்தில் நிலவிய பலவீன முற்ற தளர்ச்சியான ஆட்சியின் விளைவாய் ஷீஆயிஸம் புத்துயிர்பெற முடிந்த போதிலும் சீக்கிரமே நிலைமை மீண்டும் மோசமாயிற்று. 3ம்/9ம் நூற்றாண்டின் இறுதிவரை நிலைமை மேலும் கடுமையாகியது.

4ம்/10ம் நூற்ருண்டின் தொடக்கத்தில் ஷீஆக்களான செல்வாக்குமிக்க புயித்களின் எழுச்சியோடு ஷீஆயிஸம் அதிகாரத்தைப் பெற்றுப் பெரும்பாலும் சுயாதீனமாக செயற்படமுடிந்தது. விஞ்ஞான அறிவு பூர்மான விவாதங்களை அதனால் மேற்கொள்ள முடிந்தது. இந்நிலை 5ம்/11ம் நூற்றாண்டின் இறுதிவரை நீடித்தது. 7ம்/13ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மங்கோலியப் படையெடுப்பு ஆரம்பமாகியதும் பொதுவாக யுத்தத்திலீடுபட நேர்ந்தமையாலும், அமைதியின்மை நிலவியமையாலும், சிலுவைப் போர்கள் தொடர்ந்தமையாலும் பல்வேறு இஸ்லாமிய அரசாங்கங்கள் ஷீஆக்கள் மீது அதிகக் கட்டுப்பாடுகளை விதிக்கவில்லை. மேலும், பாரசீகத்தில் சில மங்கோலிய அரசர்கள் ஷீஆயிஸத்துக்கு மதம் மாறியமையும், மஸன்தரானில் ஷீஆக்களான ஸாதாத்தி மராஷீயின் ஆட்சியும் , ஷீஆக்களின்

ஆட்சியதிகாரம் வளர்வதற்கும், எல்லை விஸ்தரிக்கப்படுவதற்கும் உறுதுணைபுரிந்தன. அவை பாரசீகத்தின் பெரும் பான்மை மக்கள் தொகை ஷீஆக்களாக மாறச் செய்தன. அத்துடன், மற்றும் முஸ்லிம் நாடுகளிலும் ஷீஆக்களின் தொகை முன்பை விட அதிகரிக்கச் செய்தன. 9ம்/ 15ம் நூற்றாண்டு இறுதிவரை இந்நிலை நீடித்தது.

10ம்/16ம் நூற்ருண்டின் தொடக்கத்தில் ஸஃபாவித்களின் எழுச்சி காரணமாகப் பாரசீகத்தின் பாரிய எல்லைகளில் ஷீஆயிஸம் உத்தியோக பூர்வ மதமாக மாறியது. இந்நிலை இன்றுவரை தொடர்கின்றது. உலகின் ஏனைய பகுதிகளிலும் ஷீஆக்கள் கோடிக்கணக்கில் காணப்படுகின்றனர்.

குறிப்புகள்

அத்தியாயம் 11

1. பதிப்பாசிரியர் குறிப்பு: இஸ்லாத்தின் பொதுவான மதவியற் பார்வையில் ''அருளப்பட்ட மார்க்கங்கள்'', ''வெளியாக்கப்பட்ட வேதங்கள்'' புனித வேத நூல்களைக் கொண்டவையாகும். வழக்கமாக மேற்கண்ட எண்ணிக்கையில் குறிப்பிடப்படுகின்றன என்ற போதிலும் இது, வேத வெளிப்பாட்டின் சர்வவியாபகத்தன்மையை நம்புவதிலிருந்து முஸ்லிம்களைத் தடுக்கவில்லை. இவ்விவகாரம் குறிப்பாக ஸூஃபியத்தில் அழுத்தமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. தேவையேற்பட்ட போதெல்லாம் முஸ்லிம்கள் இக்கொள்கையை செமிட்டிக், ஈரானிய ஏகதெய்வ நம்பிக்கைகொண்ட உலகுக்கு வெளியேயும் பிரயோகித்தனர், உதாரணமாக இந்து மதத்தை எதிர்கொள்ளநேர்ந்த போது அதன் தெய்வீகமூலத்தை அநேக முஸ்லிம் மத அறிஞர்கள் பகிரங்மாக ஒப்புக் கொண்டனர்.

2. பதிப்பாசிரியர் குறிப்பு: ரத்வா மலைகள் மதினாவுக்கு அருகாமையிலுள்ள மலைத் தொடராகும். ஆரம்பகால இஸ்லாமிய வரலாற்றில் அது வகித்த பங்கு வெகு பிரசித்தம்.

3. பதிப்பாசிரியர் குறிப்பு: இங்கே குறிப்பிடப்படும் கிளைகளில் அநேகமானவை, அவற்றைச் சேர்ந்தோர் ஒருசிலரை மட்டுமே கொண்டிருந்தன வென்பதும் அவற்றை எவ்வகையிலும் பன்னிரு இமாம் ஷீ ஆவுடனும் இஸ்மாயி லியுடனும் ஒப்பிட முடியாதென்பதும் நினைவிலிருத்தப்படல் வேண்டும்.

4. இப்பகுதியில் காணப்படும் விடயங்கள் அல்-மிலால் வல்- நிஹாலையும் இப்னு அதீரின் காமிலையும் ஆதாரமாகக் கொண்டது.

5. இப்பகுதியில் காணப்படும் விடயங்கள் காமில் ரவ்தத் அல்-ஸஃபா, ஹப் அல்-ஸியார், அபுல்ஃபிதா, அல்-மிலால் வல்- நிஹால் முதலியவற்றிலிருந்து எடுக்கப்பட்டவை. ஒரு சில விவரங்கள் தாரிக்கி ஆகா கானிய்யா என்ற நூலிலிருந்து (மத்பாய் எழுதியது: நஜஃப். 1351). பெறப்பட்டதாகும்.

6. பதிப்பாசிரியர்: இங்கே ஸாபியீன்கள் என்பது ஹர்ரானின் மக்களைக் குறிக்கும். இவர்களது மதத்தில் நட்சத்திரங்கள் பிரதான பங்கு வகித்தன. மேலும் அவர்கள் ஹெர்மட்டிக், நியோ பைத்தகோரியன் தத்துவத்தின் களஞ்சியமாக விளங்கியதோடு அதிக மறைவான துறைகளான ஹெலெனிய தத்துவத்தையும், வானியல், கணிதம் போன்றவற்றையும் இஸ்லாத்துல் கொண்டு சென்றதில் முக்கிய பங்கு வகித்தனர். இஸ்லாமிய வரலாற்றின் சில ஆரம்ப நூற்றாண்டுகளின் போதே அவர்கள் இல்லாதொழிந்தனர். தென் ஈராக்கிலும், பாரசீகத்திலும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும். ஸாபியீன்ளோடு அல்லது மண்டியர்களோடு அவர்களைக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

7. பதிப்பாசிரியர் குறிப்பு: ஷீஆயிஸத்திலும் ஸூபியத்திலும் பிரதான பங்கு வகிக்கும் ''தஃவீல்'' என்ற சொல் அதன் நேர்பொருளில் ஒரு பொருள் அதன் மூலதானத்துக்குத் திரும்புதல் என்பதாகும். புனிதக் கிரந்தமாகவிருப்பினும் சரி,

இயற்கைக் காட்சியாக விருப்பினும் சரி, அதன் யாதார்த்தத்தின் புறத்தோற்றத்தைத் துருவிச் சென்று உட்பொருளைக் காணல் - புறத்தோற்றத்திலிருந்து அகத்தோற்றத்தை நாடிச் செல்லல் - என்பது இதன் அர்த்தம்.

8. பதிப்பாசிரியர் குறிப்பு: 'வலி' என்ற சொல் இஸ்லாத்தில் ஆத்ம ஞானியைக் குறிக்கும். விலாயாஹ் என்பது குறிப்பாகச் ஸூபியத்தில் வழக்கமாய்ப் புனிதத்தைக் குறிப்பது. ஆனால் ஷீஆ அர்த்தத்தில் விலாயா (வழக்கமாய் வலாயத் என உச்சரிக்கப்படுவது) இமாமின் மறைவான சக்தியைக் குறிக்கும், இச்சக்தியின் மூலம் அவர் தெய்வீக ரகசியங்களையறிவதில் மனிதர்களுக்குப் பயிற்சியளிக்கவும், புனிதமடைவதற்கான திறவு கோலை வழங்கவும் முடியும். இவ்விரு பிரயோகங்களும் ஒன்றோடொன்று தொடர்புடையவை; ஒரு புறத்தில் ஞான வாழ்வுடன் சம்பந்தப்படுகிறது, மறுபுறம் ஞான வாழ்வுக்கு மக்களை இட்டுச் செல்லும் இமாமின் மறைவான சக்தியுடன் சம்பந்தப்படுகிறது. இமாமைப் பொருத்த வரை, புனிதம் என்ற பொதுவான அர்த்தத்தில் வழக்கமாகக் காணப்படாத பிரபஞ்சீய, சமூக அர்த்தங்கள் 'விலாயாஹ்' என்ற சொற்பிரயோகத்துக்கு உண்டு.

பகுதி 2

ஷீயா மத சிந்தனை

அத்தியாயம் III

மதசிந்தனையின் மூன்று முறைகள்

குறிப்பிட்டவொரு மதத்தினுள் மதத்தன்மை வாய்ந்த எத்தகையவொரு பிரச்சினை சம்பந்தமாகவும் அக்கறை கொள்ளும் சிந்தனை வடிவத்தையே நாம் மதசிந்தனையென்கிறோம். கணிதப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கணித கேள்விகளோடு சம்பந்தப்பட்ட சிந்தனை முறையைக் கணிதச் சிந்தனை என்பதுபோன்றதே அது.

ஏனைய சிந்தனைகளைப் போன்று மதசிந்தனையும் நம்பகமான ஆதாரங்களைக் கொண்டிருக்க வேண்டும். அவற்றிலிருந்தே அதன் சிந்தனைக்கான மூலப் பொருள் உருவாகின்றது. அதன் மீதே இது தங்கியுள்ள தென்பது சொல்லாமலே விளங்கும். அதேபோன்று கணிதப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான விசாரணை முறை நிறுவப்பட்ட கணித உண்மைகளின் விதிகளின் தொடரைக் காண்டிருக்கவேண்டும்.

இறைவனால் அருளப்பட்ட இஸ்லாம் மதம், தெய்வீக மூலம் கொண்ட வெளிப்பாட்டை அடிப்படையாகக் கொண்டுள்ள படியால் புனிதத் திருமறையே அதன் அடிப்படையான ஒரே ஆதாரம். நபியின் பார் பரந்த என்றும் நிலைத்திருக்கும் நபித்துவத்தின் தீர்மானமான அத்தாட்சி திருக்குர்ஆனே. இஸ்லாமிய அழைப்பின் சாரம் திருக்குர்ஆனின் உள்ளடக்கத்தில் தங்கியுள்ளது. உண்மையில் குர்ஆன் மட்டுமே இஸ்லாமிய மத சிந்தனையின் ஆதாரம் எனும்போது அது ஏனைய ஆதாரங்களையும், சரியான சிந்தனையின் மூலங்களையும் நீக்கி

விடுகிறதென்று கருதிவிடக் கூடாது. (இது பின்னர் விளக்கப்படும்).

இஸ்லாத்தில் மூன்று மதசிந்தனை முறைகள் உள்ளன. மதத்தினதும் இஸ்லாமிய அறிவுத்துறைகளினதும் நோக்கங்களை விளங்கிக் கொள்வதற்காக முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டிய மூன்று வழிகளைத் திருமறை அதன் போதனைகள் மூலம் சுட்டுகின்றது: (1) மதத்தின் புறவயமான, சம்பிரதாயமான அம்சத்தின் வழி. (2) அறிவு பூர்வமான புரிந்துணர்வின் வழி (3) இறைவனுக்குக் கீழ்ப்படிதலில் நேர்மை (இக்லாஸ்) மூலம் ஆன்மீக விளக்கம் பெறும் வழி.

புனிதத்திருமறை அதன் சம்பிரதாயமான அம்சத்தில் எத்தகைய சுட்டுதலும் அல்லது அத்தாட்சியும் வழங்காது எல்லா மக்களையும் நோக்கிப் பேசுவதைக் காணமுடியும். இறைவனின் ஈடிணையற்ற இறைமையைச் சார்ந்து அது ஏகத்துவம், நபித்துவம், இறுதித் தீர்ப்பு நாள் போன்றவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு மக்களுக்குக் கட்டளையிடுகின்றது. அன்றுடத் தொழுகை, நோன்பு, இத்தியாதி குறித்து நடைமுறை நியமங்களை வழங்குகிறது; அதேவேளை, மற்றுஞ் சில செயல்களைச் செய்ய வேண்டாமெனவும் தடுக்கின்றது. ஆயினும் இக்கட்டளைகளுக்குத் திருக்குர்ஆன் அதிகாரம் வழங்கவில்லையேல், அவற்றையேற்றுக் கொள்ளுமாறும், அவற்றுக்குக் கீழ்ப்படியுமாறும் அது ஒருபோதும் எதிர்பார்த்திராது. எனவே, குர்ஆனின் இத்தகைய எளிய வாசகங்கள் இறுதியான மதக்குறிக்கோள்களையும், இஸ்லாமிய அறிவின் விளக்கத்தையும் அடைவதற்கான பாதையாகும் எனக் கூறப்படல் வேண்டும். ‘‘அல்லாஹ்வையும் அவனது நபியையும் விசுவாசியுங்கள்’’, ‘‘தொழுகையை நிறைவேற்றுங்கள்’’ போன்ற வாய்மொழிகளை நாம் மதத்தின் புறவயமான அல்லது சம்பிரதாயமான அம்சம் என்கிறோம்.

மதத்தின் புறவயமான அம்சத்தில் வழிகாட்டலுடன் சேர்ந்து, பல்வேறு வசனங்களில் அறிவு பூர்வமான புரிந்துணர்வுக்கும் திருக்குர்ஆன் மனிதனுக்கு வழிகாட்டுகின்றது. பேரண்டத்திலும், சிற்றண்டத்திலும் அல்லாஹ்வின்

அடையாளங்கள் பற்றிச் சிந்திக்குமாறு, ஆராயுமாறு அது மனிதனுக்கு அழைப்பு விடுக்கின்றது. அறிவுபூர்வமான கட்டற்ற சிந்தனை மூலம் அது பல உண்மைகளை விளக்குகின்றது. குர்ஆனைப் போன்று வேறெந்தப் புனித நூலும், விஞ்ஞானத்தையும் அறிவையும் போற்றவும் மனிதனுக்கு அவற்றை சிபாரிசு செய்யவும் இல்லையென நிச்சயமாக கூற முடியும். திருக்குர்ஆன் அநேக வார்த்தைகள் மூலம், வாசகங்கள் மூலம் அறிவு பூர்வ அத்தாட்சியினதும், காரணவாதச் சுட்டுதல்களினதும் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துகின்றது. அதாவது, மனிதன் முதலில் இஸ்லாமிய அறிவியல்களின் ஸ்திரத்தன்மையை ஏற்றுக் கொண்டு அதன் பின் அறிவுபூர்வ அத்தாட்சிகள் மூலம் அவன் அவற்றை நியாயப்படுத்த வேண்டும் என அது கூறவில்லை. அதற்குப் பதிலாக, குர்ஆன் தனது சொந்த நிலைப்பாட்டின் உண்மையில் பூரண நம்பிக்கை வைத்து, மனிதன் தன் அறிவைப் பயன்படுத்தி இஸ்லாமிய அறிவியல்களின் உண்மையைக் கண்டறிந்து அதன் பின்னரே அவன் இவ்வுண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென அறை கூவல் விடுக்கின்றது. இஸ்லாமியத் தூதின் வார்த்தைகளில் அடங்கியுள்ள உறுதிப்பாட்டை, உண்மையான அத்தாட்சியாயுள்ள சிருஷ்டிகளின் உலகில் அவன் தேட வேண்டும். இறுதியாகக் காரணவாதச் சுட்டுதலின் முடிவுகளில் அவன் தனது மதநம்பிக்கையின் உறுதிப்பாட்டைக் காண வேண்டும். அவன் முதலில் மதநம்பிக்கை கொண்டு அப்புறம் அதற்குக் கீழ்ப்படிந்து அத்தாட்சிகளைத் தேட வேண்டும் என்றில்லை. இவ்வாறு, தத்துவ சிந்தனையும் அதற்கு ஒரு வழியாகும். அதன் ஸ்திரத்தன்மையும் திராணியும் திருமறையால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், மதத்தின் புறவயமான அம்சத்துடனும், அறிவுபூர்வமான அம்சத்துடனும் சேர்ந்து உண்மையான மத அறிவு யாவுமே இறைவனின் ஏகத்துவத்தி(தவ்ஹீத்) லிருந்தும், இறையறிவிலிருந்தும், இறை பண்புகளிலிருந்தும் உற்பவிக்கின்றதென திருமறை நுண்ணிய வார்த்தைகளில் விளக்குகின்றது.

இறைவனைப் பற்றிய அறிவின் பூரணத்துவம் அவன் எல்லா இடங்களிலுமிருந்து தன்பால் ஈர்த்து உன்னதப்படுத்தியுள்ளவர்களுக்குச் சொந்தமாகும். இம்மனிதர்களே இறைவனுக்கு நேர்மையாகக் கீழ்ப்படிவதன் மூலம் தம்மையும் சகல வஸ்துக்களையும் மறந்து தம் முழுசக்தியையும் அதிகாரத்தையும் ஆத்மீக உலகில் ஈடுபடுத்த முடிந்தோராவர். தூய ரட்சகனின் ஒளித் தரிசனத்திலிருந்து அவர்களின் விழிகள் பிரகாசம் பெற்றுள்ளன. அறியும் விழியால் விண்ணினதும் மண்ணினதும் ராஜ்யத்தில் பொருள்களின் மெய்யான தோற்றத்தை அவர்கள் கண்டுள்ளனர். நேர்மையான கீழ்ப்படிதல் மூலம் அவர்கள் உறுதி (யக்கீன்) யென்னும் நிலைப் பேற்றினை அடைந்தோராவர். இந்த உறுதியின் விளைவாக விண்ணுலக ராஜ்யமும் மண்ணுலகராஜ்யமும் நித்தியமான உலகின் நிலையான ஜீவிதமும் அவர்களுக்கு வெளியாக்கப்பட்டுவிடும்.

பின்வரும் திருவசனங்கள் பற்றிய விசாரணை இவ்வுரிமைப் பாத்தியதை மீது முழுமையான ஒளிபாய்ச்சுகின்றது: '' என்னை (அல்லாஹ்வை)த் தவிர வேறு நாயனில்லை. எனவே என்னையே வணங்குங்கள் என்று ஏவாமல் எந்தவொரு தூதரையும் உங்களுக்கு முன் நாம் அனுப்பவில்லை'' (குர்ஆன் 21:25).[2] '' அல்லாஹ் மிகத்தூயவன் அவர்கள் (அவனுக்குச்) சாட்டுகிற பொருள்களிலிருந்து (அவன் சுதந்திரமானவன்) ! உண்மையான பயபக்திகொண்ட அல்லாஹ்வின் அடியார்கள் அப்படி (செய்வது) இல்லை''(குர்ஆன், 37:159-160)[3] (நபியே) நீர் கூறும் : ''நிச்சயமாக நானும் உங்களைப் போன்ற ஒரு மனிதன் தான் நிச்சயமாக உங்களுடைய நாயன் ஒரே நாயன் தான் என்று எனக்கு வஹீ மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே, எவன் தன் இறைவனைச் சந்திக்க விரும்புகின்றானோ அவன் நற்கருமங்களைச் செய்து, தன் இறைவனுக்கு ஒருவரையும் இணையாக்காது (அவனையே) வணங்கி வருவானாக (அல்குர்ஆன்18:110) ''உமக்கு ''யகீன்'' (என்னும் மரணம் ஏற்படும் வரையில் (இவ்வாறே) உம் இறைவனை வணங்கிக் கொண்டிருப்பீராக! (அல்குர்ஆன் 15:99)[5] ''இப்றாஹீம் உறுதி கொள்ளும் பொருட்டு, வானங்களிலும், பூமியிலுமுள்ள

(நம்முடைய) சிருஷ்டிகளை நாம் அவருக்கு இவ்வாறு காண்பித்து வந்தோம்'' (அல்குர்ஆன் 6:75)[6] ''நிச்சயமாக நன்மை செய்தோரின் ஜாபிதா ''இல்லிய்யூன்'' என்ற மேலான இடத்தில் இருக்கும். (நபியே) ''இல்லிய்யூன்'' என்றால் எது என்பதை உமக்கு அறிவிப்பது எது? அது ஒரு பதிவுப் புத்தகம். அதில் (நல்லோர்களின் பெயர்களெல்லாம்) பதியப்பட்டிருக்கும். ''முகர்ரபான'' மலக்குகள் அதனை (க் காத்து)ப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். (அல்குர்ஆன் 83:18-21)[7] ''அறிந்து கொள்ளுங்கள் ! (அதன் பலனைக் சந்தேகமற நீங்கள் அறிவீர்களாயின் நிச்சயமாக நரகத்தையே நீங்கள் (உங்கள் கண்முன்) காண்பீர்கள் (அல்குர்ஆன் 102:5,6)[8]

இவ்வாறு, மத உண்மைகளையும், அறிவுகளையும் விளங்கிக்கொள்வதற்கான வழிகளிலொன்று, சிற்றின்பப் பற்றுகளிலிருந்து ஆன்மாவைத் தூய்மையடையச் செய்வதும், இறைவனுக்குக் கீழ்ப்படிதலில் நேர்மையைக் கடைப் பிடிப்பதுமாகும். மதத்தின் புறவயமான அல்லது சம்பிரதாயமான அம்சங்கள், அறிவு பூர்வமான ஆய்வு , உண்மையையும் அதன் அகக் காட்சியையும் திரைநீக்கிச் செய்யும் அறிவு பூர்வ சுயவுணர்வுக்கு இட்டுச் செல்லும் உண்மையான கீழ்ப்படிதல் ஆகிய மூன்று முறைகளை மதவுண்மைகளை அறிந்து கொள்வதற்கான முறைகளாகத் திருக்குர்ஆன் பிரேரிக்கின்றதென்பது இது வரை சொல்லபட்ட வற்றிலிருந்து தெளிவாகின்றது. எனினும் இம்மூன்று முறைகளும் பல்வேறு வழிகளில் ஒன்றோடொன்று வேறுபடுகின்றன வென்பது புரிந்து கொள்ளப்படல் வேண்டும். உதாரணமாக, மதத்தின் புறவயத் தோற்றங்கள் எளிய வார்த்தைகளில் வாய்மொழி வெளிப்பாடுகளாக விருப்பதால் அவை எல்லோர் கரங்களிலும் உள்ளன; ஒவ்வொருவரும் அவரவர் ஆற்றலுக்கேற்ப அவற்றால் நன்மையுறலாம்.[9] மறுபுறம் குறிப்பிட்டவொரு குழுவினருக்கு ''ஹவாஸ்'' (சான்றோர்க்கு)ப் பெருத்தமான மற்றிரு வழிகள் எல்லோருக்கும் பொதுவானவையல்ல. மதத்தின் புறத்தோற்றங்களினது பாதை இஸ்லாமியக் கொள்கை களினதும் கடமைப்பாடுகளினதும் புரிந்துணர்வுக்கு இட்டுச்

செல்வதுடன் இஸ்லாமிய நம்பிக்கைகள், நடைமுறைகள் அத்துடன் இஸ்லாமிய அறிவியலும், அறவியலும், நீதித்துறையும் பற்றிய கொள்கைகள் முதலியவற்றின் சாரத்தில் முடிகின்றது. இது மற்றிரு பாதைகளுக்கும் நேர்மாற்றமானதாகும். அறிவுபூர்வமான பாதையில் மத நம்பிக்கை, அறிவியல், நடைமுறைப் பிரச்சினைகள் பற்றிய பொதுவிதிகள் முதலியவை சம்பந்தமான பிரச்சினைகளைக் கண்டு பிடிக்க முடியும். ஆனால் அறிவுபூர்வமுறையால் திருக்குர்ஆனிலும் சுன்னாஹ்விலும் தரப்பட்டுள்ள திட்டவட்டமான மதக் கட்டளைகளைக் கண்டு பிடிக்க முடியாது. பௌதீகச் சிற்றின்பப் பற்றுதல்களிலிருந்து ஆன்மாவைத்தூய்மைப்படுத்தும் பாதை, இறைவனால் அளிக்கப்பட்டுள்ள ஆன்மீக உண்மைகளின் கண்டு பிடிப்புக்கு இட்டுச்செல்வதால், இறையருள் மூலமாய் வெளியாக்கப்படும் அதன் முடிவுகள் அல்லது உண்மைகள் எல்லையற்றவை. இவ்வறிவைப் பெற்ற மனிதர்கள் இறைவனைத்தவிர எல்லாவற்றையும் மறந்து எல்லாவற்றிலுமிருந்து தங்களைத் துண்டித்துக் கொள்வதோடு இவர்கள் இறைவனின் நேரடியான வழிகாட்டலிலும், ஆளுகையிலும் இருக்கின்றனர். அவன் விரும்புவனவேயன்றி அவர்கள் விரும்புபவை இவர்களுக்கு வெளியாக்கப்படுவதில்லை.

இஸ்லாமிய சிந்தனையின் மூன்றுமுறைகளையும் இனி நாம் விவரமாய்ப் பார்ப்போம்.

முதலாவது முறை
மதத்தின் சம்பிரதாய அம்சம்

மதத்தின் சம்பிரதாய அம்சத்தின் வெவ்வேறு சாயல்கள்

இஸ்லாமிய மதச்சிந்தனையின் அடிப்படை ஆதாரமான திருக்குர்ஆன் அதன் செய்தியைச் செவிமடுப்பவர்களுக்கு அதன் வார்த்தைகளின் புறவய அர்த்தங்களுக்குப் பூரண அதிகாரம் வழங்குகிறது. குர்ஆன் வசனங்களின் அந்த புறவய அர்த்தம் தான், மறைவார்த்தைகளை நபிமொழி பூரணப்படுத்தச்

செய்வதோடு அவற்றையும் அல்குர்ஆனைப் போல் ஆதாரபூர்வமானதாக்குகின்றது. திருமறை கூறுகின்றது: அவ்வாறே இந்தக் குர்ஆனையும் (நபியே) நாம் உமக்கு அருளினோம். மனிதர்களுக்காக (உம்மீது) அருளப்பட்ட இதை, நீர் அவர்களுக்குத் தெளிவாக எடுத்துக் காண்பியும். (இதன் மூலம்) அவர்கள் கவனித் தறிந்து கொள்வார்கள்.'' (குர்ஆன் 16:14) '' எழுத்தறிவில்லாத (அரபு) ஜனங்களுக்காக அவர்களிலேயே ஒரு தூதரை (த் தேர்ந்தெடுத்து) அவன் அனுப்பி வைத்தான்.அவர்கள் இதற்கு முன்னர், பகிரங்கமான வழி கேட்டிலிருந்த போதிலும், அவர் அவனுடைய வசனங்களை அவர்களுக்கு ஓதிக் காண்பித்து, அவர்களைப் பரிசுத்தமாக்கி வைத்து, அவர்களுக்கு வேதத்தையும்; ஞானத்தையும் கற்றுக் கொடுக்கின்றார்.'' (குர்ஆன், 62:2) ''ஆகவே (நம்முடைய) தூதர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் (மனமொப்பி) எடுத்துக் கொள்ளுங்கள் அவர் எதனை உங்களுக்குத் தடுத்துக் கொண்டாரோ அதிலிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்'' குர்ஆன், 59:7) அல்லாஹ்வையும், இறுதி நாளையும் உறுதியாக நம்புபவர்களுக்குரிய அழகிய முன்மாதிரி, நிச்சயமாக அல்லாஹ்வுடைய தூதரிடமே உங்களுக்கு இருக்கின்றது.'' (குர்ஆன், 33:21)

திருமறையைப் போலவே திருநபியின் சொல்லும் செயலும்- அவர்களின் மௌனமும் அங்கீகாரமும் கூட - எமக்கு அதிகார பூர்வமானவையாய் இல்லாவிடின், இத்தகைய திருவசனங்கள் எத்தகைய அர்த்தமும் கொண்டிரா வென்பது வெள்ளிடைமலை. எனவே நபிமொழிகள் அதிகாரபூர்வமானவை, அவற்றை வாய்மொழியாகக் கேட்டவர்களும், நம்பகமான அறிவுப்புகள் மூலம் அவற்றையறிந்தவர்ளும் அவற்றை ஏற்றுக் கொண்டாகவேண்டும். மேலும், இத்தகைய ஆதாரபூர்வ அறிவிப்புக்களின் மூலமாக பின்வரும் நபிமொழி அறியவரப்பட்டுள்ளது: '' நான் பெறுமதியான இரண்டினை உங்கள் மத்தியில் பொறுப்பாக விட்டுச் செல்கிறேன். அவற்றைப் பற்றிப் பிடித்துக் கொண்டால் நீங்கள் ஒருபோதும் வழிகெட மாட்டீர்கள். அவை திருக்குர்ஆனும் எனது

குடும்பத்தினருமாகும். இவ்விரண்டும் இறுதித்தீர்ப்பு நாள் வரை (ஒன்றையொன்று) பிரியமாட்டா.''[10] இந்நபி மொழி மூலமாகவும் திட்டவட்டமாக நிறுவப்பட்ட மற்றும் ஹதீஸ்கள் மூலமாகவும், நபிக்குடும்பத்தினரது வார்த்தைகள் நபியின் ஹதீஸைப் பூரணப்படுத்தும் ஒரு தொகுதியாக அமைகின்றன. திருநபிக்குடும்பத்தினர் மத அறிவுத் துறையில் அதிகாரம் பெற்றிருப்பதோடு அவர்கள் இஸ்லாமியப் போதனைகளையும், சட்டங்களையும் விளக்குவதில் பிழைவிடாதவர்கள். ஆகவே வாய்மொழியாகவும். ஆதார பூர்வஅறிவிப்புகள் மூலமாகவும் பெறப்பட்ட அவர்களது மொழிகள் நம்பகமானவை; அதிகாரம் வாய்ந்தவை.

எனவே, மதத்தின் பாரம்பரிய, புறவய அம்சம் பெறப்படும் ஆதாரபூர்வ ஆவணமும், இஸ்லாமிய மதச்சிந்தனையின் அடிப்படை ஆதாரமுமான பாரம்பரிய ஆதாரம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளதென்பது துலாம்பரமாகின்றது: ஒன்று திருமறை; மற்றது சுன்னாஹ். திருமறையெனும் போது புனிதக் குர்ஆன் வசனங்களின் புறவய அம்சமென்றும், சுன்னாஹ் எனும் போது திருநபியிடமிருந்தும் அன்னாரின் புனிதக் குடும்பத்தினரிடமிருந்தும் பெறப்பட்ட ஹதீஸ் என்றும் அர்த்தமாகின்றது.

நபித் தோழர்களது பாரம்பரியங்கள்

இந்தக் கண்ணோட்டத்திலேயே, நபித்தோழர்கள் மூலம் அறிவிக்கப்படும் ஹதீஸ் ஷீஆயிஸத்தில் அணுகப்படுகின்றது: திரு நபியின் சொல்லையும் செயலையும் குறிக்கும் அதேவேளை நபிக்குடும்பத்தினரின் ஹதீஸுடன் முரண்படாதிருப்பின் அவை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. திருநபியின் அபிப் பிராயத்தையன்றி, தோழர்களின் அபிப்பிராயத்தைமட்டுமே உள்ளடக்கமாய்க் கொண்டிருந்தால் அவை மதச் சட்டங்களின் அதிகாரம் கொண்ட ஆதாரமாய்க் கொள்ளப்படமாட்டா. இவ்விஷயத்தில் நபித் தோழர்களின் தீர்ப்பு வேறெந்தவொரு முஸ்லிமினதும் தீர்ப்பைப் போன்றதேயாகும். அதே போன்று, இஸ்லாமிய சட்டம் சம்பந்தமாக நபித்தோழர்கள், எந்தவொரு முஸ்லிமுடனும் நடந்துகொள்வது போலவே, மற்றைய நபித்

தோழர்களுடன் நடந்து கொண்டார்களே யொழிய அவர்களை விசேடமானவர்களாகக் கருதி நடந்து கொள்ளவில்லை.

திருமறையும் பாரம்பரியமும்.

அல்லாஹ் அருளிய புனிதத்திருமறை சகல இஸ்லாமிய சிந்தனை வடிவங்களுக்கும் ஆதார மூலமாகும். இஸ்லாத்தின் மற்றைய மதஆதாரங்கள் அனைத்துக்கும் உறுதியையும் அதிகாரத்தையும் வழங்குவது அல்குர்ஆனே. மேலும், அனைத்தையும் துலங்கச் செய்யும் ஒளியாக அல்குர்ஆன் தன்னை வர்ணிக்கின்றது. அது மனிதர்களுக்குச் சவால் விடுத்து அதன் திருவசனங்களைப்பற்றிச் சிந்தனை செய்து, அவற்றில் தாரதம்மியமோ, முரண்பாடுகளோ இல்லையென்பதை அவதானிக்குமாறு கூறுகின்றது. முடியுமானால் அதற்குப் பதிலாக அதைப் போன்ற இன்னொரு நூலைத் தயாரித்துக் காட்டுமாறு அறைகூவல் விடுக்கின்றது. திருக்குர்ஆன் அனைவராலும் புரிந்து கொள்ளப்பட முடியாத ஒன்றாக இருப்பின் இத்தகைய உறுதி கூறலுக்கு இடமிராது.

திருக்குர்ஆன் அனைவராலும் புரிந்துகொள்ளப்படக்கூடியது எனும்போது அது திருநபியினதும் அன்னார் குடும்பத்தினரதும் மத அதிகாரம் பற்றிய முன்னைய உறுதிப்பாட்டுக்கு எவ்வகையிலும் முரணாகாது. இம் மத அறிவியல்கள் திருமறையினது உள்ளடக்கத்தின் விரிவாக்கங்களாகவே உள்ளன. உதாரணத்துக்கு, ஷரீஅத் சட்டங்களும் விதிகளும் அடங்கிய இஸ்லாமிய அறிவியலின் பகுதி சம்பந்தமாய் அல்குர்ஆனில் பொதுவான அடிப்படைகள் மட்டுமே காணப்படுகின்றன. அன்றாடத் தொழுகை, நோன்பு, பண்டப் பரிமாற்றம், மற்றும் சகலவித வணக்கங்கள் (இபாதத்) கொடுக்கல் வாங்கல், வர்த்தகம் (முஆமலாத்) பற்றிய விவரங்ளும், விரிவான விளக்கமும், தெளிவும் திருநபியினதும் அன்னார் குடும்பத்தினரினதும் பாரம்பரியங்களைச் சுட்டுவதன் மூலமே பெறப்படமுடியும். மறு பகுதியான சித்தாந்தம், அறநெறிகள், ஒழுகலாறுகள் சம்பந்தப்பட்ட அறிவைப் பொருத்த மட்டில்-அவற்றின் உள்ளடக்கமும் விவரங்களும் அனைவராலும் விளங்கிக் கொள்ளப்படக்கூடியவை யெனினும்

அவற்றின் முழு அர்த்தத்தையும் புரிந்து கொள்ளல் நபிக்குடும்பத்தினரின் முறையை ஏற்றுக் கொள்வதிலேயே தங்கியுள்ளது. திருமறை வசனங்கள் ஒவ்வொன்றும் - பழக்கவழக்கங்கள் மூலமாக நமக்குப் பரிச்சயமான கருத்துக்களின் மூலமாகவன்றி- மற்றைய மறை வசனங்கள் மூலமாகவே விளக்கப்படவும் அர்த்தங் கூறப்படவும் வேண்டும்.

குர்ஆனின் சில பகுதிகள் பேசும்போது அவற்றின் அர்த்தத்தை அதன் மற்றைய பகுதிகள் நமக்கு வெளியாக்குகின்றன. சில பகுதிகன் மற்றைய பகுதிகளின் அர்த்தத்தை உறுதிப்படுத்துகின்றன என அலீ (அலை) கூறுகின்ருர். '' குர்ஆனின் பகுதிகளை மற்றைய பகுதிகள் நிரூபிக்கின்றன''[12] எனப் பெருமானார் (ஸல்) நவின்ருர்கள். மேலும் '' எவனொருவன் திருக்குர்ஆனுக்கு தனது எண்ணப்படி அர்த்தங் கற்பிக்கின்ருனோ அவன் தனக்கு (நரக) நெருப்பில் இடம் தேடிக் கொண்டான்''[13] எனவும் பெருமானார் கூறினார்கள்.

குர்ஆனுக்கு குர்ஆன் மூலமாகவே விளக்கம் கூறுவதன் ஓர் எளிய உதாரணமாக லூத்து நபியுடைய மக்களின் ஆக்கினை பற்றிய கதையைக் கூறலாம் '' இன்னும் நாம் அவர்கள் மீது ஒரு மழையைப் பெய்வித்தோம்''[14] என்று இறைவன் ஓரிடத்தில் கூறுகின்ருன்; மற்ருேரிடத்தில் '' பாருங்கள்! நாம் அவர்கள் மீது கற்புயலை அனுப்பி வைத்தோம்''[15] என்கிருன். இரண்டாம் வசனத்தை முதலாம் வசனத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது ''மழை'' என்பதன் அர்த்தம் விண்ணிலிருந்து பொழிந்த ''கற்கள்'' என்பது தெளிவாகின்றது. குர்ஆன் மூலம் குர்ஆனை விளக்குவதே நபிக்குடும்பத்தினரால் கற்பிக்கப்பட்ட, ஒரே குர்ஆன் விளக்கமுறையென்பதையிட்டு நபிக் குடும்பத்தினரதும், நபியைப் பின்பற்றிய சிறந்த தோழர்களினதும் ஹதீஸ்களைக் கவனமாகக் கற்றறிந்த எவரும் சந்தேகங்கொள்ளமாட்டார். [16].

குர்ஆனின் புறவய அம்சமும் அகவய அம்சமும்.

திருமறை அதன் வார்த்தையில் மதநோக்கங்களைத் தெளிவாக்குவதோடு கோட்பாடு செயல் சம்பந்தமாக மனுக்குலத்துக்குக் கட்டளை பிறப்பிக்கின்றதென்பது விளக்கப்பட்டுள்ளது. ஆனால் குர்ஆனின் அர்த்தம் இந்த தளத்தோடு மட்டுப்படுத்தப் பட்டதன்று. இதே வெளிப்பாடுகளுக்குப் பின்னால் இதே அர்த்தங்களினுள் ஆழ்ந்தகன்ற அர்த்தத் தளங்கள் விரிகின்றன. தூய மனங்கொண்ட ஆன்மீகச் சான்றோரே அவற்றை விளங்கிக் கொள்வர்.

குர்ஆனைப் போதிப்பவராக[17] இறைவனால் நியமிக்கப்பட்ட திருநபியவர்கள் ''குர்ஆன் அழகிய புறத்தோற்றமும் அழகிய அகத்தோற்றமும் கொண்டுள்ளது'' என்றும் ''குர்ஆன் ஓர் உட்பரிமாணமும் உட்பரிமாணத்தினுள் ஓர் உட்பரிமாணமாக ஏழு உட்பரிமாணங்களும் கொண்டுள்ளன[18] என்றும் கூறுகின்றூர்கள். இமாம்களின் அருள்மொழிகளிலும் குர்ஆனின் அகவய அம்சம் பற்றி அநேக குறிப்புகள் காணப்படுகின்றன.

திருமறை அத்தியாயம் 13 திருவசனம் 17ல் இறைவன் குறிப்பிடும் ஒருகுறியீடு இவ்வுறுதிப்பாடுகளின் பிரதான ஆதாரமாகும். இத்திருவனசத்தில் இறைவனது அருட் கொடைகளின் குறியீடாக, பூமியையும் அதிலுள்ள சீவராசிகளையும் வாழ்விக்கும் வான் மழை பயன்படுத்தப்படுகிறது. மழையின் வருகையோடு வெள்ளப்பெருக்கேற்பட்டு ஒவ்வொரு நதிப்படுகையும் அதனதன் அளவுக்கேற்ப குறிப்பிட்டளவு வெள்ளத்தையேற்றுக் கொள்கின்றது. பாய்ந்து செல்லும் வெள்ளத்தை நுரை மூடியுள்ளது. நுரைத் திரைக்கடியில், மனிதகுலத்துக்குப் பயன் விளைவிக்கும், உயிர் வழங்கும் அதே நீர் உள்ளது.

இக்குறியீட்டினால் சுட்டப்படுவதுபோன்று, மனிதனது அகவாழ்வுக்கு ஆதாரமான தெய்வீக ஞானத்தை விளங்கிக் கொள்ளும் ஆற்றல் மக்கள் மத்தியில் வித்தியாசப்படுகின்றது. சடப்பொருட்களின் இருப்புக்கும் சொற்பகாலம் நீடிக்கக் கூடிய

பொருளாயத வாழ்வுக்கும் அப்பால் யதார்த்தத்தைக் காணாதோர் உள்ளனர். இத்தகையோர் பொருளாயதப் பசிகளிலும் உடலிச்சைகளிலும் கட்டுண்டவர்கள். பெருளாயத நன்மைகளையும், புலனின்பங்களையும் இழந்து விடக்கூடிய அச்சத்தைத் தவிர வேறு அச்சமேதும் இவர்களுக்கில்லை. இத்தகைய மக்கள் தங்கள் மத்தியில் காணப்படும் பல்வேறு படித்தரங்களைக் கணக்கில் கொண்டு இஸ்லாமியக் கோட்பாடுகளை சுருக்கமான முறையில் ஏற்று, இஸ்லாமியக்கடமைகளை - அவற்றின் விளக்கமின்றி -புறவயமான முறையில் நிறைவேற்றுவதே சிறப்பு. மறுமையின் வெகுமதிகளை எதிர்பார்த்து அல்லது தண்டனைகளுக்கு அஞ்சியே அவர்கள் இறைவனை வணங்குவர்.

தம் அப்பழுக்கற்ற தன்மைகாரணமாக, நிலையற்ற உலக வாழ்வின் அற்ப இன்பங்களில் அழுந்திக்கிடப்பதுதான் நலம் எனக் கருதாதோர் இருக்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரை உலக வாழ்விலுண்டாகும் சுகதுக்கங்கள் இலாப நட்டங்கள் யாவும் வெறும்மாயையேயன்றி வேறில்லை. வாழ்க்கைப் பயணத்தில் தமக்கு முன் வந்து போனவர்களின், சுகபோகங்களில் முழ்கிக்கிடந்து மறைந்தவர்களின் நினைவு எப்பொழுதும் கண்முன் தோன்றி இவர்களுக்கு எச்சரிக்கை விடுத்துக்கொண்டேயிருக்கும். இத்தகைய மனத்தூய்மை கொண்டோர் நித்திய உலகின்பால் ஈர்க்கப்படுகின்றனர். மாறும் உலகின் பல்வேறு தோற்றங்களைச் சுவாதீனமான யதார்த்தங்களாக வன்றி, மேலுலகின் குறியீடுகளாகவும், உற்பாதங்களாகவும் அவர்கள் காண்கின்றனர்.

இக்கட்டத்திலேயே, மண்ணிலும் விண்ணிலும் அடையாளங்கள் மூலமாக, அடிவானத்திலும் மனிதர்களின் ஆன்மாவினுள்ளும்[19] அவர்கள் இறைவனது மாட்சிமையின் மகத்துவத்தின் எல்லையற்ற பேரொளியை ஆன்மீகக் காட்சியாகக் ''காண்கின்றனர்'' சிருஷ்டியின் இரகசியக் குறியீடுகளைப் புரிந்து கொள்வதற்கான ஆதங்கமும் ஆசையும் அவர்களின் இதயங்களை முழுமையாகப் பற்றிக் கொள்கின்றது. சுயநலப்பற்று எனும் ஒடுங்கிய இருண்ட கிணற்றினுள்

சிறைப்பட்டுக்கிடப்பதற்குப் பதிலாக, நித்திய உலகின் எல்லையற்ற வெளியில் அவர்கள் சிறகுவிரித்து ஆன்மீக உலகின் உச்சிநோக்கிப்பறந்து மேலே மேலே உயர்ந்து செல்கின்றனர்.

சிலை வணக்கத்தை இறைவன் தடை செய்துள்ளான் என்பதைக் கேட்கும் போது- இதன் வெளிப்படையான கருத்து சிலைகளின் முன்னால் மண்டியிடுவது கூடாது- இறைவனுக்கு அப்பாற்பட்ட எதற்கும் கீழ்ப்படியக் கூடாது என்பதே இக்கட்டளையின் அர்த்தமென இவர்கள் புரிந்து கொள்கின்றனர். இதற்கப்பால் இறைவனல்லாத எதன் மீதும் நமபிக்கை வைப்பதோ, அதனை அஞ்சுவதோ கூடாது எனவும் இவர்கள் புரிந்துகொள்கின்றனர். இதற்கும் அப்பால் சுயநலப்பசிகளின் தேவைகளுக்கு அவர் அடிமையாகிவிடக் கூடாது, இன்னும் அப்பால் இறைவனுக்கப்பாற்பட்ட எதிலுமே நாட்டம்செலுத்தக் கூடாது என்றெல்லாம் புரிந்துணர்வு ஏற்படுகின்றது.

இதேபோன்று தாம் தொழவேண்டுமென குர்ஆனிலிருந்து அறியும்போது-இதன் வெளிப்படை அர்த்தம் தொழுகையின் குறிப்பிட்டசெயல்முறைகளை நிறைவேற்றுவது- இதயங் களாலும் ஆன்மாக்களாலும் இறைவனுக்கு அடிபணிய வேண்டுமென உள்ளர்த்தத்தின் மூலம் இவர்கள் அறிந்துகொள்கின்றனர். இதற்கும் அப்பால் இறைவன் முன்னால் தாம் எத்தகைய சக்தியுமற்ற அற்பப் பதர்களெனவும், தம்மை முற்றாக மறந்து இறைவனை மட்டுமே தியானிக்க வேண்டுமெனவும் அவர்கள் அறிந்துகொள்வர்.[20]

இவ்விரண்டிலும் உள்ளர்த்தம் காணப்படுவது கட்டளையின் புறவய வெளிப்பாட்டின் காரணமாகவோ, சம்பந்தப்பட்ட விலக்கலின் காரணமாகவோ அன்று என்பதைக் காண முடியும். எனினும், பிரபஞ்ச முறைமை குறித்து சிந்தனை செய்து, மனோ இச்சைகளை விடவும் பிரபஞ்ச யதார்த்தத்தின் தரிசனத்தை விரும்பும், சுயத்தை மையமாகக் கொண்ட தன்மயத்தை விடவும் புறப்பொருள் மெய்மையை விரும்பும் எவரும்

இவ்விளக்கத்தையடைவது தவிர்க்க முடியாததாகும்.

இக்கருத்தாடலிலிருந்து குர்ஆனின் புறவய அம்சமும் அகவய அம்சமும் துலாம்பரமாகின்றன; குர்ஆனின் உள்ளர்த்தம் அதன் வெளிப்படையதார்த்தத்தை அழிப்பதோ, இரத்துச் செய்வதோ இல்லை. இதனை நுட்பமாகக் கூறுவதானால் அது உடலுக்கு உயிர்வழங்கும் ஆன்மா போன்றது. அகில உலகிற்கும் சொந்தமான நித்திய மார்க்கமான இஸ்லாம், மனித இனச் ''சீர்த்திருத்தத்துக்கு'' ஆகவும் அழுத்தம் கொடுக்கும் இஸ்லாம். சமூக நன்மைக்குத் தேவையான அதன் புறவயமான கட்டளைகளையோ, இக்கட்டளைகளைப் பேணிப்பாதுகாக்கும் கோட்பாடுகளையோ விட்டு விடமுடியாது.

மதம் மனதோடு சம்பந்தப்பட்டதெனவும், மனம் தூய்மையாயிருந்தால் போதும், செயல்களால் பயனில்லையெனவும் பாசாங்கு காட்டும் ஒரு சமுதாயம், ஒழுங்கீனமாய் வாழ்ந்து கொண்டு எவ்வாறு இன்பமடைய முடியும்? ஆசூசையான செயல்களாலும், சொற்களாலும் மனத் தூய்மையடைவது எங்ஙனம்? இறைவன் தன் திருமறையில் கூறுகிறுன்: ''கெட்ட பெண்கள், கெட்ட ஆண்களுக்கும், கெட்ட ஆண்கள், கெட்ட பெண்களுக்கும் தகுமானவர்களாவார்கள். (அவ்வாறே பரிசுத்தமான பெண்கள், பரிசுத்தமான ஆண்களுக்கும், பரிசுத்தமான ஆண்கள் பரிசுத்தமான பெண்களுக்கும் தகுமானவர்கள்.'' (குர்ஆன், 24:26) மேலும் அவன் கூறுகின்றான். ''(ஓரே விதமான மழை பெய்த போதிலும் வளமான பூமி தன் இறைவனின் கட்டளையைக் கொண்டே தனது புற் பூண்டுகளையும் வெளிப்படுத்துகின்றது''. (குர்ஆன், 7:58) இதனால் திருக்குர்ஆன் புறவய அம்சமும் அகவய அம்சமும் கொண்டதென்பதும், அகவய அம்சம் பல அர்த்தத்தங்களைக் கொண்டதென்பதும் பிரத்தியட்சமாகின்றது. திருமறையின் உள்ளடக்கத்தை விளக்கும் ஹதீஸ் இலக்கியமும் இப்பல்வேறு அம்சங்களைக் கொண்டுள்ளது.

குர்ஆன் விரிவுரையின் அடிப்படைகள்

குர்ஆன் வசனங்களின் வெளிப்படையதார்த்தத்தைப் புறக்கணித்து அதற்கு மாற்றமான கருத்தைப் - போதிய காரணமிருப்பின் வழங்கலாமென இஸ்லாத்தின் தொடக்கத்தில் சில ஸுன்னிகள் பொதுவாக நம்பினர். வழக்கமாக குர்ஆனின் வெளிப்படையான சொற்பொருளுக்கு முரணானஅர்த்தம் த.்.வீல் என அழைக்கப்பட்டது. '' குர்ஆனில் த.்.வீல்'' என்பது வழக்கமாக இவ்வாறு தான் ஸுன்னியிஸத்தில் விளங்கிக் கொள்ளப்பட்டது.

குறிப்பிட்டவொரு பிரிவைச் சேர்ந்த உலமாக்களின் ஏகோபித்த அபிப்பிராயம் மூலம் அல்லது வேறுவகைகளில் நிறுவப்பட்ட குறிப்பிட்டவொரு கோட்பாட்டம்சம் குர்ஆன் வசனமொன்றின் வெளிப்படையர்த்தத்திற்கு மாற்றமானதாய் இருப்பின் அதற்குத் த.்.வீல் முறைப்படி அர்த்தங்கூறப்பட்ட தென்பதனையும், இவ்வர்த்தம் அதன் வெளிப்படையான அர்த்தத்துக்கு முரணானதாயிருந்த தென்பதனையும் ஸுன்னி அறிஞர்களின் மதநூல்களிலும், பல்வேறு பிரிவினர்கள் மத்தியில் நடந்ததாகப் பதிவாகியுள்ள சர்ச்சைகளிலும் ஒருவர் அவதானிக்க முடியும். சில சந்தர்ப்பங்களில், தர்க்கிக்கும் இருதரப்பினரும் எதிரெதிர் கருத்துக்களை ஆதரித்துத் தத்தம் வாதங்களை நிறுவுவதற்காக மறைவசனங்களையே ஆதாரங் காட்டுவதுண்டு. ஒவ்வொரு தரப்பினரும் மறுதரப்பினர் எடுத்துக்காட்டும் குர்ஆன் வசனங்களுக்குத் த.்.வீல் முறைப்படி அர்த்தம் கற்பிப்பதுண்டு. இம்முறை ஷீஆயிஸத்தினுள்ளும் ஊடுருவியுள்ளது. சில ஷீஆ நூல்களில் இதனைக் காணமுடியும்.

எனினும் திருமறை தன் கவர்ச்சியான, சொல்லலங்காரமான, தெளிவான வெளிப்பாடுகளில் விடுகதைபோன்று புதிர்போடும் முறைகளை ஒருபோதும் பிரயோகிக்கவில்லை. குறிப்பிட்டவொரு விடயத்தை விளக்குவதற்கு அவ்விடயத்துக்குப் பொருத்தமான மொழியையே திருமறை பிரயோகிக்கின்றது. புனிதத் திருமறையின் அர்த்த

விற்பத்தியான விளக்கம் அல்லது த.்.வீல் என்பது சரியான முறையில், வெறுமனே சொற்கள் குறிப்பனவற்றோடு சம்பந்தப்பட்டதன்று, அது சாதாரண மக்களின் அறிவுக்கு அப்பாற்பட்ட சில உண்மைகளுடன் யதார்த்தங்களுடன் சம்பந்தப்பட்டது. எனினும் இவ்வுண்மைகளிலும் யதார்த்தங்களிலுமிருந்து திருமறையின் கோட்பாட்டினதும் நடைமுறைக் கட்டளைகளினதும் அடிப்படைகள் வெளியாகின்றன. மறைவசனங்களிலும் நபிக்குடும்பத்தினரின் ஹதீஸ்களிலும் போதிய ஆராய்ச்சி இதனைத் தெளிவாக்கும்.

முழுக் குர்ஆனும் த.்.வீல்- அந்தரங்க அர்த்தம்-கொண்டது. நேரடியான மனித சிந்தனையால் மட்டும் அதனை விளங்கிக் கொள்ளமுடியாது. மனிதக் குறைபாடுகளிலிருந்து விடுபட்ட நபிமார்களால், தூய இறைஞானிகளால் மட்டுமே இவ்வுலகவாழ்வின் போது அவற்றின் அர்த்தத்தை விளங்கிக் கொள்ள முடியும். மீண்டும் உயிர்ப்பிக்கப்படும் நாளில் குர்ஆனின் த.்.வீல் அனைவர்க்கும் அறிவிக்கப்பட்டுவிடும்.

மனிதன் பேச்சை உபயோகிக்குமாறு, வார்த்தைகளை உருவாக்குமாறு, கருத்துக்களை வெளியிடுமாறு அவனைத்தூண்டுவது அவனது சமூகப்பொருளாயதத் தேவைகளேயன்றி வேறில்லையென்ற உண்மையைச் சுட்டுவதன் மூலம் இவ்வுறுதிப்பாட்டை விளக்கமுடியும். சமூக வாழ்வில் மனிதன் தன்சிந்தனைகளை, நோக்கங்களை, உணர்வுகளைச் சகமனிதனுக்குப் புரியவைக்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறான். இதற்தாக ஒலிகளையும் செவிப்புலனையும் பயன் படுத்துகிறான். இடையிடையே ஓரளவு கண்களையும், சைகைகளையும் உபயோகிக்கின்றான். இதனால்தான் ஊமைக்கும் செவிடனுக்கு மிடையே பரஸ்பரப் புரிந்துணர்வு இருக்கமுடிவதில்லை. குருடன் கூறுவது செவிடன் காதில் விழுவதில்லை. ஊமை காட்டும் சைகை குருடனுக்குத் தெரிவதில்லை.

பெரும்பாலாக பொருளாயதக் குறிக்கோள்களை நோக்காகக்

கொண்டதாகவே சொற்கள் உருவாகின. பொருட்களுக்குப் பெயர்கள் இடப்பட்டன. புலன்களால் அறியக்கூடிய பொருளாயதமான பொருட்கள், பண்புகள், நிலைமைகள் முதலியவற்றை புரிந்துகொள்வதற்காகவே வார்த்தைகள் உருவாக்கப்பட்டன. யாரை விளித்துப் பேசப்படுகின்றோ அவர் புலனுணர்வுகளில் ஒன்று குறைந்தவராக விருப்பின், அவரிடம் குறைப்பாடாயுள்ள அப் புலனுணர்வால் மட்டுமே அறிந்துகொள்ளக் கூடிய விவகாரங்களையிட்டு அவருடன் பேசவிரும்பினால் ஒருவகை ஒட்டுவமையை, ஒப்பனைகளை நாம் பயன்படுத்துகிறோம். உதாரணமாக பிறவிக்குருடரான ஒருவருக்கு ஒளியைப் பற்றி அல்லது வர்ணங்களைப் பற்றி விவரிக்க விரும்பினால், அன்றேல் பருவ வயதையடையாத ஒரு பிள்ளைக்குப் பாலியல் இன்பங்கள் பற்றி விவரிக்க விரும்பினால் ஒப்புவமைகள் மூலம் பொருத்தமான உதாரணங்களை வழங்கி நாம் நம் நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள முயல்வோம்.

எனவே, இப்பிரபஞ்ச இருப்பில் சடப்பொருள் உலகிலிருந்து சுயாதீமான யதார்த்தங்களின் எண்ணற்ற தளங்கள் உண்டு என்ற கருதுகோளை நாம் ஏற்றுக் கொண்டால், இவ்யதார்த்தங்களிலும் தரிசனத்தைப் பெறக்கூடியவர்கள் ஒவ்வொரு தலை முறையிலும் ஒரு சிலர் உளர் என்பதையும் நாம் ஏற்றுக் கொண்டால், அப்போது இவ்வுயர் உலகங்கள் சம்பந்தமான விவகாரங்களைப் பொதுவான வார்த்தை வெளிப்பாடுகளாலும், சிந்தனை முறைகளாலும் நாம் புரிந்து கொள்வது முடியாத காரியம். சாடைகளாலும் குறியீடுகளாலுமே யன்றி வேறு வகைகளில் அவற்றைக் குறிப்பிடமுடியாது. மத யதார்த்தங்கள் இத்தன்மையனவாதலால் திருமறையில் இவ்விவகாரங்கள் குறியீட்டுத்தன்மையான திருஷ்டாந்தங்களாகவே இருக்க வேண்டியது அத்தியாவசியமாயிற்று.

''(மக்கா வாசிகளே!) நீங்கள் (எளிதில்) அறிந்து கொள்ளும் பொருட்டே இந்தக் குர்ஆனை (நீங்கள் பேசும் உங்களுடைய) அரபி மொழியில் அமைத்தோம். நிச்சயமாக இது நம்மிடத்தில் உள்ள ('லவ்ஹுல் மஹ்ஃபூன்' என்னும்) தாய் நூலில் (பதிவு

செய்யப்பட்டு) இருக்கிறது. (குர்ஆன்,43:3,4) மேலும் அவன் கூறுகின்றான். '' நிச்சயமாக இது மிக்க அண்ணியமுள்ள குர்ஆனாகும். (இது 'லவ்ஹுல் மஹ்ஃபூன்' எனும்) பாதுகாக்கப்பட்ட புத்தகத்தில் (எழுதப்பட்டுள்ளது) பரிசுத்தவான்களைத் தவிர (மற்றெவரும்) இதனைத் தொடமாட்டீர்கள். (குர்ஆன், 56:77,78,79) திருநபியையும் நபிக்குடும்பத்தினரையும் பற்றி அவன் கூறுகிறுன் '' எல்லா அசுத்தங்களளையும் உங்களிடமிருந்து தூர அகற்றுதற்கே அல்லாஹ் விரும்புகிறான் அஹ்லுல் பைத்தினரே (நபிக் குடும்பத்தினரே) முழுமையான சுக்திகரிப்பால் உங்களைச் சுத்தப்படுத்திக் கொள்ளுங்கள்'' (குர்ஆன் 33-33).

இத்திருவசனங்களினால் நிரூபிக்கப்பட்டதுபோல், சாதாரண மனிதனது அறிவுக்கு அப்பாற்பட்ட ஆதாரத்திலிருந்தே அல்குர்ஆன் ஊற்றெடுக்கின்றது. தூய்மைப்படுத்தவென இறைவனால் தேர்ந்ததெடுக்கப்பட்ட அவனது நல்லடியார்களேயன்றி வேறெவராலும் குர்ஆனை முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாது. திருநபியின் குடும்பத்தார் அத்தூயோர்களைச் சேர்ந்தோராவர்.

பிறிதோரிடத்தில் இறைவன் கூறுகின்றுன்: ''இல்லை, ஆனால் அவர்கள் அதனை (குர்ஆனை) மறுதலித்தனர். அதன் அறிவை அவர்களால் மட்டிடமுடியவில்லை. அதிலுள்ள (சம்பவங்களின்) அர்த்தம் இன்னும் அவர்களுக்குக் கிடைக்கப்பெறவில்லை'' (குர்ஆன் 10:39). (மீண்டும் உயிர்ப்பிக்கப்படும் நாளில் அவற்றின் உண்மை அறிவிக்கப்படும் என இதனால் அர்த்தமாகின்றது)....மீண்டும் அவன் கூறுகின்றுன்: அந்த நாளில் (மீண்டும் உயிர்ப்பிக்கப்படும் நாளில்) (முழுக்குர்ஆனினதும் தஃவீல்) பூரணமாக வெளிவரும் போது, முன்பு ஞாபக மறதியாவிருந்தோர் அப்போது கூறுவர்: நமதிறைவனின் தூதர்கள் எம்மிடம் சத்தியத்தையே கொண்டு வந்தனர்!'' (குர்ஆன், 7:53)

ஹதீஸ்

ஹதீஸ் உறுதியானது என்ற, அல்குர்ஆனால் உறுதிசெய்யப்பட்ட அடிப்படை ஷீஆக்கள் மத்தியிலும் அல்லது அனைத்து முஸ்லிம்கள் மத்தியிலும் மறுக்கப்படாத உண்மையாகும். எனினும் ஹதீஸைப் பாதுகாத்துப் பேண ஆரம்ப இஸ்லாமிய ஆட்சியாளர் சிலர் தவறியமையினாலும், நபித்தோழர்களிலும் நபியைப் பின்பற்றியோறிலுமிருந்து ஒரு கூட்டதினர் ஹதீஸ் இலக்கியத்தைப் பரப்புவதில் அத்துமீறிச் சென்ற படியாலும் ஹதீஸ்கள் சிரமங்களுக்குள்ளாயின.

ஒருபுறம் அக்காலக் கலீபாக்கள் ஹதீஸ்கள் எழுதிவைக்கப்படுவதைத்தடுத்ததோடு எழுதிவைக் கப்பட்டிருந்த ஹதீஸ்களைத் தீயிலிடுமாறும் ஆணையிட்டனர். சில சமயங்களில்ஹதீஸ்களைப் பரப்புவதற்கும் கற்பதற்குமான நடவடிக்கைகள் அதிகரிப்பது கூட தடைசெய்யப்பட்டது.[21] இவ்விதமாகக் கணிசமான அளவு ஹதீஸ்கள் மறக்கப்பட்டன. அல்லது இல்லாதொழிந்தன. ஒருசில தவறானமுறையில் திரித்தும் கொச்சைப் படுத்தியும் அறிவிக்கப்பட்டன. மறுபுறம் நபித்தோழர்களில் மற்றொரு கூட்டத்தினர் மத்தியில் இன்னொரு போக்கு காணப்பட்டது. இவர்கள் பெருமானாரை நேரடியாகக்காணவும், பெருமானாரின் வாய்மொழியாகவே ஹதீஸ்களைக் கேட்கவும் வாய்ப்புப் பெற்றவர்கள். கலீபாக்களாலும், முஸ்லிம் சமூகத்தாலும் மதித்துப் போற்றப்பட்ட இக்குழுவினர், ஹதீஸைப்பாதுகாப்பதற்கு தீவிர முயற்சிகள் மேற்கொண்டனர். குர்ஆனையும் அதன் வசனங்களின் கட்டளைகளையும்விட ஹதீஸுக்கு அதிக முக்கியத்துவமளிக்கும் அளவுக்கு இப்போக்கு காணப்பட்டது. குர்ஆனையும் அதன் வசனங்களையும் ஹதீஸ்கள் மேல்விசாரணை செய்து மாற்றுகின்றன என்று கூட சிலர் கருதினர்[22]. ஹதீஸ் அறிவிப்பாளர்கள் ஒரு ஹதீஸைச் சேகரிப்பதற்காக வேண்டி அடிக்கடி அநேக மைல்கள் பிரயாணஞ் செய்து பெருங்கஷ்டங்களையெல்லாம் சகித்துக்கொண்டனர்.

இஸ்லாமிய வேடந்தரித்த அந்நியக் கோஷ்டியொன்று சில

ஹதீஸ்களைத் திரித்துக் கூறத்தலைப்பட்டு, கேட்டறியப்பட்ட ஹதீஸ்களின் ஆதார பூர்வ தன்மைக்குப் பெரிதும் பங்கம் விளைவித்தனர். இவர்களுட் சிலர் இஸ்லாமிய அணியினுள்ளிருந்தே முளைத்த விரோதிகளாவர்[23]. இதனால் முஸ்லிம் அறிஞர்கள் இதற்கான தீர்வொன்றை ஆயத்தலைப்பட்டனர். உண்மையான ஹதீஸ்களையும் போலி ஹதீஸ்களையும் இனம் பிரித்துக் காணும் வகையில் ஹதீஸ் பெறப்பட்ட அறிவிப்புமுறையின் சங்கிலித்தொடருடனும் கற்ற அறிஞர்களது வாழ்க்கைச் சரிதையுடனும் சம்பந்தப்பட்ட அறிவுத்துறையொன்றை அவர்கள் உருவாக்கினர்[24].

ஹதீஸின் ஆதார பூர்வத்தை நிறுவும் ஷீஆ முறை

ஷீஆக்கள் ஹதீஸ் அறிவிப்பின் சங்கிலித் தொடர் ஆதாரபூர்வமான தென நிறுவும் அதே வேளை, அதன் உறுதிப்பாட்டுக்கு அதனைக் குர்ஆனுடன் தொடர்புப்படுத்திப் பார்ப்பதும் அத்தியாவசியம் எனக் கருதுகின்றனர். குர்ஆனுக்கு மாற்றமான ஹதீஸ் பெறுமதியற்றதென உறுதிப்படுத்தும் திருநபியினதும் இமாம்களினதும் சங்கிலித் தொடரான ஆதார பூர்வமாய்ப் பெறப்பட்ட ஹதீஸ்கள் அநேகம் ஷீஆ ஆதாரங்களில் காணப்படுகின்றன. குர்ஆனுக்கு உடன்பாடான ஹதீஸ் மட்டுமே உறுதியானதாய்க்கருதப்படும்[25].

இந்த ஹதீஸ்களின் அடிப்படையில் ஷீஆயிஸம் குர்ஆனுக்கு மாற்றமான ஹதீஸ்களை ஏற்றுக் கொள்வது கிடையாது. உடன்பாட்டையோ உடன் பாடின்மையையோ நிறுவமுடியாத ஹதீஸ்களைப் பொருத்தவரை இமாம்களிடமிருந்து பெறப்பட்ட அறிவுறுத்தல்களின் படி ஏற்றுக்கொள்ளவோ நிராகரிக்கவோ படாமல் அவற்றையிட்டு மௌனஞ்சாதிக்கப்படுகிறது.[26] பல்வேறு பாரம்பரிய ஆதாரங்களிலுமிருந்து பெறப்படும் எந்தவொரு ஹதீஸையும் ஏற்று நடக்கும் ஒரு கூட்டத்தார் ஸுன்னிகள் மத்தியில் இருப்பது போன்று ஷீஆக்கள் மத்தியிலும் உள்ளனர்.

ஹதீஸைப் பின்பற்றுவதில் ஷீஆயிஸ முறை

திருநபியின் வாய் மொழியாக அல்லது இமாம்களி லொருவரின் வாய்மொழியாகக் கேட்கப்பட்ட ஹதீஸ், திருக்குர்ஆனைப் போன்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இடைப்பட்டவர்களின் அறிவிப்புகள் மூலம் பெறப்பட்ட ஹதீஸ்களைப் பொருத்தவரை, அவ்வறிவிப்பின் சங்கிலித்தொடர் படிப்படியாக நிறுவப்பட்டால், அல்லது அவற்றின் உண்மைகுறித்து திட்டவட்டமான அத்தாட்சியிருந்தால், அவை திருக்குர்ஆனின்படி, அறிவும் உறுதிப்பாடும் தேவையான கோட்பாட்டு அடிப்படைகளோடு சம்பந்தப்பட்டவையாயிருந்தால், பெரும்பான்மையான ஷீஆக்கள் அவற்றையேற்று நடப்பர். இவ்விரு வகை ஹதீஸ்களைத்தவிர வேறெந்த ஹதீஸும் கோட்பாட்டு அடிப்படைகள் சம்பந்தமாய் எத்தகைய உறுதிப்பாடும் கொண்டதல்ல. உறுதியற்ற ஹதீஸ் ''ஒற்றை அறிவிப்பாளர் கொண்ட மரபு'' (ஹபர் வாஹித்) எனப்படும், என்ற போதிலும் (கோட்பாட்டு அடிப்படைகள் சம்பந்தமாய் அல்லாமல்) ஷரீஅத் விதிகளை நிறுவும் விஷயத்தில், முன்னர் கூறப்பட்ட காரணங்களால், நம்பகமானதெனப் பொதுவாக ஏற்றுக் கொள்ளபட்ட மரபையும் ஷீஆக்கள் ஏற்று நடப்பர். எனவே, ஷீஆக்களைப் பொருத்தவரை திட்டவட்டமாக நிறுவப்பட்டவொரு ஹதீஸ் முற்றாகக் கட்டுப்படுத்தக் கூடியதும் பின்பற்றப்பட வேண்டியதுமாகும். அதேவேளை பூரணமாக நிறுவப்படாத ஆனால் நம்பகமானதெனப் பொதுவாகக் கருதப்படுகிற ஹதீஸ் ஷரீஅத் விதிகளின் விரிவாக்கத்துக்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.

இஸ்லாத்தில் கற்றலும் கற்பித்தலும்

அறிவைப் பெறுவது மதக் கடமைகளிலொன்றாகும். ''அறிவைத் தேடுவது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமை'' எனப் பெருமானார் மொழிந்தார்கள்.[28] இந்நபி மொழியை முழுமையாக விளக்கும் நிறுவப்பட்ட ஹதீஸ்களின் படி அறிவென்பது இங்கு இஸ்லாத்தின் மூன்று அடிப்படைகளைக் குறிக்கும். அவை ஒருமை அல்லது தவ்ஹீத்; நபித்துவம் அல்லது

நுபுவ்வத்; மீண்டும் உயிர்ப்பிக்கப்படல் அல்லது மஆத். இவ்வடிப்படைகளுடன் சேர்ந்து துணைக்கிளைகளைப் பற்றியும் இஸ்லாமிய சட்டங்களது விதிகளது விபரங்கள் பற்றியும் தம் தனிப்பட்ட சூழ்நிலைகளுக்கும் தேவைகளுக்குமேற்ப அறிவைப் பெறுமாறு முஸ்லிம்கள் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

ஓரளவுக்கு சுருக்கமாக வேனும் மதஅடிப்படைகள் பற்றிய அறிவைப்பெறுதல் ஒவ்வொருவராலும் முடியும் என்பது வெளிப்படை. ஆனால், திருமறையையும் ஸுன்னாவையும் அடிப்படை ஆவணங்களாக உபயோகிப்பதன் மூலமும் அவற்றை அடிப்படையாகக் கொண்ட நுட்ப விசாரணை (அல்லது ஃபிக்ஹி இஸ்தித்லாலி-சுட்டுதலான நீதித்துறை என்றழைக்கப்படுவதன்) மூலமும் மதச்சட்டங்கள் விதிகள் பற்றி விரிவான அறிவைப் பெறுவதென்பது எல்லா முஸ்லிம்களாலும் சாத்தியமில்லை. சுட்டுதலான நீதித்துறைக்கான ஆற்றலை, ஒருசிலரே பெற்றுள்ளனர். இவ்வளவு விவரமான அறிவு எல்லோரிடமும் எதிர்ப்பார்க்கப்படுவதில்லை. சக்திக்கு மீறிய காரியத்தில் ஒருவரை இழுத்துவிடும் கட்டளையெதுவும் இஸ்லாத்தில் கிடையாது. ஆகவே, அறிவாராய்ச்சியின் மூலமாக இஸ்லாமியச் சட்ட விதிகளைக் கற்றறியும் பணி "போதியளவு தேவை" (வாஜிப் கிஃபாய்) என்ற கொள்கைமூலம் அவ்வறிவைப் பெறுவதற்கான ஆற்றலும் தகுதியும் கொண்ட சிலர்க்கென மட்டிடப்பட்டுள்ளது. தெரியாதோர் தெரிந்தோரில் தங்கியிருக்க வேண்டுமென்ற பொதுவான நியதிக்கொப்ப, ஏனைய மக்களின் கடமை, முஜ்தஹித் அல்லது ஃபக்கீஹ் என அழைக்கப்படும் தகுதியும் ஆற்றலும் வாய்ந்த அறிஞர்களிடமிருந்து வழிகாட்டலைப் பெறுவதாகும். இவ்வாறு முஜ்தஹித்களைப் பின்பற்றுதல் தக்லீத் எனப்படுகின்றது. மத அடிப்படைகள் சம்பந்தமாய் திருமறையில் தடுக்கப்பட்டுள்ள பின்பற்றும் முறையிலிருந்து இப் பின்பற்றல் வித்தியாசப்படுகின்றதென்பது உண்மை. "(நபியே) நீர் அறியாத விஷயத்தைப் பின்பற்றாதே..." (குர்ஆன் *17:36*)

உயிருடனில்லாத ஒரு முஜ்தஹிதைப் பின்பற்றுவதை ஷீஆயிஸம் அனுமதிப்பதில்லையென்பது அறியப்படல்

வேண்டும். அதாவது இஜ்திஹாத் மூலமும் ஒருபிரச்சனைக்குத் தீர்வுகாண முடியாதவர், முஜ்தஹித் ஒருவர் உயிருடன் இருக்கையில் அவரிடம் வழிகாட்டல் பெற்றிருந்தாலொழிய, வாழும் முஜ்தஹித் ஒருவரையே பின்பற்றுதல் வேண்டும் என்பது மதக்கடமை. இவ்வழக்கம், காலங்கள் தோறும் ஷீஆ நீதித்துறையை ஜீவனோடும் புதுமை மாறாமலும் வைத்திருக்கும் காரணிகளிலொன்றாகும். இஜ்திஹாத் என்னும் சுதந்திரத் தீர்ப்பு முறையைப் பின்பற்றி நீதித்துறை பற்றிய பிரச்சினைகளில் ஆழமாகச் சென்ற தனிமனிதர்கள் தலைமுறை தலைமுறையாக இருந்து வந்துள்ளனர்.

ஸுன்னத் ஜமாஅத்தில், 4ம்/10ம் நூற்றாண்டில் தோன்றிய ஏகோபித்த அபிப்பிராயம் (இஜ்மா.:.) காரணமாக, அபூஹனி.:.பா, இப்னுமாலிக், அல் ஷா.:.பி, அஹ்மத் இப்னு ஹன்பல் ஆகியோரின் நான்கு மத்ஹபுகளில் ஒன்றுக்குக் கட்டுப்படவேண்டிது அவசியமாயிற்று. இந்நான்கு மத்ஹபுகள் அல்லாத (ஒன்றிரண்டு சிறியமத்ஹபுகள் பின்னர் மறைந்துபோயின) ஏதாவதொன்றினைப் பின்பற்றுவதோ அல்லது சுதந்திர இஜ்திஹாதைக் கடைப்பிடிப்பதோ அனுமதிக்கப்படாததாகக் கருதப்பட்டது. இதன் விளைவாக ஸுன்னத் ஜமாஅத்தினரின் நீதித்துறை சுமார் 1100 வருடங்களுக்கு முன்பிருந்ததுபோல அதே நிலையிலேயே இருந்து வந்துள்ளது. எனினும் சமீப காலங்களில் ஸுன்னத் ஜமாஅத்தைச் சேர்ந்த சிலர் இவ்வேகோபித்த அபிப்பிராயத்திலிருந்து அப்பாற் சென்று சுதந்திரமான இஜ்திஹாதைப் பிரயோகிக்கத் தொடங்கியுள்ளனர்.

ஷீஆயிஸமும் அறிவிக்கப்பட்ட அறிவுத்துறைகளும்

இஸ்லாமிய அறிவுத்துறைகள் அவற்றின் வாழ்வுக்காக அவற்றை உருவாக்கிய இஸ்லாமிய உலமாக்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளன. இவ்விஸ்லாமிய அறிவுத்துறைகள் இருவகைகளாகப் பிரிக்கப்படும். ஒன்று அறிவார்ந்தது (அக்லி) மற்றது அறிவிக்கப்பட்டது (நக்லி). தத்துவம் கணிதம் போன்றவை அறிவார்ந்தனபாற்படும். அறிவிக்கப்பட்ட

அறிவியல் என்பது மொழி, ஹதீஸ், வரலாறு முதலியவை போன்று ஏதாவது ஆதாரத்திலிருந்து அறிவிக்கப்படுவதில் தங்கியுள்ளவையாகும். அறிவிக்கப்பட்ட அறிவுத்துறைகள் தோன்றுவதற்கும் திருமறையே பிரதான காரணமென்பதில் ஐயமில்லை. வரலாறு, மரபு வழி, யாப்பியல் போன்ற ஒரு சில துறைகள் தவிர்ந்த ஏனைய அறிவிக்கப்பட்ட அறிவுத்துறைகள் யாவும் புனிதத்திருமறையின் செல்வாக்கின் கீழேயே தோன்றியுள்ளன. இவ்வறிவுத்துறைகளை முஸ்லிம்கள் விருத்தி செய்தனர். இவற்றுள் மிகமுக்கியமானவை அரபு இலக்கியமும் (இலக்கணம், சொல்லியல், உவமையியல்) மதத்தின் புறவம்சத்துடன் சம்பந்தப்பட்ட (குர்ஆன் ஓதல், குர்ஆன் விளக்கவுரை (த∴ப்ஸீர்), ஹதீஸ், பெரியார்கள் சரிதை, ஹதீஸ்களின் சங்கிலித்தொடர் முறை, நீதித்துறையின் அடிப்படைக் கொள்கைகள்) அறிவுத் துறைகளுமாகும்.

இவ்வறிவுத்துறைகளுக்கு அடித்தளமமைத்து அவற்றை நிலைநிறுத்துவதில் ஷீஆக்கள் முக்கிய பங்கு வகித்தனர். வாஸ்தவத்தில், இவ்வறிவுத்துறைகள் பலவற்றை உருவாக்கியவர்களும் தாபித்தவர்களும் ஷீஆக்களே. நபித் தோழர்களில் ஒருவரான அபுல்-அஸ்வத் அல்-துஆலி என்பவராலும் அலீ (அலை) அவர்களாலும் அரபுமொழியிலக்கணம் ஒழுங்கமைக்கப்பட்டது. அரபு இலக்கணத்தை ஒழுங்கமைப்பதற்கு அலீ (அலை) வரையறை வகுத்துக் கொடுத்தார்.[30] புயித்களின் தலைவராக விருந்த ஒரு ஷீஆவான ஸாஹிப் இப்னு அப்பாத் நாவன்மை (சொல்லலங்காரம், உவமையியல்) என்ற துறையின் ஸ்தாபகர்களில் ஒருவராவர்.[31] கித்தாபுல் ஐன் என்ற முதல் அரபு மொழியிலக்கண நூல் ஒரு ஷீஆவும் பிரபல அறிஞருமான கலீப் இப்னு அஹ்மத் அல்-பஸ்ரி என்பவரால் தொகுக்கப்பட்டது. யாப்பிலக்கணத்தை உருவாக்கியவரும் இவரே. மாபெரும் இலக்கண மேதையான, ஸிபுவைஹ் வின் ஆசிரியரும் இவரே.

ஆஸிமின் குர்ஆன் ஓதல் இடையில் ஒருவர் மூலம் அலீயிலிருந்து தொடங்குகிறது. ஹதீஸில் நபித் தோழர்களிடையே முன்னணியில் நிற்கும் அப்துல்லாஹ் இப்னு

அப்பாஸ் அலீயின் மாணாக்கராவர். ஹதீஸ்துறையிலும், நீதித்துறையிலும் நபிக்குடும்பத்தினரதும் அவர்களைச் சார்ந்தோரதும் பங்களிப்பு மிகவும் பிரசித்தமானது. ஸுன்னத் ஜமாஆத்தைச் சேர்ந்த நான்கு மத்ஹபுகளின் ஸ்தாபகர்கள் ஐந்தாம் ஆறாம் ஷீஆ இமாம்களுடன் தொடர்பு வைத்திருந்தமை அறிந்ததே. நீதித்துறையின் அடிப்படைகளில் ஷீஆ அறிஞர் அவாஹித் பிஹ்பஹானி ஈட்டிய மகத்தான முன்னேற்றங்கள் தொடர்ந்து ஷெய்க் முர்தஸா அன்ஸாரியால் விருத்தி செய்யப்பட்டு மற்றவைகளை விட சிறந்து விளங்குகின்றன.

இரண்டாவது முறை

அறிவு பூர்வ விசாரணையின் வழி

ஷீஆயிஸத்தில் தத்துவ, மதவியல் சிந்தனை

பகுத்தறிவுச் சிந்தனையை இஸ்லாம் அங்கீகரித்து அதனைச் சட்டபூர்வமாக்கியுள்ள தென்பதும், அதனை இஸ்லாம் மதச்சிந்தனையின் ஒரு பகுதியாகக் கருதுகின்றதென்பதும் ஏலவே குறிப்பிடப்பட்டுள்ளது. பகுத்தறிவுச் சிந்தனை அதன் இஸ்லாமிய அர்த்தத்தில் நபியின் நபித்துவத்தை உறுதிப்படுத்திய பின், இறையறிவிப்பான திருக்குர்ஆனின் புறவுறுதிப்பாட்டுக்கும், திட்டவட்டமாக ஸ்தாபிக்கப்பட்ட திருநபியினதும் அன்னார் குடும்பத்தினரினதும் வாய்மொழிகளின் உறுதிப்பாட்டுக்கும் அறிவுபூர்வமான அத்தாட்சிகளை வழங்குகின்றது.

இறைவனால் அருளப்பட்ட இயல்பான தன்மை மூலம் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண உதவும் அறிவுபூர்வ அத்தாட்சிகள் இருவகைப்படும்: அவையாவன; தெளிவு படுத்தல் (புர்ஹான்), தர்க்கமுறை (ஜதல்). தெளிவு படுத்தல் ஓர் அத்தாட்சியாகும். அதன் எல்லைகள் அவதானிக்கக் கூடியவையாய் அல்லது பிரத்தியட்சமானவையாய் இல்லாவிடினும் அவை உண்மையானவையே (யதார்த்தத்துக்கு இசைவானவையே) யாகும். வேறுவார்த்தைகளில் அது தேவை காரணமாக இறைவன் அருளிய அறிவைக் கொண்டு விளங்கிக்

கொள்வது. உதாரணமாக, மூன்று என்ற எண் நான்கை விடக் குறைந்தது என்று அவன் அறிந்துள்ள போது- அது உறுதிப்படுத்திக் கொள்ளும் ஒரு பிரமேயம் ஆகும். இவ்வகைச் சிந்தனையே பகுத்தறிவுச் சிந்தனை. உலகின் மனிதனின் தோற்றமும் முடிவும் போன்ற இருப்பு நிலை பற்றிய அகிலப் பிரச்சனைகளோடு சம்பந்தப்படும் போது இச்சிந்தனை தத்துவச் சிந்தனையென அறியப்படுகின்றது.

தர்க்கமுறை என்பது ஓர் அத்தாட்சியாகும். அதன் முழு அல்லது பகுதி எல்லைகள் அவதானிக்கக் கூடிய நிச்சயமான தரவுகளைக் கொண்டவை. தங்கள் மதத்தின் நிச்சயமான, பிரத்தியட்சமான கொள்கைகளைக் காட்டுவதன் மூலம் அம்மதத்தின் மதக்கருத்துக்களை நிரூபிப்பதைப் பொதுவான பழக்கமாகக் கொண்ட மதவிசுவாசிகளின் வாடிக்கை இதற்கு நல்லுதாரணமாகும்.

புனிதத் திருமறை இவ்விருமுறைகளையும் எடுத்தாள்கிறது. அனைத்து வகை அத்தாட்சிகளையும் உறுதிப்படுத்தும் மறைவசனங்கள் அநேகம் உள. எல்லாவற்றுக்கும் முதலில், சடவுலகின் அகில அடிப்படைகளையும், பிரபஞ்ச முறைமையின் பொதுவான அடிப்படைகளையும், இன்னும், குறிப்பாக வான மண்டலம், நட்சத்திரங்கள், இரவுபகல், பூமி, தாவரங்கள், மனிதர்கள் இத்தியாதி பற்றிய முறைமைகளையும் சுதந்திரமாகப் பரிசீலனை செய்யும் படி, அவை பற்றிச் சிந்திக்கும் படி திருக்குர்ஆன் கட்டளையிடுகின்றது. இவ்விவகாரங்களையிட்டு அறிவுபூர்வமான விசாரணை புரிவதை குர்ஆன் மிகச் சாதுரியமான மொழியில் பாராட்டுகின்றது.

இரண்டாவதாக, தர்க்கமுறை சிந்தனையைப் பிரயோகிக்குமாறு குர்ஆன் கட்டளையிடுகின்றது. இது வழக்கமான இறையியல் (கலாமி)[32] கருத்தாடல் எனப்படுகின்றது, ஆனால் அது தேவையான ஒழுக்கப்பண்புகள் கொண்ட மனிதர்களால் வாக்குவாதமின்றி சத்தியத் தொழிற்பாட்டை நோக்கமாகக் கொண்டு முடிந்தவரை மிகச்

சிறந்த முறையில் நடத்தப்படல் வேண்டும். திருமறை கூறுகின்றது: ''(நபியே!) நீர் (மனிதர்களை) நளினமாகவும் அழகான நல்லுபதேசத்தைக் கொண்டுமே உம் இறைவனின் வழியின் பால் அழைப்பீராக அன்றி அவர்களுடன் (தர்க்கிக்க நேரிட்டால் நீர் (கண்ணியமான) அழகான முறையில் தர்க்கஞ் செய்வீராக.'' (குர்ஆன், 16:125)

கலாமிலும் தத்துவத்திலும் ஷீஆக்களின் முதல் முயற்சி

கலாம் என்னும் இறையியலைப் பொருத்தவரை, ஷீஆக்கள் ஸுன்னிப் பெரும்பான்மையினரிடமிருந்து பிரிந்தபோது, தொடக்கத்திலிருந்தே தங்கள் கருத்தை முன்வைத்து எதிர்த்தரப்பினருடன் தங்கள் கருத்தை வாதிக்கத் தொடங்கினர். விவாதம் இருபக்கங்களைக் கொண்ட தென்பதும் இரு எதிர்த்தரப்பினர்க்கும் அதில் பங்குண்டு என்பதும் உண்மை. என்ற போதிலும் ஷீஆக்களே பிரயாசையுடன் வாதத்தை முன்வைத்துத் தொடர்ந்து தாக்குதல் தொடுத்துவந்தனர் . அதேவேளை மறுதரப்பினரோ பிரதிவாதிகளாய் தற்காப்பு நிலையையே யெடுத்தனர். 2ம்/8ம், 3ம்/9ம் நூற்றாண்டுகளில் மு.்.தஸிலாக்களின் வளர்ச்சியுடன் உச்ச கட்டமெய்திய கலாம் படிப்படியாக வளர்ச்சியுற்றபோது, நபிக்குடும்பத்தினரின் மாணவர்களான ஷீஆ அறிஞர்களும், கல்விமான்களும் கலாமில் மிகச் சிறந்த மேதைகளாய் மிளிர்ந்தனர்.[33] மேலும், ஸுன்னத் ஜமாஅத்தைச் சேர்ந்த மத அறிஞர்களின் சங்கிலித்தொடர் வரிசை, அது அஷ்அரிய்யாக்களாயிருப்பினும், மு.்.தஸிலாக்களாயிருப்பினும் ஷீஆக்களின் முதல் இமாம் அலீ (அலை) யிலிருந்தே தொடங்குகிறது.

மெய்யியலைப் பொருத்தவரை,[34] நபித் தோழர்களது (இவர்கள் 120,000 பேர்கள் என அறியப்படுகின்றது, 12,000 பேர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன) ஹதீஸ்களில் பரிச்சயமுள்ளவர்கள் அவற்றில் தத்துவப் பிரச்சினை பற்றிய நயமான கருத்தாடல்கள் ஒருசிலவே உள்ளன என்பதை அறிவர். அலீ (அலை) யின் மெய்யியல் சம்பந்தமான வாய்மொழிகளில் மட்டுமே ஆழமான தத்துவ சிந்தனை காணப்படுகிறது.

நபித்தோழர்களுக்கும், அவர்களைப் பின்பற்றியோருக்கும், உண்மையில் பொதுவாக அந்நாளைய அரபிகளுக்கும் சுதந்திர அறிவு ஜீவ கருத்தாடல்களில் பரிச்சயமிருக்கவில்லை. முதல் இருநூற்றாண்டுகளைச் சேர்ந்த அறிஞர்களின் நூல்களில் தத்துவ சிந்தனை பற்றிய உதாரணம் கிடையாது. ஷீஆ இமாம்களின், குறிப்பாக முதலாம் இமாமினதும் எட்டாம் இமாமினதும், ஆழமான மொழிகளில் மட்டுமே, இஸ்லாமிய அர்த்தத்தில் எல்லையற்ற தத்துவ சிந்தனைக் கருவூலங்கள் அடங்கியுள்ளன. இவர்களே தம் மாணவர்களுக்கு இவ்வகைச் சிந்தனையில் பரிச்சயத்தை உண்டுபண்ணினர்.

2ம்/8ம் நூற்றுண்டின் போது சில தத்துவ நூல்களின் மொழிபெயர்ப்புக்களை அரபிமொழியில் காணும்வரை அரபிகளுக்குத் தத்துவ சிந்தனையில் பரிச்சய மேற்படவில்லை. பின்னர் 3ம்/9ம் நூற்றாண்டில் கிரேக்க மொழியிலும், ஸிரிய மொழியிலும் மற்றும் மொழிகளிலுமிருந்து அநேக தத்துவ நூல்கள் அரபியில் மொழிபெயர்க்கப்பட்டபோது அவற்றினூடு தத்துவ சிந்தனை முறை மக்களுக்கு அறிமுகமாயிற்று, என்றபோதிலும் அநேக நீதிமான்களும் அறிஞர்களும் தத்துவக்கலையையும் மற்றும் புதிய விருந்தாளிகளான அறிவியல் விஞ்ஞானங்களையும் நல்லபிமானத்துடன் நோக்கவில்லை. தொடக்கத்தில், இவ்வறிவியல் விஞ்ஞானங்களுக்கு அரச அதிகார வட்டத்தின் ஆதரவிருந்த படியால் அவர்களின் எதிர்ப்பு அதிக தாக்கத்தை யேற்படுத்தவில்லை. ஆனால் சீக்கிரமே நிலைமை மாறிற்று. கடுமையான கட்டளைகள் மூலம் பல தத்துவ நூல்கள் அழித்தொழிக்கப்பட்டன. பெயரறியாத எழுத்தாளர் குழுவொன்றின் படைப்பான ‘‘தூயகூட்டத்தினரின் திருமுடங்கள்’’ அந்த நாட்களை ஞாபகமூட்டுவதோடு, அச்சகாப்தத்தின் பிரதிகூலமான நிலைமையை உறுதிப்படுத்துகின்றது.

கஷ்டங்கள் மலிந்த இக்கால கட்டத்துக்குப் பின் 4ம்/10ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரபல தத்துவ ஞானியான அபூ

நஸ்ர் அல்-ஃபாரபியினால் தத்துவம் புனர்வாழ்வு பெற்றது. 5ம்/11ம் நூற்றாண்டில் பிரபல தத்துவஞானி இப்னு சீனா (அவிசின்னா) வின் நூல்களால், இடந்தோறும் அலைந்து திரிந்த தத்துவ வியல் பூரணவளர்ச்சி எய்திற்று. 6ம்/12ம் நூற்றாண்டில் ஷைக் அல்-இஷ்ராக் ஷிஹாப் அல்-தீன் ஸுஹ்ரவர்தி, சோதி (இஷ்ராக்) எனும் ஆத்ம தரிசனத்தை ஒழுங்கமைத்தார். இதன் காரணமாக ஸலாஹுத்தீன் ஐயூபியின் ஆணைப்படி அவர் கொலை செய்யப்பட்டார். அதன் பின் ஸுன்னத் ஜமாஅத் பிரிவில் பெரும்பான்மை முஸ்லிம்கள் மத்தியில் தத்துவத்துறை நீடிக்கவில்லை. அதன்பின் உலகின் தலைசிறந்த தத்துவாசிரியர்கள் தோன்றவில்லை. ஆனால் 6ம்/12ம் நூற்றாண்டின் இறுதியில் அந்தலுசியாவில் இப்னு ரஷ்த் (அவரோஸ்) என்பவர் தத்துவத்துறைக்குப் புத்துயிரளிக்க முனைந்தார்.[33]

தத்துவத்துக்கும் அறிவியல் விஞ்ஞானத்துக்கும் ஷீஆக்களின் பங்களிப்பு

ஷீஆயிஸம் அதன் தொடக்கத்திலிருந்தே தத்துவ சிந்தனையின் உருவாக்கத்தில் காத்திரமான பங்குவகித்தது போன்று, தத்துவத்தையும் இஸ்லாமிய அறிவுத்துறைகளையும் மேலும் விருத்திசெய்து பரப்புவதிலும் பிரதான சக்தியாய் விளங்கியது. இப்னு ரஷ்துக்குப் பின் ஸுன்னியுலகில் தத்துவம் மறைந்தபோதும் ஷீஆயிஸத்தில் அது தொடர்ந்து வாழ்வு பெற்றது. இப்னு ரஷ்துக்குபின் குவாஜா நஸீர் அல்தீன் தூஸி, மீர் தாமத், ஸத்ர் அல்-தீன் ஷிராஸி முதலிய பிரபல தத்துவாசிரியர்கள் ஒருவர் பின்னொருவராயத் தோன்றி தத்துவச் சிந்தனையைக் கற்றுவிருத்தி செய்து விளங்கச் செய்தனர். அதேபோன்று மற்றும் அறிவியல் விஞ்ஞானத்துறைகளில் நஸீர் அல்-தீன் தூஸி (இவர் தத்துவாசிரியரும் கணித விற்பன்னருமாவார்) பீர்ஜாந்தி போன்ற சிறந்த அறிஞர்கள் தோன்றினர். இவர் ஒரு கணித விற்பன்னருமாவார்.

ஷீஆ அறிஞர்களது அயரா முயற்சி காரணமாக எல்லா

அறிவுத்துறைகளும், குறிப்பாக மெய்யியல் அல்லது இறையியல் (ஃபல்ஸஃபாயி இலாஹி அல்லது ஹிக்மத்தி இலாஹி) ஆதியன, பிரதானமாய் முன்னேறின. நஸீர் அல்-தீன் தூஸி, ஷம்ஸ் அல்-தீன் துர்க்காஹ், மீர் தமத், ஸத்ர் அல்-தீன் ஷிராஸி முதலியோரின் நூல்களை அவர்களுக்கு முன்னிருந்தோரின் நூல்களுடன் ஒருவர் ஒப்பிட்டுப் பார்த்தால் இவ்வுண்மை விளங்கும்[36].

இமாம்கள் விட்டுச் சென்ற அறிவுக் கருவூலங்கள் ஷீஆயிஸத்திலும், ஷீஆயிஸத்தினூடே மற்றும் இஸ்லாமிய வட்டாரங்களிலும் தத்துவ, மெய்யியல் சிந்தனையின் தோற்றத்திற்குக் காரணமாயமைந்தனவென அறியப் பட்டுள்ளது. ஷீஆயிஸத்தில் புனிதமாய் மதித்துப் போற்றப்படுகின்ற அதே அறிவுக் கருவூலங்களே ஷீஆயிஸத்தில் இவ்வகைச் சிந்தனை தொடர்ந்து நிலைத்திருக்கக் காரணமாகும். நூற்றாண்டுகளுக்கு விட்டுச் சென்ற அறிவுக் கருவூலங்களை ஒப்புநோக்குவதே இந்நிலைமையைத் தெளிவாக்கப் போதுமானது. இவ்வாதாரத்தை இஸ்லாமிய தத்துவம் நாளுக்கு நாள் எவ்வளவு நெருக்கமாக அணுகிய தென்பதை இவ்வொப்பியலாய்வின் போது ஒருவர் காணமுடியும். இந்த ஞானக்கருவூலமும் இஸ்லாமிய தத்துவமும் 11ம்/17ம் நூற்றுண்டுவரை பெரும்பாலும் ஒன்றையொன்று முற்றாகத் தழுவிக் கிடந்தது. சில தத்துவ அடிப்படைகளின் விளக்கங்களிலேற்பட்ட வித்தியாசங்கள் மட்டுமே அவற்றைப் பிரித்துக் காட்டின.

சிறந்த ஷீஆ அறிஞர்கள்

அடிப்படைகள் (ஊஸூல்) என அழைக்கப்பட்ட நூல்களிலிருந்து ஷீஆ ஹதீஸ்களைப் பிரித்தெடுத்து நீதித்துறையினதும், நம்பிக்கையின் பிரமாணங்களினதும் தலைப்புகளில் ஒழுங்குபடுத்தியமைத்த முதன் மனிதர் ஷீஆ அறிஞரான திக்காத் அல்-இஸ்லாம் முஹம்மத் இப்னு யாக்கூப் குலய்னி யாவார். (அஸ்ல் அல்லது அடிப்படை என அழைக்கப்படும் நூலில் அவர் சேகரித்திருந்தவற்றிலிருந்து ஷீஆ

ஹதீஸ் அறிஞர் ஒவ்வொருவரும் இமாம்களின் மொழிகளைத் திரட்டினர்.) குலய்னியின் நூலான ''கா.ஃபி'' அடிப்படைகள் கிளைகள், பல்வகைக் கட்டுரைகள் என முப்பகுதிகள் கொண்டதாகும். இதில் 16,199 ஹதீஸ்கள் அடங்கியுள்ளன. இது ஷீஆ உலகில் பிரபல்யமுடன் விளங்கும் மிக நம்பகமான ஹதீஸ் நூலாகும்.

கா.ஃபியின் நூற்பொருளைப் பூரணப்படுத்தும் மற்றும் மூன்று படைப்புக்கள் நீதித்துறையறிஞரான ஷைக் ஸாதுக் முஹம்மத் இப்னு பாபூயாஹ் குமி (மறைவு 381/991) என்பவரின் நூலும் ஷைக் முஹம்மத் தூஸி (மறைவு 460/1068) யின் கித்தாப் அல்-தஹ்தீப், கித்தாப் அல்-இஸ்திப்ஸார் ஆகிய இரு நூல்களுமாகும்.

முஹக்கின் என அறியப்படும் அபுல் காஸிம் ஜாபர் இப்னு ஹஸன் இப்னு யஹ்யா ஹில்லி (மறைவு 676/1277) என்பவர், நீதித்துறையில் நிகரற்ற மேதையாவார். இவர் சிரேஷ்ட ஷீஆ நீதிநூலாசிரியராகக் கருதப்படுகின்றார். இவரது மிகச் சிறந்த நூல்களில் கித்தாபி முக்தஸரி நா.ஃபி, கித்தாபி ஷராயி ஆகிய இரண்டும் எழுநூறாண்டுகளாய்த் தலைமுறை தலைமுறையாகக் கையளிக்கப்பட்டு வந்துள்ளதோடு, எப்பொழுதும் அற்புதமானவையாகவும் திகைப்பூட்டுவனவாகவும் கருதப்பட்டுவந்துள்ளன.

முஹக்கிக்கைத் தொடர்ந்து ஷஹீத் அவ்வல் (முதல் தியாகி) ஷம்ஸ் அல்-தீன் முஹம்மத் இப்னு மக்கியை நாம் குறிப்பிட்டாக வேண்டும். இவர் 786/1382ல் ஷீஆ என்ற குற்றச்சாட்டின் பேரில் டமஸ்கஸில் கொலை செய்யப்பட்டார். இவரது மிகச் சிறந்த நீதித்துறை நூல்களிலொன்றான லுமாஹி திமஸ்கியாஹ் சிறைவாசத்தின் போது ஏழு நாட்களில் எழுதி முடிக்கப் பட்டதாகும். ஷைக் ஜா.ஃபர் காஷி.ஃப் அல்-கித்தா நஜ.ஃபி (மறைவு 1327/1909) என்பாரையும் நாம் குறிப்பிடவேண்டி யுள்ளது. கித்தாப் கஸ்.ஃப் அல்-கித்தா என்பது இவரது சிறந்த நீதித்துறை நூல்களிலொன்றாகும்.

குவாஜா நஸீர் அல்-தீன் தூஸி (மறைவு 672/1274) கலாமை முழுமையானதோர் அறிவுத்துறையாக்கிய முதல்வராவார். இத்துறையில் அவரது மிகச் சிறந்த படைப்புகளில் ஒன்று தஜ்ரித்

அல் - இ.்.திகாத் என்ற நூலாகும். இத்துறையைச் சேர்ந்த அறிஞர்கள் மத்தியில் இந்நூல் ஏழு நூற்றுண்டுகளுக்கும் அதிகமாக அதிகாரமோச்சி வந்துள்ளது. ஷீஆக்களாலும் ஸுன்னிகளாலும் இந்நூலுக்கு அநேக விளக்கவுரைகள் எழுதப்பட்டு வந்துள்ளன. கலாம் என்னும் அறிவுத்துறையில் அவருக்கிருந்த நுண்மான் நுழை புலத்துடன் அவர் அந்நாளில் தத்துவத்திலும், கணிதத்திலும் புகழ்பெற்று விளங்கிய அறிஞர்களில் ஒருவராய்த் திகழ்கின்றார். அறிவியல் விஞ்ஞானத்துறைக்கு இவர் வழங்கிய மகத்தான பங்களிப்புகள் இதற்குச் சான்று பகரும். மேலும் மராக்ஹாஹ் அவதான நிலையம் அவரது பெருமுயற்சியால் தோன்றியதாகும்.

முல்லா ஸத்ரா என்றும் ஸதர் அல்-முத்த அல்லஹீன் என்றும் பிரசித்தம் பெற்ற ஸத்ர் அல்-தீன் ஷீராஸி (மறைவு 1050/1640) இஸ்லாத்தில் பல நூற்றாண்டு கால தத்துவ வளர்ச்சிக்குப் பின் முதல் தடவையாக தத்துவப் பிரச்சினைகள் பற்றிய விசாரணையில் முழுமையான ஒழுங்கையும், ஒத்திசைவையும் கொணர்ந்தார். அவற்றையவர் கணிதப் பிரச்சினைகள் போன்று ஒழுங்கமைத்ததுடன் அதேவேளை தத்துவத்தை ஆத்ம ஞானத்துடன் இணைத்தார். அலைச்சலுற்ற தத்துவத்தால் தீர்க்கமுடியாத நூற்றுக் கணக்கான பிரச்சினைகள் பற்றி விசாரணை புரிவதற்காக அவர் தத்துவத்துக்குப் புது வழிகளை காட்டினார். அதுவரையும் பகுத்தறிவுச் சிந்தனைக்கு அப்பாற்பட்டதாக கருதப்பட்ட ஆத்ம ஞானப் பிரச்சினைகளுக்கு பகுப்பாய்வு மூலம் தீர்வு காண்பதை அவர் சாத்தியமாக்கினார். மறைஞான ஆதாரங்களிலும், நபிக்குடும்பத்தினராக இமாம்களின் மொழிகளிலும் அடங்கியிருந்த, நூற்றாண்டு காலமாகத் தீர்க்கப்படமுடியாத புதிர்களாகக் கருதப்பட்டு, ஒட்டுவமையானது அல்லது தெளிவற்ற தன்மை படைத்தது என நம்பப்பட்டும் வந்த அநேக ஞானப் புதையல்களை அவர் தெளிவுபடுத்தி அர்த்த வியாக்கியானஞ் செய்தார். இவ்விதமாக ஆத்ம ஞானமும், தத்துவமும், மதத்தின் மறைவான அம்சமும் ஒத்திசைந்து ஒற்றை வழியைப் பின்பற்றத் தொடங்கின.

முல்லா ஸத்ரா தாம் விருத்திசெய்த முறைகளைப் பின்பற்றி ''பொருள் மாற்றமைவு இயக்க'' (ஹரக்கத்தி ஜவ்ஹரிய்யாஹ்)[37]. த்தை நிருபிப்பதில் வெற்றியடைந்தார். நவீன பௌதீகத்தில் '' நான்காவது பரிமாணத்'' துக்கு வழங்கப்படும் அர்த்தம் போன்றதாய், சார்பு நிலைக் கொள்கையை (மனத்தினுள் அல்ல, மனத்துக்கு வெளியே ஸ்தூல சார்பு நிலை) நிகர்த்ததாய், மூவிடப் பரிமாணங்களுடன் காலத்தின் நெருங்கிய சார்புநிலையைக் கண்டு பிடிப்பதிலும், மற்றும் கவனிப்பிற்குரிய கொள்கைகளைக் கண்டுபிடிப்பதிலும் அவர் வெற்றி பெற்றார். அவர் சுமார் ஐம்பது நூல்களை எழுதினார். நான்கு தொகுதிகளைக் கொண்ட அஸ்ஃபார் என்ற நூல் அவரது மிகச் சிறந்த படைப்புகளிலொன்றாகும்.

முல்லா ஸத்ராவுக்கு முன்பு சுஹ்ரவர்தி போன்ற சில மெய்ஞ்ஞானிகளும், ஹிக்மத் அல்-இஷ்ராக் நூலாசிரியான 6ம்/12ம் நூற்றாண்டு தத்துவஞானியும், 8ம்/14ம் நூற்றாண்டுத் தத்துவாசிரியரான ஷம்ஸ் அல்-தீன் துர்க்காஹ்வும் ஆத்ம ஞானத்தையும் தத்துவத்தையும் மத அந்தரங்கத்தையும் இசைவாக்கஞ் செய்யப் பெருமுயற்சியெடுத்தனர் என்பது கவனத்திற்குரியது. என்ற போதிலும் இம் முயற்சியில் பூரணவெற்றி பெற்ற பெருமை முல்லா ஸத்ராவையேச் சாரும்.

ஷைக் முர்த்தஸா அன்ஸாரி ஷுஷ்தரி (மறைவு 1281/1864) நீதித்துறையின் அடிப்படைகள் பற்றிய அறிவைப் புதிய தொரு அடித்தளத்தின் மீது புனரமைத்ததோடு இவ்வறிவுத்துறையின் நடைமுறை அடிப்படைகளையும் உருவாக்கினார். ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக அவரது முறை ஷீஆ அறிஞர்களால் ஆர்வமுடன் பின்பற்றப்பட்டுவருகின்றது.

மூன்றுவது முறை:
அறிவுபூர்வ உள்ளுணர்வு அல்லது
ஆன்மீக திரைநீக்கம்
மனிதனும் மறையியல் ஞான விளக்கமும்[38]

பெரும்பான்மை மனிதர்கள் ஜீவனோபாயத்திலும் அன்றாடத் தேவைகளிலும் மூழ்கி, ஆன்மீக விடயங்களில் கவலையற்றிருப்பினும் முடிவான யதாரர்த்தத்தைத் தேடும் உட்-தூண்டல் மனிதனிடம் இயல்பாகவே இருக்கிறது! புதைந்து கிடக்கும் இச்சக்தி சில மனிதர்களிடம் விழிப்புப் பெற்று, பிரத்தியட்சமாய்த் தொழிற்பட்டு ஆன்மீக அகக் காட்சிகளைத் தோற்றுவிக்கின்றது.

ஒவ்வொரு உண்மையும் யதார்த்த மாயையெனவும், மூடநம்பிக்கையெனவும் (ஸோஃபிஸ்ட்டு) குதர்க்கவாதிகளும் சந்தேகப் பிராணிகளும் கூறியபோதிலும், நிலையான யதார்தத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் நம்பிக்கையுண்டு. இப்பிரபஞ்சத்தையும் சிருஷ்டியமைப்பையும் சூழ்ந்து கொண்டுள்ள நிலையான யதார்த்தத்தையும், உலகப் பொருள்களின் நிலையற்ற மாறும் இயல்பையும் மனிதன் இருந்திருந்து தெளிந்த சிந்தையுடன் காண்கையில், இவ்வுலகமும் அதன் தோற்றமும் நிலையான யதார்த்தத்தைப் பிரதிபிம்பிக்கும் கண்ணாடிகள் என அவன் நினைக்கின்றான். இவ் யதார்த்தத்தை விளங்கிக் கொள்ளும் பரவசத்தில் அவன் கண்களுக்கு மற்றைய காட்சிகள் யாவும் முக்கியமற்றதாக மங்கிவிடுகின்றன.

இக்காட்சி இறைவனை மையமாகக் கொண்ட மனிதரின் கவனத்தை உலகு கடந்த நிலைக் ஈர்த்து அவர் மனதில் இறை நேசத்தை விழித்தெழச் செய்யும். அதே ஆத்ம ஞான ''தெய்வீகக் கவர்ச்சி'' (ஐத்பாஹ்) ஆகும். இவ்வீர்ப்பின் மூலம் அவன் மற்றதனைத்தையும் மறந்து விடுகிறான். அவனது தொழிற்பாடுகள், ஆசை அபிலாஷைகள் யாவும் அவனது மனதிலிருந்து மங்கிவிடுகின்றன. காணவும் கேட்கவும் கூடிய அனைத்தையும் விட உண்மையில் அதிக பிரத்தியட்சமான,

கண்ணுக்குத் தெரியாத இறைவனை வணங்கவும் துதிக்கவும் இக்கவர்ச்சியே வழிகாட்டுகின்றது. வாஸ்தவத்தில் உள்ளார்ந்த இக்கவர்ச்சியே இறைவணக்கத்தை அடிப்படையாகக் கொண்ட உலகின் பல்வேறு மார்க்கங்களைத் தோன்றச் செய்தது. ஆத்ம ஞானி (ஆரி∴ப்) என்பவர் வெகுமதிகளுக்கு ஆசைப்பட்டோ, தண்டனைகளுக்கு அஞ்சியோ அமல் புரிவதில்லை. அவர் இறைஞானத்தால், இறைவன் மீதுற்ற நேசத்தால் அவனை வழிபடுபவராவார்.[39]

மறை ஞானம் என்பது மற்றைய மார்க்கங்களைப் போல் மார்க்கமாகவன்றி சகல மார்க்கங்களினதும் இருதயபீடமாக விளங்கின்றதென்பது இவ் விளக்கத்தால் தெளிவாகின்றது. ஆத்மஞானம் என்பது இறைவணக்கப் பாதைகளில் ஒன்றாகும். இப்பாதை அச்சத்தைவிட அன்பு கலந்த ஞானத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். அது புறவயத் தோற்றத்துடனும் பகுத்தறிவுச் சிந்தனையுடனும் திருப்தியுற்றுக்கிடவாமல், மார்க்கத்தின் உள்ளார்ந்த உண்மையை உணரும் பாதையாகும். இறைவனால் அருளப்பட்ட வேதங்களைப் பின்பற்றுவோர் மத்தியிலும், சிலைவணக்கத்தைக் கொண்ட மதத்தவர்கள் மத்தியிலும் ஆத்மீக மெய்ஞ்ஞானப் பாதையை மேற்கொள்வோர் உள்ளனர். பல தெய்வ வணக்க மதங்களிலும்[40] யூத மதம் கிறிஸ்தவம், ஜொராஸ்திரியம், இஸ்லாம் முதலியவற்றிலும் ஆத்மீக ஞானிகள் காணப்படுகின்றனர்.

இஸ்லாத்தில் மறை ஞானத்தின் (சூஃபிஸம்) தோற்றம்

நபித்தோழர்கள் மத்தியில் அலீ (அலை) குறிப்பாக ஞான உண்மைகள், ஆத்மீக வாழ்வின் படித்தரங்கள் முதலியவை பற்றிய தமது அற்புத விளக்கங்களால் வெகு பிரசித்தமானவராவார். இத்துறையில் அன்னாரின் வாசகங்கள் தெவிட்டாத ஞானக்களஞ்சியமாக மிளிர்கின்றன. காலத்தால் அழியாத ஏனைய நபித்தோழர்களது படைப்புகளில் இவ்வகை ஆத்ம விசாரணை குறித்து அதிகமாக எதுவும் காணப்படவில்லை. அலீயின் தோழர்களில் ஸல்மான் ∴பார்ஸி,

உவைஸ் கர்னி, குமைல் இப்னு ஸியாத், ரொஷாய்த் ஹாஜரி, தைதம் தம்மார், ரபீ இப்னு கைத்தம் முதிலியோரிருந்தனர். ஸுன்னத் ஜமாஅத்தையும், ஷீஆ பிரிவையும் சேர்ந்த பெரும்பான்மை ஸூஃபிகளால் ஒரே விதமாக அலீ (அலை)க் குப்பின் சங்கிலித் தொடராய்க் (ஸில்ஸிலாஹ்) கருதப்படும் ஞானிகள் உளர்.

இக்குழுவினருக்குப் பின் தாவூஸ் யமானி ஸைபான் ராயி, மாலிக் இப்னு தினார், இப்ருஹீம் அத்ஹம், ஸக்கீக் பல்கி போன்ற ஏனையோர் தோன்றினர். இவர்கள் மெய்ஞ்ஞானிகளாகவும் இறைநேசச் செல்வர்களாகவும் மக்களால் கருதப்பட்டனர். இம் மனிதர்கள் மறைஞானம் ஆத்ம ஞானம், பற்றிப் பகிரங்கமாகப் பேசாமல் புறத்தோற்றத்தில் கடும் துறவிகளாய்த் தோன்றினர். இவர்கள் முந்திய குழுவினரிடமிருந்து ஆத்மஞானப் பயிற்சியும் பெற்றனர் என்பதை மறைக்கவில்லை.

இவர்களுக்குப்பின் 2ம்/8ம் நூற்றாண்டினிறுதியிலும் 3ம்/9ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பாயஸீத் பிஸ்தாமி, மஃறூஃப் கர்க்கி, ஜுனைத் பக்தாதி முதலியோரும் அவர்களைப் போன்ற மற்றோரும் தோன்றினர். இவர்கள் ஸூஃபிப் பாதையைப் பின்பற்றியதுடன் மறைஞானத்துடன் தங்களுக்கிருந்த தொடர்பையும் பகிரங்கமாக வெளிப்படுத்தினர். அவர்கள் ஆத்மீகக் காட்சியை அடிப்படையாகக் கொண்ட சில அந்தரங்க விஷயங்களை வெளியிட்டனர். புறத்தோற்றத்தில் அவற்றின் வெறுப்பூட்டும் தன்மை காரணமாக சில சட்டமேதைகளும் மத அறிஞர்களும் அவற்றைக் கண்டித்தனர். இவ் வந்தரங்க விஷயங்களை வெளியிட்டமைக்காக அவர்களிற் சிலர் சிறையிற் தள்ளப்பட்டனர்; கசையடி பட்டனர்; கொலை செய்யவும் பட்டனர்.[41] எனினும் இவர்கள் எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல் தம்வழியில் உறுதியாக நடந்தனர். இவ்விதமாக மறை ஞானம் ''வழி'' (தரீக்கா அல்லது ஸூபி இஸம்) தொடர்ந்து வளர்ச்சியுற்று 7ம்/13ம், 8ம்/14ம் நூற்றாண்டுகளில் அதன் உச்சத்தையடைந்தது. அன்றிலிருந்து இன்றுவரை அது இஸ்லாமிய உலகில் சில சமயங்களில் வலுவோங்கியும், சில சமயங்களில் வலுக்குன்றியும் வாழ்ந்து வருகிறது.

ஆத்மஞானம் அல்லது சூ.்.பி இஸம், இன்று நாம் அவதானிப்பதுபோல், முதலில் ஸுன்னத் ஜமாஅத்தார் மத்தியிலும் அதன்பின் ஷீஆக்கள் மத்தியிலும் தோன்றிற்று. சூ.்.பிகளாகவும், ஆத்ம ஞானிகளாகவும் தம்மை அறிவித்துக் கொண்ட முதல் மனிதர்கள், சூ.்.பி தரீக்காக்களின் ஆன்மீகத்தலைவர்கள் இஸ்லாமிய சட்டக் கிளைகளில் (.்.புரூ) வெளிப்படையாக ஸுன்னத் ஜமாஅத்தையே பின்பற்றினர். அவர்களைப்பின்பற்றி சூ.்.பி தரீக்காக்களை விரிவுபடுத்திய பின்னைய ஆன்மீகத் தலைவர்களும் கூட ஷரீஅத்தைப் பின்பற்றுவதில் ஸுன்னிகளாகவே காணப்பட்டனர்.

என்ற போதிலும், இவ்வான்மீகத் தலைவர்கள் தம் ஆன்மீகச் சங்கிலித்தொடரை தமக்கு முந்திய தலைவர்களினூடாக அலீ(அலை) வரை கொண்டு செல்கின்றனர். இது ஆன்மீக வாழ்க்கையில் ஒரு மனிதனின் சந்தான அட்டவணை போன்றதாகும். அத்துடன் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ள அவர்களது திருஷ்டாந்தங்களதும், உள்ளுணர்வுகளதும் பெறுபேறுகள் அலீ (அலை) யினதும் ஏனைய ஷீஆ இமாம்களினதும் அருள்வாக்குளில் காணப்படும். இறைவனின் ஐக்கியமும், ஆத்மீக வாழ்வின் படித்தரங்களும் பற்றிய உண்மைகளைப் பெரும்பாலும் வெளிப்படுத்துகின்றன. இச்சூ.்.பி ஞானிகளால் பயன்படுத்தப்படும் சில குறிப்பான, சில சமயங்களில் அதிர்ச்சி யூட்டக் கூடிய, வெளிப்பாடுகளால் நாம் பாதிக்கப்படாத பட்சத்தில், இதனை நாம் காண முடிவதோடு, அவர்களது போதனைகளின் முழுமையான உட்பொருளை விசாரணையுடனும், பொறுமையுடனும் கருத்தில் கொள்ள முடியும். மனிதப் பூரணத்துவம் என சூ.்.பிகள் கருதுகின்ற, ஆத்மீகப் பாதையில் தீட்சை பெறுவதனால் உண்டாகும் பவித்திரத்தன்மை,[42] சுடரொலி ஷீஆ நம்பிக்கையின்படி இமாம்களிடம் முழுமையாகக் காணப்படுவதோடு, அவரிடமிருந்து புறப்படும் ஒளிப்பரம்பல் மூலம் அது அவரது உண்மையான அடியார்களைச் சேர முடியும். குதுப்[43] மார்களின் இருப்பு எல்லாக் காலங்களிலும்அவசியம் என்பது சகல சூ.்.பிகளதும் ஏகோபித்த அபிப்பிராயம். ஒரு குதுபும் அவரது பண்புகளும், இமாம் பற்றிய ஷீஆ கருத்துக்கு இசைவானதாகும். நபிகுடும்பத்தினரின் மொழிகளின்படி - சூ.்.பிப்

பிரயோகமொன்றை உபயோகிப்பதாயின் - ஓர் இமாம் என்பவர் இறைநாமங்களின் தொழிற்பாடுகளைக் கொண்ட, மனிதர்களின் ஆன்மீக வாழ்வுக்கும் செயல்களுக்கும் வழிகாட்டுகின்ற சம்பூரண மனிதராவார். எனவே சூ∴பிஞானிகள் மார்க்கத்தின் புறவம்சங்களில் ஸுன்னத் ஜமாஅத்தைப் பின்பற்றிய போதிலும், ஷீஆ கருத்துப்படி, ஆன்மீக வாழ்வைப் பொருத்தமட்டில், ''வலாயத்'' சம்பந்தப்பட்ட விஷயத்தில் அவர்கள் ஷீஆவாகவே விளங்குகின்றனர்.

ஒருவர் தன்னையறிந்துகொள்ளும் 'வழி'[44] அல்லது 'உபாயங்கள்' பற்றிய ஆன்மீக முறையை ஷரீஅத்தின் புறவம்சங்களின் மூலம், போதனைகளின் மூலம் விளக்கமுடியாதென்பது ஸுன்னத் ஜமாஅத்தினரின் செவ்விய கிரந்தங்களிலும் கூட சில சமயங்களில் சொல்லப் பட்டுள்ளதனைக் குறிப்பிடுதல் அவசியம். இம் முறைகள் நடை முறைமைகள், பலவற்றையும் முஸ்லிம் தனிமனிதர்கள் கண்டு பிடித்துள்ளதுடன் அவை இறைவனுக்கு ஏற்புடையனவாய் மாறிவிட்டன என்று இக் கிரந்தங்கள் உரிமை கோருகின்றன. கிறீஸ்தவத்தில் துறவறத்தின் நிலையும் இத்தகையதே. எனவே ஒவ்வொரு ஆத்மீகத்தலைவரும் ஆத்மீக முறையில் தேவையானதாகச் சில செயல்களையும் நடைமுறைகளையும் உருவாக்கியுள்ளனர். உதாரணமாகக் குறிப்பிட்டவொரு வைபவமுறை ஆத்மீகத் தலைவரால் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஒரு தரீக்காவில் புதிதாகச் சேர்பவர் தீட்சை பெறும் போது அவருக்கு அங்கி வழங்கல், இசை, புனிதப் பெயர் சூட்டப்படுகையில் பரவசமுண்டுபண்ணுவதற்காகத் திக்று மற்றும் முறைகளைப் பயன்படுத்தல் முதலியவற்றைக் குறிப்பிடலாம். தரீக்காவின் நடைமுறைகள் சில விஷயங்ளில் புறவாயமாய், ஷரீஅத்திலிருந்து விலகியதாயக் காணப் படுகின்றன. அவற்றிடையே காணப்படும் அகவய உறவையும் அந்நியோன்யத்தையும் அந்நியரொருவர் அறிந்து கொள்வது சிரமமாகவுள்ளது. ஆனால் ஷீஆயிஸத்தின் கோட்பாட்டு அடிப்படைகளைக் கவனத்திற்கொண்டு, இஸ்லாத்தின் ஆதார மூலங்களை அதாவது குர்ஆனையும், ஸுன்னாவையும் ஆழமாகக் கற்கும் ஒருவர் இஸ்லாம் இவ்வான்மீக வழிகாட்டலை

வழங்கவில்லையென்றோ, கடைப்பிக்கப்படவேண்டிய ஆன்மீகத் திட்டத்தைத் தெளிவுபடுத்தவில்லையென்றோ, இது விஷயத்தில் இஸ்லாம் அசிரத்தையால் இருந்து வந்துள்ளதென்றோ துணிந்துரைத்தல் சாத்தியமில்லை யென்பதைச் சீக்கிரமேயுணர்வார்.

மறை ஞானத்துக்காகக் குர்ஆனும், ஸுன்னாவும் வழங்கும் வழிகாட்டல்

புனிதத் திருமறையை ஆராய்ந்துபார்க்கும் படியும், அதனை மேலோட்டமாக அறிந்து கொள்வதுடன் திருப்தியடைந்து விட வேண்டாமென்றும், இம்முயற்சியில் விடாமல் ஈடுபடும்படியும் இறைவன் கட்டளையிட்டுள்ளான். படைக்கப்பட்ட உலகம், அதில் காணப்படுவன யாவும் அடையாளங்கள் (ஆயத்) எனவும் குறியீடுகள் எனவும் திருமறை வசனங்கள் பலவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வடையாளங்களின், குறியீடுகளின் அர்த்தம் பற்றி ஓரளவு விசாரணை புரிவதாலும் அதன் அசல் முக்கியத்துவத்தை ஊடுருவிக் காண்பதாலும் அப்பொருட்கள் அவற்றையன்றி அவற்றுக்கு அப்பாற்பட்டவொரு யதார்த்தத்தை வெளிப்படுத்து வதனாலேயே அப்பெயர்களால் அழைக்கப் படுகின்றனவென்பது நிதர்சனமாகும். உதாரணத்துக்கு, அபாயத்தை அறிவிக்கும் சிவப்பு விளக்கைக்காண்கையில் அபாயவுணர்வே நம்மை முழுமையாக ஆட்கொள்கின்றது. அப்படியல்லாமல் வடிவம், ஒளி, வர்ணம் பற்றி சிந்தனைக்கு இடமளித்தல், அபாய உணர்வுக்குப்பதில் அச்சிந்தனைகளே மனதை ஆக்கிரமித்துக் கொள்ளும்; அது போன்றே, உலகமும் அதன் காட்சிகளும் எல்லா அம்சங்களிலும் இறைவனின் அடையாளங்களாய் இருப்பதால் அவை தமக்கேயுரிய தத்துவச் சுதந்திரம் கொண்டவையாய் இருத்தல் முடியாது. நாம் எவ்வாறு நோக்கினாலும் இறைவனைத் தவிர எதனையும் அவை காட்டா.

திருமறையின் வழிகாட்டல் மூலம் உலகையும், உலக மக்களையும் அத்தகையபார்வையில் நோக்குபவன் இறைவனைத்தவிர எதனையும் காணமாட்டான். உலகின் கவர்ச்சியான தோற்றத்தில் பிறர்காணும் இரவல் அழகுக்குப்

பதில் அவன் எல்லையற்ற சௌந்தர்யத்தின் பேரெழிலைக் காண்பான். உலகின் ஒடுங்கிய கட்டுக் கோப்பினூடு இயங்கும் நேசனைக் காண்பான். சிவப்பு விளக்குபற்றிப் பிரஸ்தபிக்கப்பட்டது போன்று வாஸ்தவத்தில் அடையாளங்களிலும் குறியீடுகளிலும் கருத்துக் கொள்ளப்படுவதும் காணப்படுவதும் உலகைப்படைத்த சிருஷ்டிகர்த்தாவேயன்றி உலகம் அன்று. இறைவனுக்கும் உலகுக்கும் உள்ள உறவு ஒருவகையில் (1+1) போன்றதோ (1x1) போன்றதோ அன்று. (அதாவது இறைவன் முன்னால் இவ்வுலகம் வெறும் பூஜ்யமே. அது இறைவனுடன் எதையும் சேர்ப்பதில்லை.) இவ்வுண்மை உணரப்படும் போது, மனிதனது தனியான இருப்பின் அறுவடை சூறையாடப்பட்டு ஒரேயடியாய் அவன் தன் இருதயத்தை இறைவனின் நேசக் கரங்களில் ஒப்படைக்கின்றான். இவ்வுணர்வு பிரத்தியட்சமாய் கண், செவி மற்றும் புலன்கள் போன்ற கருவிகளாலோ , கற்பனையாற்றல் பகுத்தறிவு போன்றவற்றாலோ உண்டாவதல்ல. ஏனெனில் இக்கருவிகள் யாவும் கூட அடையாளங்களே. இங்கே அளவளாவப்படும் ஆன்மீக வழிகாட்டலுக்கு இவை முக்கியமல்ல.

இறைவனின் தரிசனம் பெற்றவர் மற்றெல்லாவற்றையும் மறந்து இறைவனை மட்டும் தியானிப்பதைத் தவிர வேறெந்த நோக்கமும் கொண்டிரார். திருமறையில் '' விசுவாசிகளே! நீங்கள் (தவறான வழியில் செல்லாது) உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். நீங்கள் நேரான வழியில் சென்றால், வழி தவறிய எவனுடைய தீங்கும் உங்களைப் பாதிக்காது'' (குர்ஆன் 5:105) என இறைவன் கூறுவதைக் கேட்கும் போது, ''தன்னை அறியும்'' பாதையே தன்னை நேர்வழியில் இட்டுச் செல்லக் கூடிய ராஜபாட்டையென்பதை அவர் உணர்கிறார். தமது உண்மை வழிகாட்டியான இறைவனே தன்னை அறிந்து கொள்ளுமாறு, பிறவழிகள் யாவையும் பின்னொதுக்கிவிட்டு தன்னைப்பற்றிய அறிவின் பாதையை மேற்கொள்ளுமாறு, ஆன்மாவின் சாளரத்தினூடு இறைவனைக் காணுமாறு தேடுகின்ற மெய்ப்பொருளை இவ்வழியில் அடையுமாறு கட்டளையிடுகிறான். எனவேதான் பெருமான் (ஸல்)

''தன்னையறிந்தவன் தன் நாயனையறிவான்'' என மொழிந்தார்கள்.

இப்பாதையை மேற்கொள்வது பற்றி அநேக இறைவசனங்கள் உள. இறைவனை நினைவு கூர்க என அவை கட்டளையிடுகின்றன. உதாரணமாக 'எனவே என்னை நினைவு கூர்க: நான் உங்களை நினைவு கூர்வேன்''. (குர்ஆன் 2:152) என இறைவன் கூறுகிறான். இதுபோன்ற ஹதீஸ்களும் உள. குர்ஆனிலும் ஹதீஸிலும் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ளது போன்ற நற்செயல்களைப் புரியுமாறு மனிதன் ஆணையிடப்பட்டுள்ளான். நற்செயல்கள் பற்றிய இக்கருத்தாடலின் இறுதியில் ''உண்மையில் அல்லாஹ்வின் தூதரிடம் உங்களுக்கு அழகியதொரு முன்மாதிரியிருக்கிறது''. . . . (குர்ஆன் 33: 21) என இறைவன் கூறுகின்றான.

குறிப்பிட்டவொரு பாதையை அனைத்து மக்களுக்கும் சிபாரிசு செய்யாமல் , அப்பாதைதான் இறைவனிடம் இட்டுச் செல்லும் பாதையென இஸ்லாத்தினால் கூற முடியுமென்று எவரும் கற்பனை செய்ய முடியுமா? அல்லது அத்தகைய தொரு பாதையை அறிமுகப்படுத்தி விட்டு, அதனைப் பின்பற்றும் முறையை விளக்குவதில் அசிரத்தையாயிருத்தல் முடியுமா? ஏனெனில், இறைவன் தன் திருமறையில் பின்வருமாறு கூறுகின்றான். '' .... ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவாக விவரிக்கக் கூடிய இவ்வேதத்தை நாம் தான் உம்மீது இறக்கி இருக்கிறோம் . . . . . (குர்ஆன், 16:89)

குறிப்புகள்

அத்தியாயம் 111

1. பதிப்பாசிரியர் குறிப்பு: முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது போல், THEOSOPHY (இறைஞானம்) WISDOM மெய்யறிவு எனவும் அழைக்கப்படும். இறையியல் அல்லது தத்துவம் பற்றி தொடர்ச்சியான மரபொன்று ஷீஆ உலகில் காணப்படுகின்றது. இது பற்றி நூலாசிரியர் அடிக்கடி பிரஸ்தாபிக்கின்றார். என்ற போதிலும் இச்சிந்தனை மரபு மெய்யியலோடும் ஆன்மீக உணர்வின் சாதனங்களோடும் இணைந்ததாகும். இதனை இறைநிந்தனையான, வெறும் பகுத்தறிவு வாதச் சிந்தனையுடன் இனங்காணக் கூடாது. எனவே, இது பகுத்தறிவு ரீதியான உதாரணங்களையும், தர்க்க விதியையும் கையாண்ட போதிலும் தற்போது மேற்கில் புரிந்து கொள்ளப்பட்டுள்ள அர்த்தத்தில் இது தத்துவத்தைப் போன்ற தல்ல.

2. இறைவனது மார்க்கத்தில் வணக்கம் என்பது ஏகத்துவத்துக்கு (தவ்ஹீத்)க் கீழ்ப்படிவதாகும்: ஏகத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாகும் என இவ்வசனத்திலிருந்து நாம் நிதானிக்கலாம்.

3. பண்புகளைக் கற்பிப்பதற்கும், விவரிப்பதற்குமான சக்தி விவரிக்கப்படப்போகும் பொருள்பற்றிய அறிவில் தங்கியுள்ளது. இத்திருவசனத்திலிருந்து நேர்மையான பக்திமான்கள், தூய்மையடைந்தவர்களைத் தவிர மற்றவர்களால் இறைவனை- அவன் அறியப்படவேண்டிய இம் முறையில்- அறிய முடியாது: எனவே அவனைப் பிறரால் சரியாக அறிந்து கொள்ளவோ, வர்ணிக்கவோ முடியாது என முடிவுகட்டலாம். அவர்கள் அவனுக்க வழங்கும் இயற்கைப் பண்புகளுக்கும் அவன் மேம்பட்டவனாவான்.

4. ஏகத்துவத்தின் மூலமாகவும், நற்செயல் மூலமாகவுமன்றி இறைவனைச் சந்திக்க முடியாதென்பதை இத்திருவசனத்தின் மூலம் அறியலாம்.

5. உண்மையான இறைவணக்கம் உறுதிப்பாட்டில் (யக்கீன்) முடிகிறதென்பதை இத்திருவசனத்தின் மூலம் தீர்மானிக்கலாம்.

6. உறுதிப்பாட்டையடைவதற்குத் தேவையான நிலைமைகளிலொன்று ''தேவதூதர்களது'' அல்லது மூலப்பிரதியான விண்ணுலகங்களையும், பூமியையும் பற்றிய அறிவுவிளக்கம் பெறுவதாகும்.

7. நேர்மையானோரின் விதி (அப்ரார்) ''இல்லிய்யீன்'' (மிக உன்னதமானது) என்ற நூலில் அடங்கியிருப்பது இந்திருவசனங்கள் மூலம் பிரத்தியட்சமாகின்றது. இறைவனை நெருங்கியோர் ஆன்மீகக் காட்சி மூலம் இதனையறிவர் '' எழுதப்பட்ட பதிவு'' சாதாரண அர்த்தம் குறிப்பதுபோல் எழுதப்பட்ட வொரு நூலன்று என்பதை உறுதிப்படுத்த (அரபியில் யஷ்ஹதுஹு) என்ற வினைச்சொல்லை உறுதிப் படுத்தும் சொல் காட்டுகின்றது. '' தெய்வீக நெருக்கமும் உயர்வும்'' கொண்ட உலகையே அது குறிக்கின்ற தெனலாம்.

8. கைசேதமுற்ற நிலையடைந்தோரின் இறுதிமுடிவான ஜஹீம் அல்லது நரகம் என்பதன் சாட்சியைத் திட அறிவு (இல்முல் யக்கீன்) காணும்படிச் செய்கிறது என்பதை

இவ்வசனத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

9. இவ்வுண்மை குறித்தே, திருநபி (ஸல்) ஸுன்னத் ஜமாஅத்தினராலும் ஷீஆக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஹதீஸொன்றின்படி '' தீர்க்கதரிசிகளான நாம் மனித இனத்தவரது புரிந்துணர்வின் அளவுக்கேற்பவே அவர்களுடன் பேசுகிறோம்'' என்கிறார்கள். பிஹார் அல்- அன்வார், வல் 1 பக் 37; உஸுல் அல்-கா∴பி, குலய்னி, தெஹ்ரான், 1357 வல். 1, பக். 203.

10. இந்த ஹதீஸின் ஆதாரம் இந்நூலின் முதலாம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

11. நஹ்ஜ் அல்-பலாஹாஹ், உபந்நியாசம் 231. வெகு சீக்கரம் ஆங்கிலத்திலும் வெளிவரவிருக்கும் எமது குர்ஆன் பற்றிய நூலில் இவ்விவகாரம் ஆராயப்பட்டுள்ளது.

12. அல்-துர் அல்-மன்தூர், வல் 11, பக். 6

13. த∴ப்ஸிர் அல்-ஸா∴பி, முல்லா முஹ்ஸின் ∴பய்த் காஷானி தெஹ்ரான், 1269, பக் 8; பிஹார் அல்-அன்வார், வல் 19 பக், 28.

14. குர்ஆன் , 26:173

15. குர்ஆன், 54:34

16. பதிப்பாசிரியர் குறிப்பு: நூலாசிரியரின் மாபெரும் படைப்பான அல்-மீஸான் எனும் குர்ஆன் விரிவுரையிலும் இதே முறைபின்பற்றப்பட்டுள்ளதை இங்கே குறிப்பிடலாம். இந்நூலின் பதினேழு வல்யூம்கள் இதுவரை வெளிவந்துள்ளன.

17. த∴ப்ஸீர் அல்-ஸா∴பி, பக். 4

18. த∴ப்ஸீர் அல்-ஸா∴பி, பக். 15, அப்பாஸ்குமியின் ஸ∴பீனத் அல்-பிஹார், நஜ∴ப், 1352-55 மற்றும் பிரசித்தமான விளக்கவுரைகளில் நபிகளாரின் இந்த ஹதீஸ் விவரிக்கப்பட்டடுள்ளது.

19. பதிப்பாசிரியர் குறிப்பு: நிச்சயமாக இவ் வேதம் உண்மையானது தான் என்று அவர்களுக்கு தெளிவாகும் பொருட்டு, நம்முடைய அத்தாட்சிகளை (உலகின்) பல பாகங்களிலும் காண்பிப்போம் (41:53) என்ற மறைவசனத்தை இது குறிக்கின்றது.

20. பதிப்பாசிரியர் குறிப்பு: இது ''திக்று'' அல்லது ஜபம்பண்ணுவதை நேரடியாகக் குறிக்கும். இறைவனை நினைவுகூர்தல் என்பதும் இதன் அர்த்தமாகும். சூபியத்தில் இது ஆன்மீக அனுபவத்தின் அடிப்படை உபாயமாகும்.

21. பிஹார் அல்-அன்வார், வல். 1பக் 177

22. சில குர்ஆன் வசனங்களை (ரத்து செய்தல்) வழக்கொழித்தல் அல்லது பொருள் மாற்றீடு செய்தல் என்பது சட்ட அடிப்படைகள் பற்றிய அறிவுத்துறையின் மிகக் கடினமான பிரச்சினைகளில் ஒன்றாகும். ஸுன்னத் ஜமாஅத்தைச் சேர்ந்த உலமாக்களில் ஒரு சிலரேனும் ரத்துசெய்வதை அங்கீகரிப்பதுபோல் தெரிகிறது. குர்ஆன் வசனங்களுக்கு ஹதீஸ்களைப் பயன்படுத்துவதன் மூலம் வெவ்வேறு வகைவிளக்கங்கள் வழங்குவதில் (FADAK) பதக் சம்பவம் சம்பந்தப்படுவது போல் தெரிகிறது.

23. இவ்விவகாரத்துக்கான சான்று, போலி ஹதீஸ்கள் குறித்து மரபுரீதியான மதஅறிஞர்கள் எழுதிய அநேக நூல்களில் காணப்படுகின்றது. அறிஞர்கள் சரிதைகளிலும் ஹதீஸ் அறிவிப்பாளர்கள் சிலர் நம்பகமற்றவர்களென்றும் மற்றுஞ்சிலர் பலஹீன மானவர்ளென்றும் வர்ணிக்கப்படுகின்றனர்.

24. பதிப்பாசிரியர் குறிப்பு: ஹதீஸ் இலக்கிய பற்றியும் மரபு ரீதியான இஸ்லாமிய விமரிசனத்தையும், உண்மையான ஹதீஸையும் போலி ஹதீஸையும் இனம் காண்பதற்கான அளவு கோலையும் ஹதீஸ்பற்றி கீழைத் தேயவியலாளர்களான ஐரோப்பியர்களதுவிமரிசனத்துடன் குழப்பிக் கொள்ளக் கூடாது இஸ்லாமியக் கண்ணோட்டதின்படி இவ்வைரோப்பியர்களின் விமரிசனங்கள் இஸ்லாமிய அமைப்பின் மீதே தாக்குதல் தொடுந்கும் கொடிய விமரிசனங்களாகும்.

25. பிஹார் அல்-அன்வார், வல் 1, பக். 139.

26. பிஹார் அல்-அன்வார், வல். 1, பக். 117

27. சட்ட அடிப்படைகளின் (உஸூல்) அறிவுத்துறை பற்றிய நூல்களில் ''தனித்தவொரு மரபு'' சம்பந்தமான கருத்தாடலைக் கவனிக்கவும்.

28. பிஹார் அல்-அன்வார், வல் 1, பக். 55.

29. இவ்விவகாரங்கள் குறித்து ஒருவர், சட்ட அடிப்படைகள் (உஸூல்) பற்றிய நூல்களில் இஜ்திஹாத், தக்லீத் பற்றிய கருத்தாடல்களைக் கவனிக்க வேண்டும்.

30. இப்னு கல்லிகான் எழுதிய வ.ஃபாயத் அல் அ.ஃயான், தெஹ்ரான், 1284, பக். 78: முஹ்ஸின் ஆமிலி எழுதிய அ.ஃயான் அல்-ஷீஆ, டமாஸ்கஸ், 1935 முதல், வல் 1, பக். 231.

31. வ.ஃபாயத் அல்-அ.ஃயான், பக் 190: அ.ஃயான் அல்-ஷீஆ அறிஞர் சரிதை மற்றும் நூல்கள்.

32. பதிப்பாசிரியர் குறிப்பு: கலாம் என்பது இஸ்லாத்தின் விசேட அறிவுத்துறையாகும். ஐரோப்பிய மொழிகளில் இச்சொல் வழக்கமாக இறையியல் என வழங்கப்படுகின்றது. எனினும் கலாமின் பங்களிப்பும் நோக்கமும் இறையியல் (THEOLOGY) போன்றதல்ல, எனவே கலாம் எனுஞ்சொல் ஆங்கிலத்திலும் படிப்படியாகக் கலாம் என்றே இப்போது வழங்கப்பட்டு வருகின்றது. இனி கலாம் எனுஞ் சொல் மொழி பெயர்க்கப்படாமல் அதன் மூலம் அரபி வடிவத்திலேயே எடுத்தாளப்படும்.

33. இப்னு அபில்-ஹதீத், வல். 1 ஆரம்பம்.

34. பதிப்பாசிரியர் குறிப்பு: முன்னர் குறிப்பிட்டதுபோல், தத்துவம் என்பது மரபு ரீதியான தத்துவத்தையே இங்கு குறிக்கின்றது. ஐயத்தில் தொடங்கி அறிவை (சைதன்யத்தை) தர்க்க நியாயத்தினுள் மட்டுப்படுத்தும் நவீன தத்துவத்தையன்றி உறுதியை அடிப்படையாகக் கொண்ட தத்துவத்தைக் குறிக்கின்றது.

35. இப்னு அல்-கி.ஃப்தியின் அக்பார் அல்-ஹுக்கமா (லீப்ஸிக், 1903) என்ற நூலிலும் வ.ஃபாயத் அல்-அ.ஃயானிலும், மற்றும் அறிஞர் சரிதைகளிலும் இவ்விவகாரங்கள் தாராளமாக விவரிக்கப்பட்டுள்ளன.

36. பதிப்பாசிரியர் குறிப்பு: இவர்கள் யாவரும் பிந்திய காலகட்டத்தைச் சேர்ந்த (7ம்/13ம் நூற்றாண்டிலிருந்து 11ம்/17ம் நூற்றாண்டுவரை) மிகச் சிறந்த தத்துவாசிரியர்களாவர். தூஸி யைத்தவிர மற்றையோரைப் பற்றிப் பெரும்பாலும் மேற்கு அறிந்திருக்கவில்லை. தூஸிகூட அவரது தத்துவப் பங்களிப்புகளை விடவும் கணித நூல்கள் காரணமாகவே மேற்கில் அறியப்பட்டிருந்தார்.

37. பதிப்பாசிரியர் குறிப்பு: முன்னைய முஸ்லிம் தத்துவாசிரியர்கள், அரிஸ்டோட்டல் போன்று பொருள்களின் பருண்மையிலன்றி அவற்றின்விபத்துகளிலேயே அசைவு சாத்தியம் என நம்பினர். இதற்கு நேர்மாற்றமாக முல்லா ஸத்ரா, (மத்தியகால தத்துவத்தின் அர்த்தத்தில்) ஏதாவதொன்று அசைவைப் பகிர்ந்து கொள்கையில் அதன் பருண்மையும் அசைவுறுகிறதேயன்றி விபத்துநேர்வதில்லையென்பதை உறுதிப்படுத்தினார். இவ்வாறு அகில இருப்பின் உயர் நிலைக்கு ஏறிச்செல்லும் உந்தல் பொருட்களினுள் காணப்படுகின்றது. எனினும் பரிணாமம் பற்றிய நவீன கோட்பாட்டுடன் இதனைக் குழப்பிக் கொள்ளக் கூடாது.

38. பதிப்பாசிரியர் குறிப்பு: இஸ்லாமிய மறைபொருள் ஞானம் சூபி இஸம் (தஸவ்வு..ப்) அல்லது மறையியல்ஞானம் (இர்..பான்) எனப்படுகின்றது. முன்னது ஒரேயதார்த்தத்தின் நடைமுறை அம்சத்தையும் பின்னது அதன் கோட்பாட்டு அம்சத்தையும் குறிக்கும். ஸ..பாவித்களின் காலத்திலிருந்து இஸ்லாமிய மறைபொருள் ஞானத்தை தஸவ்வு..ப் என்பதை விடவும் அடிக்கடி இர்..பான் என அழைப்பதே ஷீஆ அறிஞர்கள் மத்தியில் பொதுவான வழக்கமாக இருந்து வருகிறது. ஸ..பாவித்கள் முதலில் சூபித்தைப் பின்பற்றுவோராயிருந்தனர். பின்னர் அவர்கள் அரசியல் அதிகாரத்தைப் பெற்றனர். இதன் விளைவாக, லௌகீகப் பற்று கொண்ட அநேகர் அரசியல் அதிகாரம் பெறுவதற்காக சூபி வேடம் பூண்டதால் பக்திமான்களின் பார்வையில் சூபி இஸம் அபகீர்த்தியுற்றது. இவ்வரலாற்றுக் காரணங்களாலேயே இவ்வாறு ஏற்பட்டது.

39. ஆறாவது இமாம் பின்வருமாறு கூறியுள்ளார்: மூவகை வணக்கங்கள் உள. ஒரு கூட்டம் அச்சம் காரணமாக இறைவனை வணங்குகிறது; இது அடிமைகளின் வணக்கமாகும். இன்னுமொரு கூட்டம் வெகுமதிகளை யெதிர்பார்த்து இறைவனை வணங்குகிறது; இது கூலிக்காரர்களின் வணக்கமாகும். இன்னொரு கூட்டம் அன்பு காரணமாகவும் பக்தி காரணமாகவும் இறைவனை வணங்குகிறது; இதுவே சுதந்திரவான்களின் வணக்கமாகும்.'' பிஹார் அல்-அன்வார், வல் 15 ; பக். 208.

40. பதிப்பாசிரியர் குறிப்பு: இந்தியாவையும் தூரகிழக்கையும் சேர்ந்த மதங்களைக் கருத்தில் கொண்டே நூலாசிரியர் இவ்வாறு குறிப்பிடுகிறார். இவற்றில் தெய்வத்தன்மை புராணக் குறியீட்டுவடிவங்களாகவும், தெய்வங்களாகவும் உருவகிக்கப்படுகின்றது. எனவே இவை பொதுவாக முஸ்லிம்களின் கண்களுக்கு'' பல தெய்வக் கொள்கை'' யாகப்படுகின்றது.

41. பார்க்கவும்: அறிஞர் சரிதை நூல்கள்; மற்றும் அத்தாரின் ''தத்கிரத்துல் அவ்லியா'', தெஹ்ரான், 1321 (ஹிஜ்ராவுக்குப்பின்); மாசூம் அலி ஷாஹ்வுடைய தராயிக் அல்-ஹக்காயிக், தெஹ்ரான், 1318.

42. ஆத்ம ஞானிகளின் பாஷையில், ஆத்ம ஞானி தன்னை மறக்கும் போது, இறைவனில் அழிந்து போகிறான்; அவனது வலாயத் அல்லது வழிகாட்டலுக்குத்

தன்னை ஒப்புவித்துவிடுகிறான்.

43. தெய்வீக நாமங்கள் மூலம் உலகம் பிரத்தியட்ச இருப்பு கொண்டுள்ளதென ஆத்மஞானிகள் கூறுகின்றனர். இவ்வாறே அதன் இயக்கம் நிகழ்கிறதென்கின்றனர். ''சம்பூரணமாக அதிசிரேஷ்டமான நாமத்தில்'' இருந்தே புனித நாமங்கள் யாவும் பெறப்படுகின்றன. அந்த அதி சிரேஷ்ட நாமம் தான் பிரபஞ்சத்தின் ஆன்மீக உச்சம் (குதுப்) என அழைக்கப்படும் சம்பூர்ண மனிதனின் நிலையம் (மக்காம்) அதிசிரேஷ்ட ஆகும். ஒரு குதுப் இல்லாமல் ஒரு காலத்தும் உலக மனிதன் இருக்க முடியாது.

44. பதிப்பாசிரியர் குறிப்பு: இஸ்லாத்தில் ஆன்மீகப்பாதை ஸய்ர் வ ஸுலூக் (''யாத்திரையும் வழிப்பயணமும்'' என அர்த்தம்) எனப்படுகின்றது. மனிதனிலிருந்து இறைவனை நோக்கிச் செல்லும் பயணத்தை அல்லது பாதையை இது குறியீடாக உணர்த்துகிறது.

45. மகத்துவமிக்க இறைவன் கூறுகின்றான்: . . ''ஆனால் . . . துறவரத்தை நாம் அவர்கள் மீது கடமையாக விதிக்கவில்லை. எனினும் அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை அடையவிரும்பி, அவர்களே அதனை உண்டுபண்ணிக் கொண்டார்கள். அவ்வாறிருந்தும், அதனை அனுசரிக்க வேண்டிய கிரமப்படி அவர்கள் அனுசரிக்கவில்லை . . . (குர்ஆன் 57:27)

46. பதிப்பாசிரியர் குறிப்பு: ஒப்புதல்மூலம் அர்த்தம் தரும் குறியீட்டுக்கும், குறியீடு, குறியீட்டால் உணர்த்தப்படும் பொருள் இவற்றினிடையே காணப்படும் தத்துவப்பிணைப்பால் அப்பொருளின் அர்த்தத்தை விளக்கும் குறியீட்டுக்கும் வித்தியாசமுண்டு. இங்கே நூலசிரியர். உலகில் குறியீடுகள் பெறும் உண்மையர்த்தத்திலேயே அடையாளம் (ஆயத்) பற்றிய எண்ணக்கருவை எடுத்தாள்கிறார்.

47. அலீ (அலை) பின்வருமாறு கூறியுள்ளார்: '' இறைவன் என்பது எவ்வித வகைப்பாடுகளினுள்ளும் புகக் கூடியதன்று. இறைவன் என்பது பகுத்தறிவை அவனை நோக்கி இட்டுச் செல்வதாகும்'' பிஹார், அல்-அன்வார், வல். 2. பக. 186.

48. இது ஸுன்னத் ஜமாத்தையும், ஷீஆக்களையும் சேர்ந்த பிரபல்யமான சூபிகளின் நூல்களில் விசேடமாகத் திரும்பத்திரும்ப பிரஸ்தாபிக்கப்படும் வெகு பிரசித்தமான ஹதீஸாகும்.

49. இந்த ஹதீஸும் ஷீஆக்களையும், ஸுன்னத் ஜமாஅத்தையும் சேர்ந்த ஆத்மஞானிகளது நூல்களில் காணப்படுவதாகும்.

பகுதி 3

ஷீஆக்களின் கண்ணோட்டத்தில் இஸ்லாமிய நம்பிக்கை

அத்தியாயம் IV

இறைவனைப் பற்றிய அறிவு
அமைப்பும் யதார்த்தமும் பற்றிய கண்ணோட்டத்தில் உலகைக் காணல்; இறைவனின் அவசியம்

பிரக்ஞையும் அகக் காட்சியும் மனிதனின் அமைப்புடன் பின்னிப் பிணைந்ததாகும். இவற்றின் இயல்பான தன்மையே இறைவனதும் உலகினதும் அமைப்புக்கு அத்தாட்சியாகின்றது. தங்களது சொந்த அமைப்பு பற்றியும் மற்றவையனைத்தும் பற்றியும் ஐயம் கிளப்பி உலகே மாயம் எனக் கருதுவோருக்கு நேர்மாற்றமாக ஒரு மனிதஜீவன் ஏலவே பிரக்ஞையும் அகக் காட்சியும் கொண்டவனாக இருப்புக் கொள்ளும் கணத்தில் தன்னையும்இவ்வுலகையும் அறிந்து கொள்கிறான் என்பதை நாம் அறிவோம். அதாவது தான் இருப்பதையும் தனக்கு அப்பாற்பட்ட வஸ்துக்கள் இருப்பதையும்'' அவன் சந்தேகிப்பதில்லை. மனிதன் மனிதனாக இருக்கும் வரை இப்பிரக்ஞையும் அறிவும் அவனிடம் இருக்கவே செய்யும். இவற்றையிட்டு ஐயம்கொள்ளமுடியாது. இவை மாற்றத்திற்குள்ளாவதும் இல்லை.

போலிநியாயவாதிகளதும், சந்தேகப் பிறவிகளதும் கருத்துக்களுக்கு நேர்மாற்றமாக மனிதன் தனது அறிவின் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளும் இவ் யதார்த்தம் - இருப்பு பற்றிய அகக்காட்சி விகாரப்படுத்தப்படவோ, பொய்ப்பிக்கப்படவோ முடியாததாகும். அதாவது, மனிதனின் இருப்பே, யதார்த்தத்தை மறுதலிக்கும் போலி நியாய வாதிகளதும், சந்தேகப்

பிறவிகளதும் வாதத்தை முறியடிக்கின்றது. இம் மாபெரும் உலகினுள் நிலையான பிணைப்பு கொண்ட யதார்த்தமொன்றுள்ளது. இது உலகில் வியாபித்துள்ளதோடு அறிவிடம் (சைதன்யத்திடம்) தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது.

பிரக்ஞையும், அகக்காட்சியும் கொண்ட மனித ஜீவிகளாக நாம் காணும் யதார்த்தம் கொண்ட இவ்வுலகின் ஒவ்வொரு தோற்றமும் சடுதியாகவோ தாமதித்தோ அதன் யதார்த்தத்தை யிழப்பதோடு அழிந்துவிடுகிறது. இவ்வுண்மையிலிருந்து கண்ணுக்குத் தெரியும் உலகமும் அதன்பகுதிகளும் (அழிக்கமுடியாத) யதார்த்தத்தின் சுயமாக இருத்தல் முடியாதென்பது நிதர்சனமாகின்றது. நிலையான யதார்த்தத்தில் தங்கியிருப்பதன் மூலமே அவை தம் இருப்பைப் பெறுகின்றன என்பதே பொருந்தும். நிலையான யதார்த்துடன் பிணைந்திருக்கும் வரை அவற்றுக்கு இருப்புண்டு. அதிலிருந்து துண்டிக்கப்படும்போது அவை இருப்பழிகின்றன.[1] அழியாத, மாறாத, நிலையான இவ் யதார்த்தத்தையே (அதாவது அத்தியாவசியமான இருப்பையே) நாம் இறைவன் என்கிறோம்.

பிரபஞ்சத்துக்கும் மனிதனுக்கும் தொடர்பு பற்றி மற்றொரு கண்ணோட்டம்

இறைவனின் இருப்பை நிரூபிப்பதற்காக முந்திய பகுதியில் தெரிவு செய்யப்பட்டபாதை, மனிதன் இறைவனால் தனக்களிக்கப்பட்ட இயல்பாலும் அறிவாலும், எத்தகைய குழப்பமுமின்றி மேற்கொள்ளும் மிகவும் எளிமையான, பிரத்தியட்சமான பாதையாகும். எனினும் புலனின்பங்களிப்பில் ஆழ்ந்து பௌதீக விவகாரங்களில் மூழ்கிக் கிடக்கும் பெரும்பான்மையான மக்கள் அவர்களுக்கு இறைவனால் வழங்கப்பட்ட எளிய மாசற்ற பூர்வ இயல்பின்பால் திரும்புவது வெகு கடினமாகிவிட்டது. எனவேதான் தன்னை அகிலத்துக் குரியதாகக் கூறும்- மதத்தில் அனைவரும் சமமென நம்பும்- இஸ்லாம், இத்தகைய மக்கள் இறைவனின் இருப்பை நிரூபிப்பதற்கு இன்னொரு வழி காண்பதைச்

சாத்தியமாக்கியுள்ளது. இவர்கள் தம் எளிய, பூர்வ இயல்பிலிருந்து அப்பால் விலகிச் செல்ல நேர்ந்த அதே பாதையினூடாகவே இறைவனை அறியச் செய்வதற்கு, இவர்களுடன் பேசுவதற்கு இஸ்லாம் முயல்கிறது.

அல்குர்ஆன் மக்கள் கூட்டத்தினருக்கு இறைஞானம் பற்றிப் பல்வேறு வழிகளில் அறிவிக்கின்றது. எல்லாவற்றுக்கும் மேலாக உலக சிருஷ்டி மீதும், அதன் மேல் ஆட்சி செலுத்தும் முறைமை மீதும் அது கவனத்தைத் திருப்புகிறது. ''அறிவெல்லை'' பற்றியும் ''தம் சொந்த ஆன்மாக்கள்'' பற்றியும் சிந்தனை செய்யுமாறு அல்குர்ஆன் அழைப்பு விடுக்கின்றது. ஏனெனில் தனது சொற்பகாலப் புவிவாழ்வில் என்ன பாதையைத் தேர்தெடுத்த போதிலும், எதில் தன்னையிழந்தபோதிலும் சிருஷ்டிக்கப்பட்ட உலகிலிருந்தும், அதன்மேல் ஆட்சிபுரியும் முறைமையிலிருந்தும் மனிதன் ஒருபோதும் வெளியே அடியெடுத்து வைக்கமாட்டான். அவனது அறிவும், கிரகிக்கும் சக்தியும் அவன் அவதானிக்கும் வானங்கள் பூமியினது அற்புதக் காட்சிகளை அவன் உதாசீனஞ் செய்வத்ற்கு விடாது.

நம் கண்முன்னால் விரியும் இப்பரந்த வுலகம் முழுமையாகத் தொடர்ந்து மாற்றத்திற்குள்ளாகி வருவதை நாமறிவோம். கணந்தோறும் அது புதுப்புது வடிவில் தொழிற்படுகின்றது. விதிவிலக்கறியாத சட்டங்களின் செல்வாக்கினால் அது மெய் வடிவம் காண்கிறது. தொலைதூர நட்சத்திர மண்டலங் களிலிருந்து இப்பூமியின் பகுதியான சிறு துகள்கள்வரை, சிருஷ்டியின் ஒவ்வொரு பகுதியும் அகவய முறைமை யொன்றைக் கொண்டுள்ளதோடு, எத்தகைய விதிவிலக்கையும் அனுமதிக்காத சட்டங்களின் கீழ் மிக அற்புதமான முறையில் தொழிற்படுகின்றது. மிகவும் தாழ்ந்த நிலையிலிருந்து பூரணத்துவமான நிலைவரை உலகின் செயற்பாடு விரிவுற்று அதன் இலக்கான பூரணத்துவத்தை யெய்துகின்றது.

இக்குறிப்பிட்ட முறைமைகளுக்கு மேலாக அகில முறைமைகள் தொழிற்படுகின்றன. இறுதியாக இப்பிரபஞ்சத்தின் எண்ணற்ற பகுதிகளை ஒருங்கிணைத்து

குறிப்பிட்ட முறைமைகளை ஒன்றோடொன்று தொடர்புபடுத்தும் மொத்தப் பிரபஞ்ச முறைமையிருக்கிறது. இம்முறைமை அதன் தொடர்ச்சியான இயக்கத்தின் போது விதிவிலக்குகளை அங்கீகரிப்பதில்லை. மீறல்களை அனுமதிப்பதில்லை.

படைப்பின் முறைமை எத்தகைய தெனில், உதாரணமாக அது மனிதனைப் பூமியின் மேல் விட்டு தன் சூழலுடன் அவன் இசைவாக வாழும்படி அமைத்துள்ளது. சூழலை ஒழுங்குபடுத்தி அது அன்புள்ளவோர் தாதிபோன்று அவனை ஆதரித்து வளர்க்கும் படி செய்கிறது. சூரியன் சந்திரன், நட்சத்திரங்கள், நீர், நிலம், இரவு, பகல், பருவங்கள், மேகங்கள், காற்று, மழை, பூமிக்கடியிலும் அதன் மேற்பரப்பிலும் காணப்படும் செல்வங்கள் - வேறு வார்த்தைகளில், இயற்கையின் சக்திகளனைத்தும் அவனுக்கு நல்வாழ்வையும், மன அமைதியையும் வழங்குவதற்காக அவற்றின் ஆற்றலையும் வளங்களையும் பயன்படுத்துகின்றன. இத்தகைய உறவையும், இசைவாக்கத்தையும் சகல காட்சிகளிலும் கண்டுபிடிக்கமுடியும். அண்மையிலும், சேய்மையிலும் மனிதனுக்கும் அவனது அயலவர்க்குமிடையிலும் அவனது சொந்தவீட்டினுள்ளும் இதனைக் கண்டு பிடிக்க முடியும். சிருஷ்டி மனிதனுக்கு ரொட்டியை வழங்குகிற தெனில், அதைத் தேடிச் செல்லக் கால்கள், பற்றுவதற்காகக் கரங்கள், சாப்பிட வாய், மெல்லுவதற்குப் பற்கள் முதலியவற்றையும் அவனுக் களித்துள்ளது. ஒரு சங்கிலியின் கரணைகளைப் போன்று ஒன்றோடொன்று பிணைந்த சாதனங்களின் தொகுதிமூலம் இந்த ஜீவனுக்காகத் திருஷ்டாந்தப்படுத்தப்பட்டுள்ள இறுதி இலக்கான ஜீவனத்துடனும், பூரணத்துவத்துடனும் அது மனிதனைத் தொடர்புபடுத்தியுள்ளது.

பல்லாயிரமாண்டு முயற்சிகளின் விளைவாய்க் கண்டு பிடிக்கப்பட்ட, பொருட்களிடையான எண்ணற்ற உறவுகளானது, சிருஷ்டிரகசியங்களின் - அவற்றின் பல்வேறு கிளைகளின் - மாதிரிகளும் முன்னறிவிப்புகளுமாகும்.

என்பதையிட்டு அநேக விஞ்ஞானிகள் ஐயங்கொள்வதில்லை. ஒவ்வொரு புதிய கண்டு பிடிப்பும் அறியவரப்படாத எண்ணற்ற மூலகங்களின் இருப்பை மனிதனுக்கு அறிவிக்கின்றது. எல்லையற்ற பேரறிவுக்கும் ஆற்றலுக்கும் அத்தாட்சியா யமையும் இப்பரந்த ஜீவ உலகமும், தனித்தனியாக அல்லது ஐக்கியமாகப் பரஸ்பரப் பிணைப்பு கொண்ட அதன் அனைத்து பகுதிகளும் ஒரு சிருஷ்டிகர்த்தாவைக் கொண்டிருக்க வில்லையென்றோ, காரணகாரியமெதுவுமின்றி இவை தோன்றியிருக்கலாமென்றோ எவரேனும் கூறமுடியுமா? அல்லது இம்முறைமையினதும் சமநிலையினதும் இக்குறிப்பிட்ட அகில ஆளுகை, இறுதியாக, விதிவிலக்கறியாத சட்டங்களின் படி தனித்தவொரு அலகாக இயங்கும் உலகை எண்ணற்ற பரஸ்பர உறவுகளினால் ஆக்கியுள்ள மொத்த பிரபஞ்ச முறைமை எத்தகைய திட்டமுமின்றி எதேச்சையான, விபத்தாக நேர்ந்துள்ளதெனக் கூறமுடியுமா? அல்லது பிரபஞ்சத்தின் ஒவ்வொரு காட்சியும் ஆளுகையும் இருப்பு பெற்றதும் நடைமுறைப்படுத்தும் விதியையும் சட்டத்தையும் இருப்புக்கு முன்பாகவே தேர்ந்தெடுத்துவிட்டனவென, எவரேனும் கூறமுடியுமா? அல்லது முழுமையான ஐக்கியத்தையும், இசைவையும், பகுதிகளிடையே பரஸ்பரபிணைப்பையும் கொண்ட தனித்தவொரு அலகான இவ்வுலகம் வெவ்வேறு ஆதாரங்களிலிருந்து வெளிப்போந்த பல்வேறு வித்தியாசமான ஆணைகளால் பிறந்ததென எவரேனும் கூறமுடியுமா? அல்லது முழுமையான ஐக்கியத்தையும், இசைவையும், பகுதிகளிடையே பரஸ்பரப்பிணைப்பையும் கொண்ட தனித்தவொரு அலகான இவ்வுலகம் வெவ்வேறு ஆதாரங்களிலிருந்து வெளிப்போந்த பல்வேறு வித்தியாசமான ஆணைகளால் பிறந்ததென எவரேனும் கூறமுடியுமா?

பிரத்தியட்சமாய், ஒவ்வொரு சம்பவத்தையும், காட்சியையும் ஒரு காரணியுடன் தொடர்புபடுத்திக்காணும், சில சமயங்களில், தானறியாத காரணி, பற்றிய அறிவைப் பெறுவதற்கான விசாரணையில், பிரயத்தனங்களில் நீண்ட காலத்தைச் செலவிடும் அறிவுள்ள மனிதன், உலகம் நிலை

கொண்டிருப்பதற்குக் காரணமாக ஓர் இருப்பு இன்றி உலகம் இருத்தல் சாத்தியமென ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டான். இத்தகைய மனிதன் ஒன்றின் மீதொன்ருய் ஒழுங்காக வைக்கப்பட்டு எழுப்பப்பட்ட ஒரு செங்கல் கட்டுமானத்தைக் காணும்போது அது அறிவும் ஆற்றலும் வாய்ந்த ஒரு கர்த்தாவினால் ஆனதெனக் கருதுவான்; செங்கற்கள் அவ்வாறமைந்தது அகஸ்மாத்தான செயலாக விபத்தாக நேர்ந்தது என்பதை ஏற்கமாட்டான்; முன்கூட்டியே ஒரு நோக்கமும் திட்டமும் இருந்திருக்கவேண்டுமென முடிவுகட்டுவான். அதேபோன்று பிரபஞ்ச முறைமை அகஸ்மாத்தான நிகழ்வென்றோ விபத்தால் விளைந்ததென்றோ கருதமாட்டான்.

இவ்வுலகம் அதன் மீது ஆட்சிசெலுத்தும் முறைமையுடன் சேர்ந்து சர்வவல்லமை படைத்த சிருஷ்டியாளனால் அவனது எல்லையற்ற அறிவாலும் ஆற்றலாலும் படைக்கப்பட்டு ஒரு முடிவை நோக்கி அவனாலேயே நெறிப்படுத்தப்படுவதென்பதைக் காட்டுவதற்கு உலகின் மீது ஆட்சி செலுத்தும் முறைமை பற்றிய ஆழ்ந்த பிரக்ஞையே போதுமானது. அவை எல்லாவகையிலும் அவனது அதிகாரத்துக்கு உட்பட்டவை. அவனது ஞானத்தால் வழிகாட்டப்படுபவை. இருக்கின்ற அனைத்துக்கும் அவன் தேவைப்படுகிருன். அதேவேளை எதனிடத்தும் அவன் தேவையற்றவன். எந்தக்காரணிகளிலும் எந்த நிலைமைகளிலும் அவன் தங்கியிருக்கவில்லை.

எல்லாம் வல்ல இறைவன் கூறுகிருன்; விசுவாசங் கொண்டோருக்கு வானங்களிலும், பூமியிலும், நிச்சயமாக பல அத்தாட்சிகளிருக்கின்றன. உங்களை சிருஷ்டிப்பதிலும், பல ஜீவராசிகளை பரப்பிவைத்திருப்பதிலும் உறுதியான ஜனங்களுக்கு பல அத்தாட்சிகளிருக்கின்றன. இரவு பகல் மாறி மாறி வரும்படி, அல்லாஹ் செய்திருப்பதிலும், வானத்திலிருந்து மழையை இறக்கி வைத்து அதனைக் கொண்டு இறந்து போன பூமியை உயிர்ப்பிப்பதிலும், காற்றைத் திருப்பி திருப்பி விடுவதிலும் அறிவுடைய ஜனங்களுக்குப் பல அத்தாட்சிகளிருக்கின்றன. இவை அல்லாஹ்வுடைய

வசனங்களாகும். மெய்யாகவே, உம்மீது நாம் இவைகளை ஓதிக் காண்பிக்கிறோம். அல்லாஹ்வுக்கும் அவனுடைய வசனங்கலுக்கும் பின்னர், இவர்கள் எவ்விஷயத்தை நம்புவார்கள்? (குர்ஆன், 45:3-6)

நாம் கற்பனை செய்யச் சாத்தியமான இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு யதார்த்தமும் வரையறைக்குட்பட்ட யதார்த்தமாகும். அதாவது அதன் சாத்தியப்பாடு சில தேவையான காரணிகளிலும், நிலைமைகளிலும் தங்கியுள்ளது. இவையிராவிட்டால் இவ் யதார்த்தமும் இவ்வுலகில் இருக்க முடியாது. ஒவ்வொரு யதார்த்தமும் அதன் இருப்பை விஸ்தரிக்கமுடியாத வரையறையைக் கொண்டுள்ளது. இறைவன் மட்டுமே இத்தகைய வரையறையோ எல்லையோ இல்லாதவன். ஏனெனில் அவனது இருப்பு ஏக முற்றானது. நாம் அவனை எவ்வாறு கருதமுயன்றாலும் அவன் அனந்தன். அவனது இருப்பு எத்தகைய காரணிகளிலும் நிலைமைகளிலும் தங்கியிருக்கவில்லை. அவ்விருப்புக்கு அவை தேவையில்லை. எல்லையற்ற ஒன்றின்விஷயத்தில் நாம் பன்மை பற்றிய எண்ணக் கருவைக் கொண்டிருக்க முடியாது. ஏனெனில் இரண்டாவதாகக் கருதப்படும் ஒரு யதார்த்தம் முதலாவதிலிருந்து வேறாயிருப்பதன் விளைவாய், ஒவ்வொன்றும் வரையறைக்குட்பட்டதாய் மற்றதன் எதார்த்தத்துக்கு எல்லை வகுப்பதாயிருக்கும். உதாரணமாக வரையறையற்ற ஒரு பரிமாணத்தை நாம் கருத்தில் கொண்டால், வரையறையற்ற இன்னுமொரு பரிமாணம் அதன் பக்கத்தில் இருத்தல் முடியாது. இன்னொன்றை நாம் கருத்தில் கொண்டால் அது முதலாவதைப் போலவே இருக்கும். எனவே, இறைவன் ஒருவனே. அவன் இணையற்றவன்.

ஒட்டகை யுத்தத்தின் மத்தியில் நாடோடி அரபியொருவர் அலீ (அலை)யையணுகி இறைவன் ஒருவரென அவர் உறுதிகொண்டாரா என வினவிய சம்பவத்தை நாம் ஏலவே குறிப்பிட்டுள்ளோம். அவ்வினாவுக்கு அலீ (அலை) அளித்த பதில்: '' இறைவன் ஒருவனே என மொழிதல் நான்கு அர்த்தங்களைக் கொண்டுள்ளது. இவ் வர்த்தங்களில் இரண்டு

பொய்யானவை; இரண்டு சரியானவை. இரு பிழையான அர்த்தங்களிலொன்று 'இறைவன் ஒருவன்' எனச் சொல்லிக் கொண்டே ஒருவர் எண்பற்றியும், எண்ணிக்கைபற்றியும் சிந்திப்பதாகும். இரண்டாவது எண் ஒன்றைக் கொண்டிராதது எண்ணிக்கையின் பட்டியலில் சேர முடியாது. எனவே இவ்வர்த்தம் பொய்யானது. இறைவன் திரித்துவத்தின் மூன்றுவதாகும் எனக் கூறியவர்கள் (கிறீஸ்தவர்கள்) அவிசுவாசிகளாய் இழிந்ததை நீர் காணவில்லையா? மற்றோர் அர்த்தம் இவர் இன்ன மக்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர், பெயரிட்டு இன்ன கோத்திரத்தைச் சேர்ந்தவர் எனச் சொல்வது, இவ்வர்த்தம் இறைவன் மீது பிரயோகிக்கப்படும் போது பிழையாகின்றது. இது இறைவனுக்கு இன்னொன்றை ஒப்பிடுவதாகும். இறைவன் சகல ஒப்புவமைகளுக்கும் அப்பாற்பட்டவன்.

இறைவன் சம்பந்தமாகச் சரியான அர்த்தங்கள் இரண்டில் ஒன்று பொருள்கள் மத்தியில் அவனுக்கு இணையெதுமில்லை என்ற அர்த்தத்தில் இறைவன் ஒருவனே என மொழிதலாகும். இறைவன் ஈடிணையற்றவன். மற்றொன்று இறைவனைப் பற்றி வெளிப்படையாக அல்லது மனத்தளவில் அல்லது கற்பனையில் பன்மையாகவோ, பிரிவாகவோ கருதமுடியாது என்ற அர்த்தத்தில் இறைவன் ஒருவனே' என மொழிதலாகும். இறைவன் அத்தகைய ஐக்கியம் கொண்டுள்ளான்'' (பிஹார் அல்-அன்வார், வல் 11, பக். 65)

அலீ (அலை) பின்வருமாறு மேலும் கூறியுள்ளார்கள்: ''இறைவனை அறிவது அவனது ஐக்கியத்தை அறிவதாகும்.'' (பிஹார் அல்-அன்வார், வல். 11, பக். 186) இறைவனின் இருப்பு எல்லையற்றது- வரையறைக்குட்படாதது- என்பதை நிருபிக்க அவனது ஐக்கியத்தை நிருபிப்பதே போதுமானதென இதனால் அர்த்தமாகின்றது. ஏனெனில் எல்லையற்ற ஒன்றுக்கு இன்னொன்றைச் சாட்டுவது சாத்தியமன்று. எனவே, இன்னும் அனேக அத்தாட்சிகள் இருப்பினும் வேறு அத்தாட்சியெதுவும் தேவைப்படாது.

இறைவனின் சுயமும் பண்புகளும்

ஒரு மனித ஜீவியின் இயற்கையைப் பகுத்தாயும் போது அவனது தனி மனிதாய சுயத்தையும், அவனது சுயம் வெளிப்படுவதற்கு ஊடகமாயமையும் பண்புகளையும் அவன் கொண்டிருப்பதை நாம் காண்கிறேம். அவன் குறிப்பிட்ட வொரு நாட்டிற் பிறந்தவனாக, குறிப்பிட்ட ஒருவரின் மகனாக, அறிவும் ஆற்றலும் மிக்கவனாக, உயரமானவனாக அழகாக இருக்கிறான். அல்லது இவற்றுக்குநேர் மாற்றமான பண்புகளைக் கொண்டிருக்கிறான். முதலாவதும் இரண்டாவதும் போன்ற ஒரு சில பண்புகள் அவனது சுயத்திலிருந்து ஒருபோதும் பிரிக்கப்படமுடியாதவை. அறிவும் ஆற்றலும் போன்ற ஏனைய பண்புகள் பிரிக்கப்படவும், மாற்றப்படவும் கூடியவை. எனினும் இவை யாவுமே சுயத்திலிருந்து வித்தியாசமானவை; அவற்றினிடையேயும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை.

இவ்விடயம், அதாவது சுயத்துக்கும் பண்புகளுக்கு மிடையேயும் அதேவேளை பண்புகளினிடையேயும் காணப்படும் வித்தியாசம், பண்புகளைக் கொண்டிருக்கும் சுயமும், சுயத்தினை அறியத்தரும் பண்பும் வரையறைக்குட்பட்டது, அநித்தியமானது என்பதற்கு மிகச்சிறந்த அத்தாட்சியாகும். சுயம் எல்லையற்றதாயும் நித்திய மானதாயுமிருப்பின் அது பண்புகளைச் சூழ்ந்ததாய், பண்புகளும் ஒன்றிலொன்று அடங்கியதாய், இவற்றின் விளைவாகஎல்லாம் ஏகமாய் ஒன்றாய் மாறிவிடும். உதாரணத்துக்கு மனிதனது சுயம் என்பது ஆற்றலாகவும், ஆற்றலென்பது அறிவாகவுமிருக்கும். உயரமும் அழகும் ஒன்றானதாய்விடும். இவையாவும் ஒரே அர்த்தத்தைக் கொண்டிருக்கும்.

இவ்வுதாரணத்திலிருந்து, இறைவனின் சுயம் என்பது, மனிதஜீவிகளுக்குப் பண்புகளுண்டு என்ற அர்த்தத்தில், பண்புகள் கொண்டதாய்க் கருதப்பட முடியாது. வரையறைகளை வகுப்பதன் மூலமே பண்பு உருவாக முடியும். இறைவனின் சுயம் அனைத்து வரையறைகளையும் கடந்தது.

(இக் கடந்த நிலையின் வரையறுப்பு கூட எதார்த்தத்தில் ஒரு பண்பு ஆகும்.)

தெய்வீகப் பண்புகளின் அர்த்தம்

சிருஷ்டியுலகில் பண்புகளின் வடிவில் தோன்றும் பூரணத்துவங்கள் பலவுளவென்பதை நாமறிவோம். இப்பண்புகள் நிசமானவை; உறுதியானவை. இப்பண்புகள் எங்கு தோன்றினும் அவை அவற்றின் பண்பினை அதிக பூரணத்துவ மெய்தச் செய்து அதன் தத்துவப் பெறுமானத்தை அதிகரிக்கச் செய்யும். மனிதனைப் போன்ற சீவராசிக்கும் உயிரற்ற கல்லுக்குமிடையே ஒப்பீடு மூலம் அதனை தெளிவாகக் காணலாம். இறைவன் இப்பூரணத்துவங்களைப் படைத்து அவற்றைச் சீவராசிகளுக்கு அருளியிருக்கிறான் என்பதில் ஐயமில்லை. இவற்றையவன் சம்பூரணமாகப் பெற்றிராவிடின் மற்றவை மீது இவற்றையருளி அதன் மூலம் மற்றவைகளைப் பூரணத்துவமடையச் செய்திருக்க முடியாது. எனவே ஆழமான காரண ஆய்வின் மூலம், சிருஷ்டியாளனாகிய இறைவன் அறிவு, ஆற்றல் மற்றும் எதார்த்தப்பண்புகளனைத்தும் கொண்டவன் என்ற முடிவுக்கு நாம் வர முடியும். மேலும், ஏலவே குறிப்பிட்டது போன்று, அறிவின் ஆற்றலின் அடையாளங்களும் அவற்றின்விளைவாய் வாழ்வின் அடையாளங்கள் பிரபஞ்ச அமைப்பில் காணப்படுகின்றன.

எனினும் இறைவனின் சுயம் எல்லையற்றதாயும், நித்தியமானதாயும் இருப்பதால்,அவனது பண்புகளாகக் காட்டப்படும் பூரணத்துவங்கள் அவனது சுயமாகவும், ஒன்றோடொன்று ஒன்றியதாயும் உள்ளன. சுயத்துக்கும் பண்புகளுக்குமிடையேயும், அதேவேளை பண்புகளினிடையேயும் அவதானிக்கப்படும் வித்தியாசம் எண்ணக் கருக்களின் மட்டத்தில் மட்டுமே உண்டு. அத்தியவசியமாய் எதார்த்தம் ஒன்றே. அது ஏகமானது. பிரிக்கப்பட முடியாதது.[3]

பண்புகளைக் கற்பிப்பதன் மூலம் சுயத்தை வரையறைக்குட்படுத்தும் அல்லது அதில் பூரணத்துவக்

கொள்கையை மறுக்கும் அனுமதிக்கப்பட முடியாத தவறைத் தவிர்த்துக் கொள்ள வேண்டி இஸ்லாம் உறுதிப்பாட்டுக்கும் மறுதலிப்புக்குமிடையே சமநிலையைப் பேணுமாறு ஆணையிட்டுள்ளது. இறைவன் அறிவுமிக்கோன், ஆனால் அவ்வறிவு மனித அறிவைப் போன்றதல்ல. அவன் ஆற்றல் மிக்கோன்; ஆயினும் அவ்வாற்றல் மற்றவைகளைப் போன்றதல்ல; அவன் கேட்கிறான். ஆனால் செவிகளாலல்ல; அவன் பார்க்கிறான், ஆனால் மனிதரைப் போன்று விழிகளால் அல்ல என நம்புமாறு இஸ்லாம் கட்டளையிடுகின்றது.[4]

பண்புகள் சம்பந்தமாய் மேலும் விளக்கங்கள்

பண்புகள் பொதுவாய்ப் பூரணப்பண்புகள், அபூரணப் பண்புகள் என இருவகைப்படும். பூரணப்பண்புகள், மேலே குறிப்பிடப்பட்டது போல், நிசமானவை, உறுதியானவை. இவை அவற்றின் பண்பிற்கு உயர்தத்துவப் பெறுமானத்தையும் மாபெரும் தத்துவப்பாதிப்பையும் வழங்குகிறது. சீவனும் அறிவும் ஆற்றலுமுடைய ஓர் இருப்புக்கும் அறிவோ ஆற்றலோ இல்லாத உயிரற்ற ஓர் இருப்புக்குமிடையே ஒப்பீடுமூலம் இது துலாம்பரமாகின்றது. அபூரணப்பண்புகள் அப்பண்புகளின் புரட்டாகும். அபூரணப் பண்புகளைப் பகுத்தாய்கையில் அவை எதிர் மறைத்தன்மை வாய்ந்ததவையென்பது தெளிவாகும். அறியாமை, சகிப்பின்மை, அவலட்சணம், பிணி இத்தியாதி அபூரணப் பண்புகளாம். எனவே அபூரணப் பண்புகளின் மறுதலிப்பே பூரணப் பண்புகள் எனலாம். உதாரணமாய் அறியாமையின் மறுதலிப்பே அறிவு. இயலாமையின் எதிர்நிலையே ஆற்றல்.

இக்காரணத்தாலேயே, உறுதியான நிசப்பண்புகள் ஒவ்வொன்றையும் நேரடியாக இறைவனுக்குச் சாட்டுகின்றது திருமறை. அபூரணப் பண்புகளை அவனுக்குச்சாட்ட மறுக்கின்றது. அவன் கூறுகிறுன்: ''அவன் அறிபவன், சர்வவல்லமையுடையோன்'' மேலும், ''அவன் ஜீவனுள்ளவன்'' அல்லது நித்திரையும்சோர்வும் அவனையண்டாது'' அல்லது ''அறிந்து கொள்ளுங்கள் நீங்கள் அல்லாஹ்வை மலைக்கவைக்க முடியாது''

மகத்துவமிக்க இறைவன் எத்தகைய வரையறையும், எல்லையுமற்ற பூரண எதார்த்தம் ஆவான் என்பது ஒருபோதும் மறக்கப்படக்கூடாத விடயம். எனவே அவனுக்குச் சாட்டப்டும் மாறாத பண்பு எத்தகைய வரையறையையும் கொண்டிராது. அவன் சடப்பொருளோ ஸ்தூலதேகியோ அல்லன்; காலத்துக்கும் வெளிக்கும் கட்டுப்பட்டவனல்லன். இப்பண்புகள் யாவையும் கொண்டிருக்கும் அதேவேளை அவன் சீவராசிகளுக்குச் சொந்தமான பண்புக்கும் நிலைக்கும் அப்பாற்பட்டவன். யதார்த்தத்தில் அவனுக்குரிய ஒவ்வொருபண்பும் வரையறைபற்றிய கருத்தைவிட்டும் தூய்மையானதாகும். அவன் கூறுகிறுன்: '' அவனுக்கு ஒப்பானது ஒன்றுமில்லை . . '' (குர்ஆன் 42:11)[5]

செயற் பண்புகள்

மேலும், பண்புகள் சுயத்தின் பண்புகளென்றும் செயற்பண்புகளென்றும் பிரிக்கப்படுகின்றன. உதாரணமாக ஜீவன், அறிவு, ஆற்றல் போன்ற பண்புகள் ஜீவனுள்ள அறிகின்ற, ஆற்றல்வாய்ந்த மனித ஜீவியான நபரிலேயே தங்கியுள்ளன. வேறெந்த அம்சத்தையும் கவனத்திலெடுக்காமல், இப்பண்புகளைத் தன்னகத்தே கொண்டவனாக மனிதனைப் பற்றிய கருத்துப் படிமத்தை நாம் உருவாக்க முடியும்.

பண்பு, மற்றைய சந்தர்ப்பங்களில், பண்பில் மட்டும் தங்கியிருப்பதில்லை. பண்பைச் சாட்டுவதற்குப் புறக்காரணிகளின் இருப்பு அவசியமாகின்றது. எழுத்து, உரையாடல், ஆசை இத்தியாதிபோன்ற விவகாரங்களை இதற்கு உதாரணஞ்சொல்லலாம். பேனையும், மையும் தாளு மிருந்தால் ஒருவன் எழுத்தாளனாகலாம். பேச்சுத்துணைக்கு ஒருவரிருந்தால் அவன் உரையாடலில் ஈடுபடலாம். அதேபோன்று ஆசைப்படுவதற்கு ஒருபொருளிருப்பின் அதனையடைய அவன் ஆசைப்படலாம். இப்பண்புகள் இருப்பதற்கு மனிதனின் இருப்பு மட்டும் போதா.

ஏலவே சொன்னதுபோல் இறைவனின் சுயத்தை நிகர்த்த தெய்வீகப் பண்புகள் முதல் வகையினை மட்டுமே சாரும்

என்பது இப்பகுப்பாய்வால் தெளிவாகின்றது. இரண்டாவது வகையினைப் பொறுத்தமட்டில் அவற்றின் நிசப்பாடு புறக்காரணியொன்றிலேயே தங்கியுள்ளது. அவற்றைச் சுயத்தின் பண்புகளாகவோ சுயத்தை நிகர்த்த பண்புகளாகவோ கருதமுடியாது. ஏனெனில் இறைவனல்லாத அனைத்தும் அவனால் படைக்கப்பட்டவையே. அவையாவும் சிருஷ்டியமைப்பில் உள்ளபடியால் அவை இறைவனுக்குப் பிந்தியவையே.

சிருஷ்டிப்பவன், சர்வசக்திபடைத்தவன், உயிரளிப்பவன், மரிக்கச் செய்பவன், இரட்சிப்பவன் இத்தியாதி இறைபண்புகளும் இறைவனின் சுயமும் ஒன்றல்ல. இவை அவனது சுயத்துடன் மேலதிகமாகச் சேர்ந்திருப்பவை. இவை தொழிற் பண்புகளாகும். ஒரு செயல் நிகழ்ந்ததும் பண்பொன்று அச்செயலிலிருந்து புரிந்து கொள்ளப்படுகிறதேயன்றி (அச்செயலைப் புரியும்) சுயத்திலிருந்து புரிந்து கொள்ளப்படுவதில்லையென்பதே தொழிற்பண்பு என்பதன் அர்த்தம். உதாரணமாகச் சிருஷ்டித்தொழில் நிகழ்ந்ததும் ''சிருஷ்டியாளன்'' என்ற கருத்தாக்கம் உருவாகின்றது. சிருஷ்டியிலிருந்து சிருஷ்டியாளன் என்ற இறைப்பண்பு புரிந்து கொள்ளப்படுகின்றது. அப்பண்பு சிருஷ்டியில் தங்கியுள்ளதே தவிர இறைவனின் சுயத்தில்அல்ல. எனவே இப்பண்பின் தோற்றத்தால் சுயம் ஒரு நிலையிலிருந்து இன்னொரு நிலைக்கு மாறுவதில்லை.

சித்தம் (இராதத்) பேச்சு (கலாம்) ஆகிய இருபண்புகளும் அவற்றின் நேரடி அர்த்தத்தில் தொழிற்பண்புகளென்றே ஷிஆயிஸம் கருதுகின்றது.(சித்தம் என்பது ஒன்றை நாடுதல், பேச்சு என்பது வெளிப்பாட்டின் மூலம் கருத்தைத் தெரிவித்தல்.) ஸுன்னத் ஜமாஅத்தைச் சேர்ந்த பெரும்பாலான அறிஞர்கள் இவை அறிவைக் குறிப்பதாகக் கருதி இதனால் இவை சுயத்தின் பண்புகள் எனக் கொள்கின்றனர்.[6]

விதியும் தெய்வச் செயலும்

உலக முழுவதும் காரணகாரிய விதி எத்தகைய விதிவிலக்குமின்றி ஆட்சிசெலுத்துகிறது.[7] இவ்விதிப்படி இவ்வுலகக் காட்சி ஒவ்வொன்றும் அதன் தோற்றத்தைச் சாத்தியமாக்கிய காரணிகளிலும் நிலைமைகளிலும் தங்கியுள்ளது. முற்றான காரணி (போதுமான அத்தியாவசியக் காரணி) என அழைக்கப்படும் இக்காரணிகளனைத்தும் காணப்பட்டால், அக்காட்சியின் தோற்றமும் தீர்மானிக்கப்பட்டதாய் தேவையானதாய் மாறிவிடுகிறது. இக்காரணிகள் எதுவும் அல்லது இவற்றுட்சில இல்லையென வைத்துக் கொண்டால் அக்காட்சியின் தோற்றப்பாடு சாத்தியமில்லை. இக்கோட்பாடு பற்றிய விசாரணையும், பகுப்பாய்வும் இவ்விடயத்தை எமக்குத் தெளிவாக்கும்.

(1) ஒரு காட்சியை (அல்லது விளைவை) நாம் முற்றான (அல்லது போதுமான) காரணியுடனும், அத்தோடு முற்றான காரணியின் பகுதியோடும் ஒப்பிட்டால், முற்றான காரணியுடனான அதன் தொடர்பு அத்தியவசியமானதாய் அல்லது முற்றிலும் தீர்மானிக்கப்பட்டதாக விருக்கும். அதே வேளை முற்றான காரணியின் பகுதிகளோடு (முழுமையற்ற அல்லது பகுதிக் காரணிகள் என அழைக்கப்படுவதனோடு) ஒப்பிட்டால் அது சாத்தியப்பாடுள்ளதாக, முற்றாகத் தீர்மானிக்கப்படாததாக விருக்கும். இருப்பின் சாத்தியப் பாட்டுடன் மட்டுமே இக்காரணிகள் விளைவையுண்டு பண்ணுமே தவிர அதன் தேவையோடல்ல.

எனவே உலகம் முற்றாகத் தேவை காரணமாய் ஆளப்படுகின்றது. ஏனெனில் அதன் ஒவ்வொருபகுதியும் இருப்பின் மூலமாக அதன் முழுமையுடன் அவசியத் தொடர்பு கொண்டுள்ளது. அதன் அமைப்பு தேவையான, நிச்சயமான சம்பவங்களின் தொகுதியால் உருவானதாகும். எனவே முற்றானதல்லாத பகுதி காரணிகளுடன் தொடர்பு கொண்ட காட்சிகளில் நாம் ஒவ்வொரு பகுதியையும் வேறாகக் கவனித்தால், சாத்தியப்பாட்டின் குணாம்சம் அப்பகுதிகளில் பேணப்படுவதைக் காணலாம்.

இவ் வத்தியாவசிய ஆட்சியைத் திருமறைப் போதனைகள் தெய்வ விதி (கலா) என்கின்றன. இவ் வத்தியாவசியம் உலகிற்கு இருப்பை வழங்கும் ஆதார மூலத்திலிருந்து உருவாகின்றது. எனவே இது ஓர் ஆணை (ஹுக்கும்) யும் 'தெய்வ விதி' யும் ஆகும். இவ்விதி நிச்சயமானது, மீறப்பட முடியாதது, நீதியை அடிப்படையாகக் கொண்டது, விதிவிலக்கையும் பாரபட்சத்தையும் ஏற்காதது . . . அதிகாரம் யாவும் அல்லாஹ்வுக்கே யன்றி (வேறு) எவருக்குமில்லை . . . (குர்ஆன், 6:57) இன்னும் . . . அவன் எதைப் படைக்கக் கருதினாலும் அதனை ''ஆகுக!'' எனக் கூறியமாத்திரத்தில் உடனே அது ஆகிவிடுகிறது (குர்ஆன் 2:117) மேலும் . . . அல்லாஹ்வே தீர்ப்பளிக்கக் கூடியவன். அவனுடைய தீர்ப்பை தடை செய்யக் கூடியவன் ஒருவனுமில்லை (குர்ஆன் 13:41)

(2) காரணியின் ஒவ்வொரு பகுதியும் விளைவுக்கான பொருத்தமான பரிமாணத்தையும் மாதிரியையும் வழங்குகிறது. அவ்விளைவு நேர்வது முற்றான காரணியால் அதற்கெனத் தீர்மானிக்கப்பட்ட பரிமாணங்களின் முழுமைக்கு இசைவானதாயிருக்கும். உதாரணமாக, மனிதன் சுவாசிப்பதைச் சாத்தியமாக்கும் காரணி முழுமையான, நிபந்தனையற்ற அர்த்தத்தில் சுவாசத்தையேற்படுத்துவதில்லை; ஆனால் வாயினூடு, நாசியினூடு திட்டமிட்ட அளவு காற்றை சுவாசக்குழாய் வழியாகத் திட்டமிட்ட நேரத்தில் திட்டமிட்ட வடிவில் அனுப்புகின்றது. அது போன்றே, மனிதனது பார்வைக்கான காரணிகள் வரையறையோ நிலைமைகளோ அற்று பார்வையை உண்டாக்குவதில்லை. ஆனால் வழிவகைகள் மூலம் உறுப்புகள் மூலம் எல்லாவகையிலும் மனிதனுக்கென மட்டிட்ட அளவான பார்வையையே உண்டாக்குகிறது. உலகின் சகல தோற்றங்களிலும், சகல நிகழ்வுகளிலும் இவ்வுண்மையைக் காண முடியும்.

உண்மையின் இவ்வம்சத்தைத்தான் திருமறை '' தெய்வச் செயல்'' (கத்ர்) என்கிறது. சிருஷ்டியின் ஆதாரமூலமான எல்லாம் வல்ல இறைவனுடன் இதனைத் தொடர்பு படுத்துகின்றது.

ஒவ்வொரு பொருளின் பொக்கிஷங்களும் நம்மிடமே இருக்கின்றன. எனினும் அவற்றை குறிப்பிட்ட அளவில் தான் நாம் இறக்கிவைக்கிறோம் (குர்ஆன், 15:21).[8]

அதே போன்று, தெய்வ விதிப்படி பிரபஞ்ச அமைப்பில் ஒவ்வொரு தோற்றத்தினதும் நிகழ்வினதும் இருப்பு அத்தியாவசியமானது: தவிர்க்க முடியாதது. அத்தோடு தெய்வச் செயலாக உண்டாகும் ஒவ்வொரு தோற்றமும் நிகழ்வும் அதற்கென இறைவன் வழங்கிய பரிமாணத்தை இம்மியளவும் மீறமுடியாது.

மனிதனும் சுயசித்தமும்

மனிதன் ஆற்றுஞ் செயல் சிருஷ்டியுலகின் ஒரு காட்சியாகும்..அதன் தோற்றம் உலகின் மற்றையக் காட்சிகளைப் போலவே முழுமையாக அதன் காரணியில் தங்கியுள்ளது. மனிதன் சிருஷ்டியுலகின் ஓர் அங்கமாக இருப்பதாலும், பிரபஞ்சத்தின் பிற அங்கங்களுடன் தத்துவ உறவு பூண்டிருப்பதாலும் அங்கங்கள் அவனது செயல்கள் மீது பாதிப்பை உண்டு பண்ணாது என்ற கூற்றை நாம் ஏற்க முடியாது.

உதாரணமாக, மனிதன் ஓர் ரொட்டித் துண்டைக் கடித்துத் தின்ன விரும்பினால் அவனுக்கு கைகள், கால்கள், வாய் முதலிய உறுப்புகளும் அத்தோடு அறிவு, ஆற்றல், நாட்டம் முதலியவையும் மட்டுமிருந்தால் போதாது. புறவுலகில் ரொட்டி இருத்தலும் அவசியம். அது கிடைக்கக் கூடியதாய் இருத்தல் வேண்டும், அதைப் பெறுவதில் முட்டுக் கட்டைகள் இருக்கக் கூடாது. மற்றும் யதார்த்தமான நிலைமைகள் இருக்கவேண்டும். இக்காரணிகளில் ஏதாவது இன்றேல் செயல் சாத்தியமில்லை. இதற்கு மாற்றமாக, இவையாவும் (முழுக் காரணி) இருப்பின் இச் செயல் நிகழ்வது முற்றிலும் அவசியமாகின்றது.. முழுக்காரணியின் அனைத்து பகுதிகளும் தொடர்பாகச் செயல் நிகழ்வதன் அவசியம் மனிதனுக்கும் செயலுக்கு மிடையிலான தொடர்பின் சாத்தியப்பாட்டுடன் முரண்படுவதில்லை. மனிதன் முழுமையான காரணியின் பகுதியாவான். செயலைப்

புரிவதற்கான சாத்தியப்பாடு அல்லது சுயசித்தம் கொண்டவனாக மனிதன் உள்ளான். செயலுக்கும் காரணியின் சகல பகுதிகளுக்குமிடையே நிலவும் தேவை, மனிதனும் ஒரு பகுதியாகவுள்ள முழுமையான காரணியின் சில பகுதிகளோடு செயலுக்குள்ள தொடர்பும் தேவையானதாக, தீர்மானமானதாக இருத்தல் வேண்டுமென அர்த்தப்படாது.

மனிதனின் எளிய, தூய விளக்கமும் இக்கண்ணோட்டத்தை உறுதிப்படுத்துகின்றது. மனிதர்கள் இறைவன் தமக்கருளிய இயல்பு மூலம் மதிநுட்பத்தின் மூலம் ஒரு புறம் ஊண், குடிப்பு, வருதல், போதல் முதலிய வற்றுக்கும் மறுபுறம் உடல் நலம், பிணி, வயது, இளமை அல்லது உடலின் உயரம் போன்றவற்றுக்குமிடையே வேறுபாடு காண்கின்றனர். மனிதனின் சித்தத்துடன் நேரடித் தொடர்புகொண்ட முதற்தொகுதி அம்மனிதனின் சுதந்திரத் தெரிவின்படி செய்யப்படுவதாகக் கருதப்படும். மனிதர்கள் அவற்றை விதிக்கவும் விலக்கவும் முடியும். ஆனால் இரண்டாம் தொகுதியைப் பொருத்த மட்டில் மனிதனுக்கு எவ்விதக் கடமையுமில்லை. அவன் எவ்வித இறை கட்டளைக்கும் உட்பட வில்லை. அவற்றின் மீது அவன் சுதந்திரத் தெரிவு கொண்டவனாக இல்லை.

இஸ்லாத்தின் தொடக்கத்தில், மனிதச் செயலின் மத அம்சங்கள் குறித்து இரு பிரிவுகள் ஸுன்னத் ஜமாஅத்தினர் மத்தியில் காணப்பட்டன. மனிதச் செயல் மீறப்பட முடியாத இறைசித்தத்தின் விளைவு என்ற கருத்து கொண்ட ஒரு பிரிவினர், மனிதச் செயல்கள் முன்கூட்டியே தீர்மானிக்கப்பட்டுவிட்டவை; மனிதனின் சுயசித்தம் என்பது எத்தகைய பெறுமதியோ அர்த்தமோ அற்றது எனக் கருதினர். மறுபிரிவினர், மனிதன் செயற் சுதந்திரம் கொண்டவனென்றும் அவை இறை சித்தத்தில் தங்கியிருக்கவில்லையென்றும் அச்செயல்கள் தெய்வச் செயலின் (கத்ர்) விதிக்குப் புறத்தே நிகழ்வதென்றும் நம்பினர்.

ஆனால் அல்குர்ஆனின் நேரடி அறிவுறுத்தல்களுக்கு இசைவான நபிகுடும்பத்தினரின் அறிவுறுத்தலின் படி மனிதன்

செயல்களில் சுயாதீனம் (முஹ்தார்) கொண்டவன். எனினும் சுதந்திரம் (முஸ்தக்கில்) வாய்ந்தவனல்லன். சுயசித்தத்தின் மூலம் எல்லாம் வல்ல இறைவனே செயலை விதித்துள்ளான். எமது முன்னைய பகுப்பாய்வின்படி, முற்றான காரணியின் அனைத்து பகுதிகளினூடு உயரிறைவன் செயலை அத்தியாவசியமாக்குகின்றான். இம்முற்றான காரணியின் ஒரு பகுதியே மனிதசித்தமும் அவனது சுதந்திரத் தெரிவும் ஆகும். இவ்வகை இறை சித்தத்தின் விளைவாகச் செயல் அத்தியாவசியமாகின்றது. ஆயினும் அதில் மனிதன் சுயாதீனமும் கொண்டுள்ளான். அதாவது, காரணியின் அனைத்து பகுதிகளையும் பொறுத்தமட்டில் செயல் அத்தியாவசிய மாகிறது. ஆனால் அக்காரணியின் ஓர் அங்கமான மனிதனைப் பொறுத்தமட்டில் அது சாத்தியமானதாகவும், சுதந்திரத் தெரிவினைக் கொண்டதாகவும் உள்ளது.[9]

ஐந்தாம் ஆறாம் இமாம்கள் கூறினர்: '' இறைவன் தனது சிருஷ்டிகளை எந்தளவு நேசிக்கிறானெனில் பாவம் புரியுமாறு நிர்ப்பந்தித்து விட்டு அப்புறம் அவன் தண்டிப்பதில்லை. இறைவன் எவ்வளவு வல்லமை படைத்தவனெனில் அவன் எதை ஆணையிட்டாலும்அது நடக்கின்றது. மேலும் ஆறுவது இமாம் கூறியுள்ளார்கள்:'' ''இறைவன் எவ்வளவு தயாள முள்ளவனெனில் மனிதர்கள் மீது அவர்களின் சக்திக்கு மீறியவைகளை அவன் கடமையாக்கவில்லை. அவன் எவ்வளவு சக்திவாய்ந்தவனெனில் அவனது இராச்சியத்தில் அவன் விதிக்காதது எதுவும்உண்டாவதில்லை''. (பூர்வவிதி, சுயசித்தம் ஆகிய இரு சிந்தனைப் பிரிவுகளையும் இது சுட்டுவதாக உள்ளது.) (பிஹார் அல்-அன்வார், வல். 3 பக 5, 6, 15)

குறிப்புகள்

அத்தியாயம் IV

1. இறைவனின் திருமறையில், இக்காரண ஆய்வுபற்றிப் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: '' . . . வானங்களையும் பூமியையும் படைத்தவனான அல்லாஹ்வைப்பற்றி ஐயமிருக்க முடியுமா? . . . (குர்ஆன், 14:10)

2. பதிப்பாசிரியர் குறிப்பு: இது மீண்டும் '' நாம் அவர்களுக்கு எமது அத்தாட்சிகளைக் காட்டுவோம். . . '' என்ற மேலே குறிப்பிடப்பட்ட மறைவசனத்தை ஆதாரமாகக் கொண்டது. இயற்கையின் தோற்றங்கள், மனித ஆன்மாவினுள் காணப்படும் யதார்த்தங்கள் இரண்டும் இறைவனின் ''அடையாளங்கள்'' ஆகும். எஸ். எச். நஸ்ர் எழுதிய '' இஸ்லாமியப் பிரபஞ்சீயக் கோட்பாடுகளின் அறிமுகம்'', கேம்பிரிட்ஜ் (யு. எஸ். ஏ) , 1964 முன்னுரையைப் பார்க்கவும்.

3. ஆறாவது இமாம் இவ்வாறு கூறியுள்ளார்: '' இறைவன் மாறாத இருப்பு உள்ளவன். அறியப்படுவதற்கு ஒன்றும் இராத போது அவனது அறிவு அவனாகவே இருந்தது. கேட்கக் கூடியது ஒன்றும் இராதபோது அவனது கேள்வி அவனாகவே இருந்தது. பார்க்கக் கூடியது ஒன்றும் இராதபோது அவனது காட்சி அவனாகவே இருந்தது. அதிகாரம் செலுத்தப்படுவதற்கு ஒன்றுமே இராதபோது அவனது அதிகாரம் அவனாகவே இருந்தது'' பிஹார் அல்- அன்வார், வல். 2, பக். 125.

இவ்விவகாரம் குறித்து நபிகுடும்பத்தினரின் எண்ணற்ற பாரம்பரியங்கள் உண்டு. பார்க்கவும் : நஹ்ஜ் அல்-பலாஹாஹ்; ஸாதுக் எழுதிய தௌஹீத், தெஹ்ரான், 1375; இப்னு குத்தைபாஹ்வின் உயூன் அல்-அக்கார், கெய்ரோ, 1925-35; பிஹார் அல்-அன்வார், வல். 2.

4. ஐந்தாம் ஆறாம் இமாம்கள் இவ்வாறு கூறியுள்ளனர்: ''இறைவன் இருள் கலவாத ஒளியாவான். அறியாமை ஊடுருவ முடியாத அறிவாவான். மரணமற்ற வாழ்வாவான்'' (பிஹார் அல்-அன்வார், வல் 2, பக் 129) எட்டாவது இமாம் இவ்வாறு கூறியுள்ளார்கள் : ''இறைவனது பண்புகள் குறித்து மக்கள் மூன்றுவழிகளைப் பின்பற்றியுள்ளனர். முதல் குழுவினர் இறைவன் மற்றவைகளின் பண்புகளை நிகர்த்த பண்புகளைக் கொண்டுள்ளான் எனக் கருதுகின்றனர். இரண்டாம் குழுவினர் பண்புகளை மறுக்கின்றனர். படைப்பினங்களின் பண்புகளை ஒத்திராத பண்புகளின் இருப்பை உறுதிப்படுத்தும் மூன்றாம் குழுவினரின் வழியே சரியானது'' பிஹார் அல்-அன்வார், வல். 2, பக். 94.

5. ஆறாம் இமாம் பின்வருமாறு கூறியுள்ளார்: காலம், வெளி, இயக்கம், பொருள்படுத்தல் அல்லது இத்தியாதி முதலியவற்றால் இறைவனை வர்ணிக்க முடியாது. ஆனால் அவனே காலம், வெளி, இயக்கம், பொருள் இத்தியாதிகளின் சிருஷ்டிகர்த்தா பிஹார் அல்-அன்வார், வல். 2, பக். 96.

6. ஆறாம் இமாம் கூறியுள்ளார்: '' அறியப்படுவதற்கு ஒன்றும் இல்லாத போது இறைவன் அவனது சுயத்தில் எப்பொழுதும் அறிபவனாகவும், அவனது அதிகாரம் பிரயோகிக்கப்படுவதற்கு ஒன்றுமே இல்லாதபோது அவன் அதிகாரம் வாய்ந்தவனாகவும் இருந்தான்.'' இப்பாரம்பரியத்தை அறிவிப்பவர் விவரிக்கின்றார், '' நாம் அவனிடம் பேச்சிருந்தது' என்றேன். 'வார்த்தை (கலாம்) படைக்கப்பட்டது.

இறைவனிருந்தான். அவனிடம் பேச்சிருக்கவில்லை. அப்புறம் அவன் வார்த்தையைப் படைத்து இருப்பு பெறச் செய்தான்' என அவர் பதிலளித்தார்.'' பிஹார் அல்- அன்வார், வல். 2, பக். 147 மேலும் எட்டாவது இமாம் கூறியுள்ளார்: ''சித்தம் மக்களின் உள்ளார்ந்த இருப்பிலிந்து வருவது . அதைத் தொடர்ந்து செயல் தோன்றுகிறது. இறைவனைப் பொருத்தவரை, உண்டாகச் செய்யும் அவனது செயல் மட்டுமே உள்ளது. எங்களைப்போலன்றி இறைவன் சிந்தையும், நோக்கமும், விவரண சிந்தனையும் கொண்டிருக்கவில்லை.'' பிஹார் அல்-அன்வார், வல். 2, பக். 144.

7. பதிப்பாசிரியர் குறிப்பு: பெரும் பருப்பொருள் மட்டத்தில் கண்டிப்பான காரணத்துவம் இருப்பினும் இல்லாவிடினும், இவ்வுறுதிப்பாடு உண்மையென்பது சொல்லாமலே விளங்கும். ஸ்தூலத்துக்கப்பாற்பட்ட இருப்பின் உயர் மட்டங்களிலும் காரணத்துவம் ஆதிக்கஞ் செலுத்துகின்றது.

8. ஆறாம் இமாம் கூறியுள்ளார்கள்: '' உயரிய இறைவன் ஒன்றைச் சித்தப்படுத்தியதும் அவன் அதனை பூர்வ விதியுள்ளதாக்குகின்றான்; பூர்வ விதியுள்ளதாக்கியதும் அதனை விதிக்கின்றான்; விதிக்கும் போது அதனை நிறை வேற்றி வைத்துச் செயல்படச் செய்கின்றான்'' பிஹார் அல்-அன்வார், வல். 3, பக். 34.

9. பதிப்பாசிரியர் குறிப்பு: சுயசித்தமும், தீர்மானிக்கப்பட்டதும் சம்பந்தமான விவகாரம் மதரீதியாகத் தீர்வுக்காண்பதில் கடினமானவைகளில் ஒன்றாகும். அது விவரண விசாரணையைக் கடந்த யதார்த்தத்தை உள்ளடக்கியதாகும். சம்பூரண எதார்த்தத்தைப் பொறுத்த மட்டில் சுயசித்தம் கிடையாது ஏனெனில் சம்பூரணத்தலிருந்து விடுதலையான குறைவான பகுதியதார்த்தம் கிடையாது. ஆனால் தொடர்பு நிலையான அர்த்தத்தில் மனிதன் எதார்த்தம் என்ற அளவில் அவன் சுயசித்தம் கொண்டவன். காரணத்துவத்தைப் பொருத்தவரை மொத்தக் காரணி தொடர்பாக தீர்மானத்தன்மையுண்டு: ஆனால் அம் மொத்தக் காரணியின் பகுதியான மனிதனது செயலைப் பொறுத்தமட்டில் சுதந்திரமுண்டு.

அத்தியாயம் V

தீர்க்கதரிசி பற்றிய அறிவு

இலக்கு நோக்கி: பொதுவான வழிகாட்டல்

மண்ணின் மார்பினுள் பொருத்தமான நிலைமைகளில் வைக்கப்படும் கோதுமை மணி வளரத்தொடங்கி வளர்ச்சிப்பாதையில் கணந்தோறும் புதியவடிவம் பெறுகின்றது. குறிப்பிட்டவோர் ஒழுங்குமுறையைப் பின்பற்றி வளர்ச்சிகண்டு கோதுமைப் பயிராக மாறுகின்றது. இக்கோதுமை மணிகளிலொன்று மறுபடியும் நிலத்தில் வீழின் அது இறுதி இலக்கை எய்தும்வரை மீண்டும் அதே விருத்திவட்டத்தில் பயணம் தொடங்கும் அது போன்று ஒரு பழவிதையாயிருப்பின் அதன் மாற்றம் மண்ணுக்குள் நிகழ்கிறது. கோதுபிளந்து பச்சைத்தண்டு துளிர்த்துக்கிளம்புகிறது. ஒழுங்கு முறைப்படி வளர்ச்சிகண்டு பழமுதிர் மரமாக மாறுகிறது. அல்லது அது ஒரு பிராணியின் விந்தாகவிருப்பின் முட்டையினுள் அல்லது தாயின் கருப்பையினுள் வளர்ச்சிகண்டு பிராணிகளுக்கே உரிய வளர்ச்சிப்படிகளைத் தாண்டி பூரணமடைந்த பிராணியாக மாறுகின்றது.

இத்திட்டவட்டமான பாதையும் ஒழுங்கான வளர்ச்சியும் இவ்வுலகில் ஒவ்வொரு உயிரினத்திலும் காணப்படுகின்றது. அவை அவ்வுயிரினத்தின் உள்ளார்ந்த இயல்பால் தீர்மானிக்கப்படுகின்றன. கோதுமைமணியிலிருந்து உண்டாகும் பசிய கோதுமைப்பயிர் ஒரு போதும் ஓட்ஸ் தானியமாகவோ அல்லது செம்மறியாகவோ, ஆடாகவோ, யானையாகவோ மாறுவதில்லை. கர்ப்பமுற்ற ஒரு பிராணியிலிருந்து கோதுமைக் கதிர்களோ மரங்களோ தோன்றுவதில்லை. புதிதாகப்பிறந்த ஒரு சிசுவின்

அங்கங்களிலோ, இயற்கைச் செயற்பாடுகளலோ குறைகள் காணப்படின் அல்லது ஒரு செம்மறிமாட்டுக் குட்டி ஒரு கண் அற்றதாகப் பிறந்திருந்தால், அல்லது ஒரு கோதுமைச் செடி கதிர் அற்றதாகத் தோன்றியிருந்தால் அவ்வாறான தொரு நிகழ்வு ஏற்படுது, ஒரு கிருமியின் காரணமாகவோ அல்லது ஒரு நோயின் காரணமாகவோ அல்லது ஒரு இயற்கைக்குமாறான காரணி காரணமாகவோ என்பது சந்தேகமற எமக்குத் தெரியும். வஸ்துகள் உண்டாவதிலும் விருத்தியடைவதிலும் தொடர்ச்சியான ஒழுங்குமுறை இருப்பதும் ஒவ்வொரு சீவராசியும் அதன் தோற்றத்திலும் வளர்ச்சியிலும் குறிப்பிட்டவொரு விதிமுறையைக் கொண்டிருப்பதுவும் மறுக்கமுடியாத உண்மை.

பிரத்தியட்சமான இக்கோட்பாட்டிலிருந்து இரு முடிவுகளைப் பெறலாம்

(1) ஒவ்வொரு சீவராசியும் கடந்துசெல்லும் பல்வேறு படிகளுக்கிடையே தொடக்கம் முதல் இறுதிவரை தொடர்ச்சியும் பரஸ்பரத் தொடர்பும் காணப்படுகின்றது. ஒவ்வொரு வளர்ச்சிப் படியிலும் அச்சீவராசி பின்னாலிருந்து உந்தப்படுவதாயும் வரப்போவதன்பால் ஈர்க்கப்படுவதாயும் தெரிகிறது.

(2) மேலே குறிப்பிட்ட தொடர்ச்சியும் பரஸ்பர தொடர்பும் காரணமாக ஒவ்வொரு சீவராசியினதும் கடைசிப்படி அதன் வளர்ச்சியின் தொடக்கத்திலிருந்தே அதன் இலக்காகவும் ''இருப்பின் கவனம்'' ஆகவும் உள்ளது. உதாரணமாக பூமிக் கடியிலிருந்து முளைவிடும் கடுக்காயின் கவனம் அக்கணத்திலிருந்தே பூரண வளர்ச்சியெய்திய கடுக்காய் மரத்தையே மையங் கொண்டுள்ளது. முட்டையிலோ கருப்பையிலோ இருக்கும் விந்து அக்கணம் முதல் பூரணவளர்ச்சி யுற்ற ஒரு சீவனின் நிலைநோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

வஸ்துகளின் சிருஷ்டிப்பும் இரட்சிப்பும் இறைவனிடமே முழுமையாக உள்ளதெனப் போதிக்கும் திருமறை அதனதன் வளர்ச்சிப்பாதையில் முன்னேறிச் செல்லும் ஒவ்வொரு

சீவராசியினது நகர்வும் ஈர்ப்பும் இறைவழிகாட்டல் மூலமே நிகழ்வதாகக் கருதுகின்றது. அவன் கூறுகிறான்: . . . ''எவன் ஒவ்வொரு பொருளுக்கும் அஃததற்குரிய இயற்கைத் தன்மையை கொடுத்து வழியையும் அறிவித்தானோ அவன் தான் எங்கள் இறைவன் (குர்ஆன்,20:50).[1] மேலும், ''அவனே படைத்து, அவைகளை ஒழுங்கு படுத்தியவன் அவனே கற்பனை செய்து வழிகளையும் அவைகளுக்கு அறிவித்தான் (குர்ஆன், 89,2-3) மேலும், இத்திருவசனங்களின் விளைவை அவன் பின்வரும் வார்த்தைகளில் குறிப்பிடுகிறான்: ஒவ்வொருவருக்கும் அவர்கள் நோக்கும் திசையுண்டு மேலானவற்றிற்கு நீங்கள் முந்திக் கொள்ளுங்கள் . (குர்ஆன், 2:148)[2] அத்துடன், '' இன்னும் வானங்களையும் பூமியையும் அவற்றுக்கிடையே உள்ளவைகளையும் நாம் விளையாட்டுக்காகப் படைக்கவில்லை. உண்மையாகவன்றி அவற்றை நாம் படைக்கவில்லை. எனினும் அவர்களில் அநேகர் அறியமாட்டார்'' (குர்ஆன், 44: 38-39). [3]

விசேட வழிகாட்டல்

மனித ஜீவிகள் இப்பொது விதிக்கு விலக்கானவர்களல்லவென்று வெளிப்படை சகல சீவராசிகள் மீதும் அதிகாரஞ்செலுத்தும் இவ்வழிகாட்டல் மனிதனையும் ஆள்கின்றது. ஒவ்வொரு சீவராசியும் அதன் குறிப்பிட்ட இயல்பு மூலம் பூரணத்துவம் நோக்கிய பாதையைப் பின்பற்றி, அதை நோக்கி வழிகாட்டப்படுவதுபோல் மனிதனும் அவனது உண்மையான பூரணத்துவம் நோக்கி இவ்வழிகாட்டல் மூலம் நெறிப்படுத்தப்படல்வேண்டும்.

பிறவிலங்கினங்கள் தாவரவினங்களுடன் மனிதன் பல பொதுவான அம்சங்களைக் கொண்டிருந்தபோதும், அவனை வேறுபடுத்திக் காட்டும் அவனது விசேட குணாம்சம் அவனது பகுத்தறிவாகும்.[4] பகுத்தறிவு கொண்டே மனிதனால் சிந்திக்கவும், சாத்தியப்பட்ட அனைத்து சாதனங்களையும் பயன்படுத்திக் கொள்ளவும் முடிகிறது. பரந்த வான்வெளியில் பறக்கவும். ஆழ்கடலில் நீந்தவும், கனியங்களாயிருப்பினும்,

பூமியின் மேற்பரப்பிலுள்ள தாவர, விலங்குயிர் களாயிருப்பினும் அனைத்து படைப்பினங்களையும் தனக்குச் சேவைபுரியச் செய்யவும், அவற்றின் மீது அதிகார மோச்சவும் மனிதனால் முடிகிறது. மனிதர்களிடமிருந்து கூட அவன் முடிந்தளவு நன்மைபெறுகின்றான்.

மனிதன் தனது பூர்வ இயல்பு காரணமாக முழுமையான விடுதலையிலேயே தனது இன்பத்தையும் பூரணத்துவத்தையும் காண்கிறான். எனினும் தேவைகாரணமாக அவன் தனது சுதந்திரங்கள் சிலவற்றைத் தியாகஞ் செய்ய வேண்டியுள்ளது. அவன் சமூக ஜீவியாகப் படைக்கப்பட்டிருப்பதே இதற்குக் காரணம். அவனிடமிருந்து எதிர்பார்க்கப்படும் எண்ணற்ற கடமைகளை அவனால் தனியாக நிறைவேற்ற முடியாது. தன்னைப் போன்றே சுயமையங்கொண்ட இயல்பூக்கமும் சுதந்திர வேட்கையும் கொண்ட பிற மனிதஜீவிகளுடன் அவன் ஒத்துழைக்கவும் சமூக உறவு பூணவும் வேண்டியுள்ளது. பிறரிடமிருந்து அவன் பயன்பெறுவதுபோல் பிறருக்கும் அவன் பயனுள்ளவனாக இருக்க வேண்டிள்ளது. பிறர் உழைப்பிலிருந்து அவன்பெறும் அறுவடைக்குச் சமமாக தன்னுடைய உழைப்பிலிருந்தும் அவன் வழங்க வேண்டியுள்ளது. தொகுத்துரைப்பதாயின், பரஸ்பர ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்ட சமூக மொன்றை ஏற்றுக் கொள்வது அவனைப் பொறுத்தவரை அவசியமாகின்றது.

புதிதாகப் பிறந்த குழந்தைகளின் விடயத்தில் இது நன்கு தெளிவாகின்றது. ஒன்றின் மீது ஆசைவைக்கும் போது அவை பலவந்தத்தையும் அழுகையையும் பிரயோக்கின்றன. ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் ஏற்றுக் கொள்ள அவை மறுக்கின்றன. ஆனால் படிப்படியாக மனவளர்ச்சியுறும் போது கலகஞ் செய்வதாலும், பல வந்தத்தாலும் மட்டும் வாழ்க்கைப் பிரச்சினைகளை வெற்றிகாண முடியாதென அவை உணரத்தலைப்படுகின்றன. எனவே அக்குழந்தைகள் சிறிதுசிறிதாக சமூக ஜீவியின் நிலையை அடைகின்றன. இறுதியாய் வளர்ச்சிடைந்த மனோ ஆற்றல்களுடன் அவை

சமூகப் பிறவிகளாக மாறிவிடுவதோடு அவற்றின் சூழலின் சமூக விதிகளுக்கு அவை கட்டுப்படத் தொடங்கிவிடுகின்றன.

சமூக உறுப்பினர்களிடையே பரஸ்பர ஒத்துழைப்புக்கான தேவையை மனிதன் ஏற்றுக் கொள்ளத் தொடங்கும் போது, சமூகத்தையாள்கின்ற விதிகளுக்கான தேவையையும் அவன் அங்கீகரிக்கின்றான். இவ்விதிகள் ஒவ்வொரு தனி நபருடைய கடமையை விவரிப்பதோடு, அவற்றை மீறுபவனுக்கான தண்டனையையும் திட்டவட்டமாயுரைக்கின்றன. சமூகத்தில் ஒவ்வொரு தனிமனிதனும் அவனது முயற்சிகளின் சமூகப் பெறுமானத்துக்குச் சமானமாய் விமோசனங்காண்பதற்கும் உண்மையான இன்பத்தையடைவதற்கும் உதவும் சட்டங்களை அவன் ஏற்றுக்கொள்கிறான். மனிதன் தனது இருப்பின் தொடக்க நாள் தொட்டு இன்றுவரை தேடுகின்ற, தன் ஆசைகள் அனைத்திலும் பிரதானம் பெற்றுத் தன்னைக்கவர்ந்திழுக்கும் நடைமுறைச்சாத்தியமான அதே அகில விதிகளே இவை. அத்தகைய ஒன்றை அடைவது சாத்தியமில்லையெனின், மனிதவிதியின் பலகையில் அவை எழுதப்பட்டிருக்க வில்லையாயின், அது மனிதனின் நித்திய ஆவலாய் இருக்கமுடியாது. [5]

. . . இவ்வுகத்தில் அவர்களுடைய வாழ்க்கையின் தரத்தை அவர்களுக்கிடையில் நாமே பங்கிட்டு, அவளில் சிலருடைய பதவியை, சிலரைவிட நாம் தாம் உயர்த்தினோம். அவர்களில் சிலர் சிலரை (வேலைக்காரர்களாக) ஐக்கியப்படுத்திக் கொள்வதற்காக. . . (குர்ஆன், 43:32)[6] எனக் கூறுவதன் மூலம் உயரிறைவன் மனிதசமுதாயத்தின் இவ் யதார்த்தத்தைக் குறிப்பிடுகின்றான். மனிதனது சுயநலத்தையும் ஏகபோக ஆசையையும் குறித்து அவன் கூறுகின்றான்: '' நிச்சயமாக மனிதன் பொறுமையற்றவனாகப் படைக்கப்பட்டிருக்கின்றான். தனக்குத் கெடுதிவரும் போது அவன் அச்சமடைபவனாகவும் தனக்கு நன்மை வரும் போது அவன் லோபத்தனமாயும் இருக்கின்றான்'' (குர்ஆன்,70: 19-21)

பகுத்தறிவும் சட்டமும்

இவ்விடயம் குறித்து ஆழமாக நோக்கினால், மனிதன் தனக்கு இன்பத்தைக் கொணரக் கூடிய சட்டங்களைத் தொடச்சியாகத் தேடிக்கொண்டிருக்கிறான் என்பதையும், மக்கள் தனிமனிதராகவும் கூட்டமாகவும், தமக்கு இறைவனால் வழங்கப்பட்ட இயல்புக்கேற்ப, எத்தகைய பாரபட்சமும் விதிவிலக்குமின்றித் தமக்கு விமோசனமளிக்கக் கூடிய சட்டங்களை, மனித இனத்தின் மத்தியில் பூரணத்துவத்துக்கான பொதுவிதியை உருவாக்கும் சட்டங்களை அடையாளங் காண்கின்றனர் என்பதையும் நாம் கண்டு கொள்கிறோம். மனிதவரலாற்றின் பல்வேறு காலகட்டங்களிலும் இதுவரை இத்தகைய சட்டங்களை மனித அறிவால் உருவாக்க முடியவில்லையென்பது பிரத்தியட்ச உண்மை. அவ்வாறாயிருப்பின், சமூகத்தில் அத்தகைய சட்டம் இருப்பதற்கான தேவையை ஒவ்வொருவரும் உணர்வது போலவே, பகுத்தறியும் ஆற்றல் வாய்ந்த ஒவ்வொரு மனிதனும் இம்மனிதச் சட்டத்தையும் விளங்கிக் கொள்வான்.

வேறு வார்த்தைகளில் சொல்வதானால், மனித சமுதாயத்துக்கு இன்பந்தரவல்ல பூரண பொதுச்சட்டத்தை உருவாக்கல் மனித அறிவின் கடமையென்பது இயல்பாயின், உலக சிருஷ்டிப் போக்கினூடு அப்பூரணச் சட்டத்தின்பால் மனிதன் வழிகாட்டப்படல் வேண்டுமென்றிருப்பின், அப்போது அன்றாட வாழ்வின் தீர்மானமானு போக்கினூடு தனக்கு நன்மையெது தீமையெது வென மனிதன் அறிந்து கொள்ளும் அதே பாங்கில், ஒவ்வொரு மனிதனாலும் அவனது பகுத்தறிவின் மூலம் அத்தகைய சட்டங்கள் கிரகித்துக் கொள்ளப்பட்டிருக்கும். என்றபோதிலும் அத்தகைய சட்டங்கள் இருப்பதன் அறிகுறியை இன்னும் காணோம். தாமாகவே உண்டான அல்லது ஓர் ஆட்சியாளனாலோ, தனி நபர்களாலோ, தேசங்களாலோ உருவாக்கப்பட்டு, பல்வேறு சமூகங்களிடையே நிலவுகின்ற சட்டங்கள் சிலரால் உறுதியானவையென்றும் மற்றோரால் சந்தேகத்திற் குரியவையாயும் கருதப்படுகின்றன. இச்சட்டங்களைச் சிலர் அறிந்தும் மற்றோர்

அறியாமலுமிருக்கின்றனர். இறைவன் அருளிய பகுத்தறிவைக் கொண்டவர்கள் என்ற முறையில் அடிப்படை அமைப்பில் ஒரே விதமான எல்லாமக்களும், மனிதவுலகில் இன்பத்தைக் கொண்டுவரக்கூடிய சட்டங்களின் விவரங்களையிட்டுப் பொதுவான பிரக்ஞை கொண்டிருக்க வேண்டுமென்பது இதுவரை நடந்தேறவில்லை.

வெளிப்பாடு என அழைக்கப்படும் மர்மமான ஞானமும் பிரக்ஞையும்

இவ்வாறு மேலே நடந்த விசாரணையின் வெளிச்சத்தில், மனித சமுதாயத்துக்கு இன்பத்தை உத்தரவாதஞ் செய்யக்கூடிய சட்டங்களைப் பகுத்தறிவால் உருவாக்க முடியாதென்பது தெட்டத்தெளிவு. படைப்பு முழுவதிலும் இழையோடும் பொதுவழிகாட்டல் கோட்பாட்டின்படி இச்சட்டங்களைப் பற்றிய பிரக்ஞை மனிதஜீவியிடம் இருக்க வேண்டியது அவசியமாகின்றபடியால், வாழ்வின் உண்மையான அனைவர்க்கும் எட்டக் கூடியதாய்ச் செய்யும் மற்றொரு கிரகிக்குஞ் சக்தி மனித ஜீவிக்குள் இருத்தல் வேண்டும். பகுத்தறிவுக்கும், புலனறிவுக்கும் அப்பாற்பட்ட இப்பிரக்ஞையும், அகக் காட்சியின் ஆற்றலும் நபித்துவப் பிரக்ஞை அல்லது வெளிப்பாட்டின் பிரக்ஞை எனப்படுகின்றது. சந்தான விருத்தி செய்யும் ஆற்றல் எல்லா மனிதனிடத்தும் இருந்தபோதிலும் திருமண இன்பம் பற்றிய பிரக்ஞையும், இவ்வின்பம் துடிப்புள்ள ஆயத்தப்படுவதும் பருவ வயதெய்தியவர்க்கே சாத்தியம். அதேபோன்று, வெளிப் பாட்டின் பிரக்ஞை எனப்படும் இவ்வாற்றல் மனித இனத்திடம் இருப்பது, எல்லா நபரிடத்தும் இவ்வாற்றல் அத்தியாவசியமாய்த் தோன்றவேண்டுமென அர்த்தமாகாது. பருவ வயதினை அடையாதோருக்கு கல்வியின்பம் மர்மமானதாகவும், அறிந்திராத உணர்வாகவும் இருப்பது போன்று வெளிப்பாட்டின் பிரக்ஞை அப்பிரக்ஞையைப் பெற்றிராதோருக்கு மர்மமான பிரக்ஞையாகவும், அறியாத வகையினதான பிரக்ஞையாகவும் தோன்றும்.

தன் புனித சட்டத்தின் (சரீஅத்) வெளிப்பாடு பற்றியும் மனித அறிவு இதனை விளங்கிக் கொள்ளும் ஆற்றலற்றது என்பது

பற்றியும் இறைவன் பின்வரும் திருவசனங்களில் குறிப்பிடுகிறான்: ''நாம் உமக்கு வஹி அனுப்பி வைத்துள்ளோம், நூஹுவுக்கும் அவருக்குப் பின்னான நபிமாருக்கும் வஹியனுப்பியதுபோல; இப்றாஹீமுக்கும், இஸ்மாயிலுக்கும், இஸ்ஹாக்குக்கும், யாக்கூபுக்கும் அவர்களின் சந்ததியினருக்கும் , ஈஸாவுக்கும், ஐயூபுக்கும், யூனுஸுக்கும், ஹாரூனுக்கும், ஸுலைமானுக்கும் நாம் வஹியனுப்பி வைத்தோம்; தாவூதுக்கு நாம் ஸபூர் (வேதத்தை) வழங்கினோம். சில நபி மார்களைப் பற்றி ஏலவே உமக்கு நாம் குறிப்பிட்டுள்ளோம். மற்றோரைப்பற்றி உமக்கு நாம் அறிவிக்கவில்லை; மூஸாவுடன் அல்லாஹ் நேரடியாகப் பேசினான். நபிமார்கள் நற்செய்திகளையும் எச்சரிக்கையையும் வழங்கினர், நபிமாருக்குப் பின்னர் மனித இனம் அல்லாஹ்வுக்கு விரோதமாக வாதம் புரியாமல் இருக்கும் பொருட்டு'' (குர்ஆன், 4:163-165).[8]

தீர்க்க தரிசிகள்- தீர்க்கதரிசனம் தவறிழைக்க முடியாமை

தீர்க்கதரிசிகளின் தோற்றம் மேலே வரையறுத்துக் கூறப்பட்ட இறையறிவிப்பின் கோட்பாட்டை உறுதிப்படுத்துகின்றது. அல்லாஹ்வின் தீர்க்கதரிசிகள் என்போர் இறையறிவிப்பினதும் நபித்துவத்தினதும் அழைப்பைப் பிரச்சாரஞ்செய்த மனிதர்களாவர். அவர்கள் அவ்வழைப்புக்கான திட்டவட்டமான அத்தாட்சிகளையும் கொணர்ந்தனர். அவர்கள் மக்கள் மத்தியில் அல்லாஹ்வுடைய மார்க்கத்தின் அடிப்படைகளைப் பரப்பி அவை எல்லா மனிதர்களுக்கும் கிடைக்கும்படி செய்தனர். இன்பத்தை உத்தரவாதஞ் செய்யும் அதே புனிதசட்டம் தான் இவ்வடிப்படைகள்.

வரலாற்றுக்காலங்கள் அனைத்தினூடும் நபித்துவ ஆற்றல் பெற்றோர் இறையறிவிப்பைக் கொணர்ந்தோர், ஒரு சில மனிதர்களே. மதப்பிரச்சாரப் பணியைத் தனது நபிமார்களின் தோள்களில் சுமத்தியதன் மூலம் உயரிறைவன் ஏனைய மனித இனத்துக்கான வழிகாட்டலைச் சம்பூரணப்படுத்தி வைத்தான். எனவேதான் அல்லாஹ்வின் தீர்க்கதரிசி தவறிழைக்க

முடியாதவராக இருப்பது அவசியமாகின்றது. இறையறிவிப்பைப் பெறுவதிலும், அதனைப் பாதுகாப்பதிலும், அது மக்களை அடையச் செய்வதிலும் அவர் தவறிழைக்க முடியாதவராயிருத்தல் வேண்டும். அவர் பாபஞ் செய்பவராக இருக்க முடியாது (மப்ஸியாஹ்). வேத அறிவிப்பைப் பெறுவது, அதைப் பாதுகாப்பது, பிரச்சாரஞ் செய்வது என்பன மெய்வழிகாட்டலின் மூன்று அடிப்படைகளாகும். இருப்பில் தவறென்பதே அர்த்தமற்றது. மேலும், பாவம் செய்தலும் மத அழைப்புப் பிரச்சாரத்துக்கான உரிமை பாத்தியதையை எதிர்ப்பதும் ஒரு நபியைப் பொறுத்தவரை சாத்தியமல்ல. அவ்வாறு செய்வது மார்க்கத்துக்கு எதிரான அழைப்பாய் மாறிவிடும். அவை, மக்கள் அவர் மேல் வைத்துள்ள நம்பிக்கையையும், அழைப்பின் உறுதிப்பாட்டிலும் உண்மையிலும் அவர்கள் தங்கியிருப்பதனையும் அழித்துவிடும். இதன் விளைவாய் மத அழைப்பின் நோக்கத்தையே அழித்துவிடும்.

நபிமார்களின் தவறிழைக்க முடியாத பண்பு குறித்து உயரிறைவன் தன் திருமறையில் பின்வருமாறு கூறுகிறான்: '' ... இன்னும் நாம் அவர்களைத் தெரிவு செய்து அவர்களுக்கு நேர்வழி காட்டினோம்''... (குர்ஆன், 6: 87)[9] மேலும் ''(அவன்) மறைவானவற்றை அறிபவன்; அவன் தெரிந்தெடுத்த ஒவ்வொரு தூதுவரைத் தவிர எவருக்கும் அவன் தனது இரகசியத்தை வெளியாக்கவில்லை. அப்புறம் அவருக்கு முன்னால் ஒரு காவலரையும் அவரின் பின்னால் ஒரு காவலரையும் அவன் போகச் செய்கிறான், அவர்கள் தங்கள் இறைவனின் தூதை மக்களுக்கு உண்மையாக அறிவித்து விட்டார்களென்பதை அவன் அறிந்து கொள்ளும் பொருட்டு''... (குர்ஆன், 72 26-28).[10]

தீர்க்கதரிசிகளும் அருளப்பட்ட மதமும்

அல்லாஹ்வின் நபிமார்கள் இறையறிவிப்பின் மூலம் இறைவனிடமிருந்து ஒரு செய்தியாகப்பெற்று மனித இனத்துக்கு அறிவித்ததே மதம் (தீன்)2, அதாவது, மனிதனது உண்மையான

இன்பத்தை உத்தரவாதஞ் செய்யும் வாழ்க்கை வழியும், மனிதக் கடமைகளுமாகும்.

அருளப்பட்ட வேதம் பொதுவாக இருபகுதிகளைக் கொண்டது: ஒன்று கோட்பாடு, மற்றது நடைமுறை. அருளப்பட்ட மதத்தின் கோட்பாடு அல்லது சித்தாந்தப்பகுதி மனிதன் தன் வாழ்வின் அடிப்படைகளை உருவாக்கிக் கொள்வதற்கு தேவையானவை சம்பந்தமான கொள்கை களையும், கண்ணோட்டங்களையும் கொண்டது. ஏகத்துவம் (தவ்ஹீத்) நபித்துவம் (நுபுவ்வத்), மீண்டும் உயிர்ப்பிக்கப்படல் (மஆத்) ஆகிய மூன்று அகிலக் கொள்கைகளை அது கொண்டுள்ளது. இக்கொள்கைகள் ஏதேனும் ஒன்றில் ஒழுங்கீனம் காணப்படின் மதத்தைப் பின்பற்றுவோர் இருக்க மாட்டார்.

அருளப்பட்ட மதத்தின் நடைமுறைப் பகுதி இறைவன் முன்னாலும் மனித சமுதாயத்தின் முன்னாலும் மனிதனுக்குள்ள கடமைகளை உள்ளடக்கிய தார்மீக, நடைமுறைக் கட்டளைகளின் தொகுதியாகும். எனவேதான் பல்வேறு புனித சட்டங்களில் மனிதனுக்காகக் கட்டளையிடப்பட்டுள்ள இரண்டாம் பட்சக் கடமைகள் இருவகைகளாகின்றன: நல்லொழுக்கம் (அஹ்லாக்), செயல்கள் (அமல்). தெய்வீகத்துடன் தொடர்புடைய நல்லொழுக்கங்களும், நற்செயல்களும் இருவகையின. அவையாவன ஒன்று, இறை நம்பிக்கையின் தன்மை, நேர்மை இறைவனைச் சரணடைதல் திருப்தி, பணிவு; இரண்டாவது, அன்றாடத் தொழுகை, நோன்பு, தியாகம் (வணக்கச் செயல்கள் எனப்படும் இவை இறைவன் சந்நிதானத்தில் மனிதனது பணிவையும், அடிமைத்தனத்தையும் குறிக்கும்). மனிதசமுதாயத்துடன் தொடர்புடைய நல்லொழுக்கமும், செயல்களும் கூட இருவகையினவாம். இவையாவன: ஒன்று, பிறரை நேசித்தல், பிறர் நலம்வாழ விரும்புதல், நீதி, தாராள மனப்பான்மை; இரண்டாவது சமூக உறவை வளர்க்கும் கடமை, வர்த்தகம் பண்டப்பரிவர்த்தனை இத்தியாதி.

கவனத்திற்குரிய மற்றொரு விடயம், மனிதஜீவிகள் படிப்படியாகப் பூர்ணத்துவத்தை எய்துவது நோக்கி நெறிப் படுத்தப்படுவதாகும். மனித சமுதாயம் காலப்போக்கில் அதிக முழுமையடைவதால் இவற்றுக்கு சமாந்தரமான வளர்ச்சி இறைவனால் அருளப்பட்ட சட்டங்களிலும் தோன்றுவதனைக் காணல் வேண்டும்.[12] திருமறை இப்படிமுறைச் வளர்ச்சியை உறுதிப்படுத்துகின்றது. பகுத்தறிவும் இதனைக் கண்டுபிடித்துள்ளது. ஒவ்வொரு தெய்வீக சட்டமும் (ஷரீஅத்) உண்மையில் முன்னைய தெய்வீகச் சட்டத்தைவிடவும் அதிக முழுமை வாய்ந்ததெனத் திருமறை வசனங்களிலிருந்து முடிவுசெய்யலாம். உதாரணமாகப் பின்வரும் வசனத்தில் அவன் கூறுகிறான்: ''உண்மையைக் கொண்டுள்ள இவ்வேதத்தையும், நாம் தான் உம்மீது அருளினோம் இது தனக்கு முன்னுள்ள வேதங்களையும், உண்மையாக்கி வைக்கின்ற அன்றி அவைகளைப் பாதுகாப்பதாகவுமிருக்கிறது'' (குர்ஆன், 5 48)[13]

உண்மையாக விஞ்ஞான அறிவு உறுதிப்படுத்துவதுபோல, இவ்வுலகில் மனித சமுதாயத்தின் வாழ்வு நிலையானதல்ல வென்றும், மனிதனது வளர்ச்சி முடிவற்றதல்ல வென்றும் திருமறை கூறுகின்றது. இதன் விளைவாய், சிந்தாந்தத்தினதும் நடைமுறையினதும் கண்ணோட்டத்தில் மனிதனது கடமைகளை ஆளும் பொதுக் கொள்கைகளும் குறிப்பிட்டவொரு கட்டத்தில் நின்றுவிட வேண்டியது அவசியம். எனவே சிந்தாந்தத்தைப் பூரணப்படுத்தி வைப்பதிலும், நடைமுறைச் சட்டவிதிகளை விரிவாக்கம் செய்வதிலும் வளர்ச்சியின் இறுதிக் கட்டத்தையடைந்தவுடன் தீர்க்கதரிசனமும், ஷரீஅத்தும் ஒரு நாள் முடிவடைந்துவிடும். எனவேதான் (முஹம்மதின் மார்க்கம்) இஸ்லாம், இறைவனால் அருளப்பட்ட மார்க்கங்களில் இறுதியானதும் பூரணத்துவமடைந்ததுமாகும் என்பதைத் தெளிவு படுத்துவதற்காக வேண்டி திருக்குர்ஆன் தன்னை மாற்றமுடியாத (நஸ்க்) புனித நூலாகவும், நபி முஹம்மதை ''நபிமார்களின் முத்திரை'' (காத்தம் அல்-அன்பியா) யாகவும் அறிமுகப்படுத்துவதோடு இஸ்லாத்தை அனைத்து மார்க்க

கடமைகளையும் அரவணைத்த மதமாகவும் காண்கிறது. அவன் கூறுகிறான்: '' இதற்கு முன்னும் சரி பின்னும் சரி உண்மைக்கு மாறான யாதொரு விஷயமும் இதனை அணுகாது ''. . (குர்ஆன், 41-42)[14] மேலும் '' முஹம்மத் உங்கள் மத்தியில் எந்த மனிதனதும் தந்தையல்ல; ஆனால் அவர் அல்லாஹ்வின் தூதரும் நபிமார்களின் முத்திரையுமாவார்'' (குர்ஆன்,33:40)[15] இன்னும் (நபியே!) ஒவ்வொரு விஷயத்தையும் தெளிவாக விவரிக்கக் கூடிய இவ்வேதத்தை நாம் தாம் உம்மீது இறக்கி இருக்கிறோம். . . . (குர்ஆன், 16:89)[16]

நபிமார்களும் இறையறிவிப்பின் அத்தாட்சியும் நபித்துவமும்

இறையறிவிப்பும் நபித்துவமும் பற்றிய பிரச்சினையை விசாரணை செய்த நவீன அறிஞர்கள் பலர் அவற்றையும் அவைசார்ந்த கேள்விகளையும் சமூக உளவியற் கொள்கைகளின் மூலம் விளக்குவதற்கு எத்தனித்துள்ளனர். அல்லாஹ்வின் நபிமார்கள் என்போர் பரிசுத்தத் தன்மையும், மனோதிடமும், மானுடத்தின் மீது பாசமும் அல்லது அன்பும் கொண்ட மனிதர்களாவர் என அவர்கள் கூறுகின்றனர். மனித இனத்தின் ஆன்மீக, லௌகீக முன்னேற்றத்துக்கும் சீர்குலைவுற்ற சமூகங்களின் சீர்திருத்தத்துக்குமாக வேண்டி சட்டதிட்டங்களை உருவாக்கி அவற்றை ஏற்றுக்கொள்ளுமாறு அவர்கள் மனுக்குலத்துக்கு அழைப்பு விடுத்தனர்; அக்கால மக்கள் மனித அறிவின் தர்க்க நியாயத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலையில் இராதபடியால் தம் போதனைகளுக்கு மக்களைக் கீழ்ப்படியச் செய்வதற்காக வேண்டி இத்தீர்க்கதரிசிகள் தம்சிந்தனைகளை வேறோர் உலகிலிருந்து வந்ததென உரிமை கொண்டாடினரென்பது இந் நவீன அறிஞர்களது வாதம். ஒவ்வொரு தீர்க்கதரிசியும் தம் தூய ஆன்மாவைப் பரிசுத்த ஆவி என்றனராம்: இவ்வுலகுக்கு அப்பாற்பட்ட ஓர் இடத்திலிருந்து அவர்கள் உரிமை கொண்டாடிய போதனைகள் ''இறையறிவிப்பு'' என்றும் ''தீர்க்கதரிசனம்'' என்றும் அழைக்கப்படுகின்றதாம்: இப்போதனைகளால் விளைந்தவையே '' அருளப்பட்ட ஷரீஅத் '' என்பதாம்: இப்போதனைகளும் கடமைகளும் எழுத்தில் பதியப்பட்டதே '' இறைவனால் அருளப்பட்ட நூல்'' எனப்படுகின்றதாம்.

அருளப்பட்ட வேதநூல்களையும், விசேடமாகத் திருக்குர்ஆனையும் நபிமார்களின் சரிதையையும் ஆழமாகவும் காய்தல் உவத்தல் இன்றியும் பார்ப்பவர்கள் இக்கருத்து பிழையானதென்பதில் எவ்வித ஐயமும் கொள்ளமாட்டார்கள். அல்லாஹ்வின் நபிமார்கள் அரசியல் மனிதர்கள் அல்லர்: அவர்கள் ''இறைவனின் மனிதர்கள்''; வாய்மையும் தூய்மையும் கொண்டவர்கள். அவர்கள் சைதன்யமாய் உணர்ந்தவைகளை கூட்டல் கழித்தலின்றி அறிவித்தனர். அவர்களது சொல்லுஞ் செயலும் ஒரேவிதமாயிருந்தன. அவர்கள் தம்மிடம் இருப்பதாக உரிமை கொண்டாடியது கண்ணுக்குத் தெரியாத சூட்சும உலகம் அவர்களுக்கருளிய மர்மமான பிரக்ஞையாகும். இவ்வாறு இம்மை மறுமை இரண்டிலும் மனிதனுக்கு நன்மையளிக்கக் கூடியதை இறைவனிடமிருந்தே அறிந்து அதனை அவர்கள் மனித இனத்தவர் மத்தியில் பரப்பினர்.

நபித்துவ அழைப்பை அறிந்து உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வேண்டி அத்தாட்சியும், திருஷ்டாந்தமும் தேவையாகின்றது. நபியால் கொணரப்பட்ட ஷரீஅத் பகுத்தறிவுக்குகந்ததாயிருக்கின்றதென்ற ஒரே உண்மை நபித்துவ அழைப்பின் உண்மையைத் தீர்மானிப்பதற்குப் போதுமானதன்று. தம்மை நபியென்று கூறும் ஒரு மனிதர் தமது ஷரீஅத்தின் உண்மையைக் கொண்டாடுவதோடு, இறை அறிவிப்பினூடு நபித்துவத்தினூடு இவ்வுலகுக்கு அப்பாற்பட்ட ஓர் இடத்துடன் தமக்குத் தொடர்புள்ளதாகவும், எனவே சத்தியத்தைப் பிரச்சாரம் செய்யும் பணி இறைவனால் தமக்கருளப்பட்டுள்ளதாகவும் உரிமை கொண்டாடுகிறார். இவ்வுரிமைப் பாத்தியதைக்கும் அத்தாட்சி தேவைப்படுகிறது. எனவேதான் (புனிதத் திருமறை எமக்கறிவிப்பது போன்று) சாதாரண மக்கள் தங்களது சாதாரண மனப்பான்மை காரணமாக உண்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, எப்பொழுதும் அற்புதங்களை எதிர்பார்த்ததனர்.

சாதாரணமான, சரியான இத்தர்க்க நியாயத்தின் அர்த்தம் நபி உரிமை கொண்டாடும் இறையறிவிப்பு அவரைப் போன்ற ஏனைய மனிதர்களிடம் காணப்பட முடியாது என்பதே. தேவை

முஹம்மதின் நபித்துவம்

ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்)[20] இறைவனின் இறுதி நபியாவார்கள். அவர்கள் ஒரு வேதநூலையும், ஷரீஅத்தையும் கொண்டுள்ளார்கள். அவற்றை முஸ்லிம்கள் நம்புகின்றனர். ஹிஜ்ரா ஆண்டு ஆரம்பமாவதற்கு ஐம்பத்திமூன்று வருடங்களுக்கு முன் ஹிஜாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த மக்காவில், அரபுக் குடும்பங்களினால் பெரிதும் மதிக்கப்பட்ட குறைஷி வம்சத்தில் பனூஹாஸிம் குடும்பத்தில் பிறந்தார்கள். அவர்களின் தந்தை அப்துல்லாஹ், தாயார் ஆமினா, பிள்ளைப் பிராயத்திலேயே பெற்றோரையிழந்தார்கள். தந்தை வழிப் பாட்டனாரான அப்துல் முத்தலிபின் பராமரிப்பிலிருந்தார்கள். அப்துல் முத்தலிப் காலமாகவே நபிகளாரின் பெரிய தந்தையார்கள் அவர்களைப் பொறுப்பேற்றார். பெரிய தந்தையின் இல்லத்தில் பெருமானார் வளர்ந்தார்கள். பருவ வயதை எய்து முன்னரே பெரியதந்தையுடன் சேர்ந்து வியாபாரிகளின் கூட்டத்தோடு பிரயாணங்கள் மேற்கொண்டார்கள்.

பெருமானார் பள்ளிப்படிப்பு பெறவில்லை. எனவே எழுதப் படிக்கத் தெரிந்திருக்கவில்லை. எனினும் பக்குவ வயதைடைந்ததும் ஞானம் மிக்கவராகவும், இரக்கசிந்தை படைத்தவராகவும், நம்பிக்கைக்குரியவராகவும் புகழ் பெற்றார்கள். அவர்களது விவேகம், நம்பிக்கைக்குரிய தன்மை முதலியவை காரணமாக அவர்களைக் குறைஷிவம்சத்தைச் சேர்ந்த ஒரு பிரபல செல்வச் சீமாட்டியார் தமது உடைமைகளின் பாதுகாவலராக நியமித்து அவர்களிடம் தமது வர்த்தகப் பொறுப்பை ஒப்படைக்கின்றார்.

அவரது வர்த்தகப்பொருட்களுடன் பெருமானார் ஒருமுறை டமாஸ்கஸ் செல்கிறார்கள். தங்களின் திறமை காரணமாக பெரும் லாபம் ஈட்டி வருகிறார்கள். அதிக நாட்கள் செல்வதற்குள் அப்பெண்மணி அவர்களின் மனைவியாராக விரும்புகிறார். பெருமானார் அதற்குச் சம்மதிக்கவே திருமணம் நடந்தேறுகிறது. அப்பொழுது பெருமானாரின் வயது

இருபத்தைந்து. நாற்பது வயதாகும்வரை தம் மனைவியாரின் சொத்துக்களை நிர்வகித்துவருகின்றார்கள். மதி நுட்பம், நம்பிக்கைக்குப் பாத்திரமாகும் சீரிய பண்பு முதலியவை காரணமாக அவர்களின் புகழ் பரவுகின்றது. அக்கால சிலை வணக்கம் ஹிஜாஸ் பகுதியைச் சேர்ந்த அரபிகளின் பொதுவான மத அனுட்டானமாயிருந்த போதிலும் பெருமானார் சிலைகளை வணங்க மறுத்து விடுகிறார்கள். இருந்திருந்து அவர்கள் ஏகாந்தம் (கல்வாஹ்) நாடினார்களா. ஒதுக்கிடஞ் சென்று இறைவனைத் தியானிக்கவும், அவனுடன் இரகசியமாக உரையாடவும் செய்தார்கள்.

நாற்பது வயதில், மக்காவுக்கருவே திஹாமா மலைப் பிராந்தியத்தில் உள்ள ஹிராக்குகையில் தியானத்திலிருக்கும் போது, இறைவனின் நபியாகத் தெரிவு செய்யப்பட்டு புதிய மார்க்கத்தைப் பிராச்சாரஞ் செய்யும் தூது அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் திருமறையின் முதல் சூரா (''இரத்தக்கட்டி'' (சூரா அலக்)) அவருக்கு இறக்கிவைக்கப்பட்டது. அன்றைய தினம் அவர்கள் வீடு திரும்பு கையில் வழியில் அலீ இப்னு அபூதாலிபைச் சந்திக்கின்றார். நடந்த சம்பவத்தை கேள்வியுற்ற அலீ இப்னு அபூதாலிப் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்கிறார். பெருமானார் வீட்டையடைந்ததும் தம் மனைவியாரிடம் இறையறிவிப்பு பற்றிக் குறிப்பிடுகின்றார்கள். அப்பிராட்டியாரும் இஸ்லாத்தைத் தழுவுகின்றார்.

இறைவனிடமிருந்து வந்த தூதை மக்களுக்கு அறிவித்து முதன் முறையாக இஸ்லாத்தின் பால் மக்களையழைத்த போது பெருமானார் இன்னல்களையும் எதிர்ப்புகளையும் எதிர் நோக்க வேண்டியிருந்தது. எனவே சிறிதுகாலம் மதப்பிரச்சாரத்தை இரகசியமாக மேற்கொள்ள வேண்டியிருந்தது. தங்களின் நெருங்கிய உறவினர்களை இஸ்லாத்தின் பால் அழைக்கும் படி இறைவனிடமிருந்து மீண்டும் கட்டளை வருகிறது. எனினும் அலீ இப்னு அபுதாலிபைத் தவிர எவரும் அவர்களது அழைப்புக்குச் செவிமடுக்கவில்லை. அலீயோ ஏலவே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தார். (ஆனால்

நபிகுடும்பத்தவரிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்களின் படியும், அபூ தாலிபால் எழுதப்பட்ட கவிதைகள் மூலமாகவும், அபூதாலிப் இஸ்லாத்தை ஏற்றிருந்தாரென ஷீஆக்கள் நம்புகின்றனர்: என்ற போதிலும் அவர் பெருமானாருக்குப் பாதுகாப்பளிக்கவேண்டி, குறைஷிகள் மீது தமக்கிருந்த வெளிப்படையான அதிகாரத்தை பயன்படுத்தும் நோக்குடன் தம் மத நம்பிக்கையை மறைத்து வைத்திருந்தாரென்பது ஷீஆக்களின் நம்பிக்கை.)

இக்காலப் பகுதிக்குப் பின்னர் இறையறிவிப்பின்படி நபிகளார் தம்தூதைப் பகிரங்கமாகப் பிரச்சாரஞ் செய்யத் தொடங்கினார்கள். பகிரங்கப் பிரச்சாரம் தொடங்கியதும். பெருமானாருக்கும்புதிதாக இஸ்லாத்தைத் தழுவியோருக்கும் மக்காவாசிகள் சொல்லினால் இன்னல்களை விளைவித்தார்கள். குறைஷிகளின் கொடுமை அதிகரித்தப்படியால் முஸ்லிம்களின் கோஷ்டியொன்று வீடுகளையும் உடைமைகளையும் துறந்து அபிஸீனியாவுக்கு இடம் பெயர்ந்து சென்றது. நபிகள் பெருமானும் அவர்களது பெரிய தந்தை அபூதாலிபும் பனூ ஹாஸிம் குடும்பத்தைச் சேர்ந்த தம் உறவினர்களுடன் மூன்றாண்டுகள், மக்காவின் பள்ளத்தாக் கொன்றில் உள்ள அரணான ‘‘அபூதாலிபின் கணவாய்’’ என்ற இடத்தில் அடைக்கலம் புகுந்திருந்தனர். அவர்களோடு யாரும் எத்தகைய தொடர்பும் வைத்துக்கொள்ளவில்லை. அவர்கள் அப்புகலிடத்திலிருந்து வெளிவர அஞ்சினர்.

மக்காவின் சிலைவணங்கிகள் பெருமானார் மீது அவதூறு பொழிந்தும், கல்லாலடித்தும் கொடுமைகள் புரிந்தபோதிலும், நபித்துவத் தூதைப் பெருமானார் விட்டுவிடும்படிச் செய்வதற்காக சில சந்தர்ப்பங்களில் அவர்கள் மீது இரக்கமாகவும் நடந்து கொண்டார்கள். பெருமானாரின் காலடியில் செல்வங்களையெல்லாம் வாரிக் கொணர்ந்து கொட்டவும், தலைமைப்பதவியையும் ஆட்சியதிகாரத்தையும் வழங்கவும் கூடத் தயாராயிருந்தார்கள். ஆனால் இவ்வுபாயங்கள் யாவும், மதப்பணியைத் தீவீரமாகத் தொடர்வதற்கான பெருமானாரின் திடசங்கற்பத்தையே மேலும்

உறுதிப்படுதின. ''செங்கதிரும் தண்மதியும் சேர்த்துக் கையில் தந்திடினும் எம்கொள்கை விடமாட்டோம்'' என உறுதியாக அறைந்தார்கள் நபிகள் (ஸல்).

நபித்துவத் தூதின் பத்தாவது ஆண்டளவில் பெருமானார் ''அபூதாலிபின் கணவாயை'' விட்டு வெளிப்பட்டபின், பெருமானாருக்கு பாதுகாப்பளித்து வந்த பெரிய தந்தையார் அபூதாலிபும், பெருமானாருக்குப் பெருந்துணையாய் இருந்து வந்த அன்பு மனைவியும் காலமாகின்றார்கள். அதன் பின்னர் பெருமானாரின் உயிருக்குப் பாதுகாப்பிருக்கவில்லை. தஞ்சம் புக இடமிருக்கவில்லை. இறுதியாக, நபிகளாரைத் தீர்த்துக் கட்டுவதற்காக இரகசியத் திட்டம் தீட்டுகின்றனர் மக்காவின் சிலை வணங்கிகள். ஒரு நாள் பெருமானாரின் இல்லத்தைச் சுற்றி வளைத்துக்கொள்கின்றனர். பெருமானாரைப்படுக்கையிலேயே துண்டமாய் வெட்டிப் போடுவது தான் அவர்களது திட்டம். ஆனால் தீயவரின் இவ்வஞ்சகச் சூழ்ச்சியை இறைவன் நபிகளாருக்கு அறிவித்து அங்கிருந்து வெளியேறி யத்ரிப் செல்லுமாறு கட்டளையிடுகிறான். பெருமானார் தங்களது படுக்கையில் அலீயை நித்திரைபுரியவிட்டு இறைவனின் பாதுகாப்புடன் இல்லத்தைவிட்டு வெளியேறி, பகைவர்களைத் தாண்டிச் சென்று மக்காவுக்கருகே ஒரு குகையில் அடைக்கலம் புகுகின்றார்கள். விரோதிகள் மூன்று நாட்களாகப் பெருமானாரைத் தேடியலைந்துவிட்டு நம்பிக்கையிழந்தபோது பெருமானார் குகையிலிருந்து வெளிப்பட்டு மக்காவுக்குத் திரும்பி அங்கிருந்து யத்ரிப் பயணமானார்கள்.

யத்ரிப் மக்களின் தலைவர்கள் ஏலவே நபிகளாரின் தூதையேற்று அவர்களுக்கு விசுவாசப் பிரமாணஞ் செய்திருந்தபடியால் யத்ரிப் வாசிகள் அவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்ததோடு தங்களின் உயிர்களையும் உடைமைகளையும் பெருமானாருக்காக அர்ப்பணிக்கத் தயாராயிருந்தார்கள். யத்தரிபில் பெருமானார் முதன் முறையாக ஒரு சிறிய இஸ்லாமிய சமூகத்தை உருவாக்கினார்கள். நகரைச் சுற்றிலுமிருந்த யூதக் கூட்டதினரோடும், அப்பகுதியைச் சேர்ந்த சக்திவாய்ந்த அரபுக் குழுக்களோடும் ஒப்பந்தங்களைச் செய்து